# 3 பரிமாண சுவிசேஷம்

## (The 3D Gospel)

### குற்ற உணர்வு, வெட்க உணர்வு மற்றும் அச்ச உணர்வுக் கலாச்சாரங்களிலே ஊழியம்



ஜேஸன் ஜோர்ஜஸ்
(Jayson Georges)

# 3 பரிமாண சுவிசேஷம்

**(The 3D Gospel)**

குற்ற உணர்வு, வெட்க உணர்வு மற்றும்
அச்ச உணர்வுக் கலாச்சாரங்களிலே ஊழியம்

ஜேஸன் ஜோர்ஜஸ்
(Jayson Georges)

Timē Press

# 3 பரிமாண சுவிசேஷம் நூலைப்பற்றிய அணிந்துரைகள்: [ஆங்கிலமூலம்]

"The 3D Gospel என்பது பயனுள்ளதும் நல்லதென சிபார்சுசெய்யப்பட்ட முன்னோடியுமாகும்"
**– தூதியல்: ஒரு சர்வதேச மீளாய்வு (Missiology: An International Review)**

இந்த நூலானது இதிலே குறிப்பிடப்படும் நிஜ அம்சங்களின் இயக்கநிலைகளை ஆய்வு செய்வதற்குத் தகுந்ததோர் ஆரம்பமாகும். மேலும், அவை சீரியஸாகக் கவனத்திற் கொள்ளப்படுமாயின், வெவ்வேறான உலகக்கண்ணோட்டங்களிலே பொதிந்துள்ள மக்களுக்கான சுவிசேஷப் பகிர்வினை மேம்படுத்தும்"
**– சுவிசேஷக தூதுப்பணி காலாண்டு சஞ்சிகை (Evangelical Missions Quarterly)**

"கிறிஸ்தவ செய்தியை எந்தக் கலாச்சாரத்துக்கும் ஏற்றதாகக் கட்டமைக்க முனையும் அனைவருக்கும் இது சிறப்புமிக்கதோர் வளமாகும்"
**– தெமிலியொஸ் (சுவிசேஷகக் கூட்டிணையம்) (Themelios (The Gospel Coalition))**

"அனுபவமிக்க தூதியலாளரான (Missiologist) ஜேஸன் ஜோர்ஜஸ் அவர்கள் The 3D Gospel எனும் அவரது நூலிலே இயேசுவின் சுவிசேஷமானது பரந்து வேறுபட்ட கலாச்சாரங்களுக்கு எப்படியாகப் பிரயோகமாகிறது என்பதைக் காட்டுகிறார்."
**– தெற்காசிய இறையியல் மீளாய்வு (Southeastern Theological Review)**

"The 3D Gospel எனும் இந்த நூல் குற்ற உணர்வு–அப்பாவித்தனம், அவமான உணர்வு–கனமேன்மை, மற்றும் அச்ச உணர்வு–வல்லமை ஆகிய கலாச்சாரங்களைக் கையாள்வதற்குச் சிறப்புமிக்கதோர் ஆவணமாகும். ஜேஸன் ஜோர்ஜஸின் ஆராய்ச்சியும், வேதாகம உள்ளறிவுகளும், இந்த மூன்று உலகநோக்குகளைப் பார்க்கும்படி பயன்படுத்தும் வில்லைகளும், என்போன்ற தேசங்கள் மற்றும் இனங்களோடு பணியாற்றுகிறவர்களுக்கு மிகவும் பெறுமதிமிக்கதாகும்."
**– ஜெ.:ப்ரி ஏ ஜில் (Jeffrey A. Gill (D.Min., Ph.D.))**
**கிரேஸ் இறையியல் மடத்தின் (Grace Theological Seminary) பீடாதிபதியும், உப தலைவரும்.**

"முக்கிய கலாச்சாரக் கொள்கைகளை The 3D Gospel நூலானது அணுகக் கூடியதும் இலகுவாகக் காணக்கூடியதுமாக ஆக்கியுள்ளது. அகிலக் கலாச்சாரங்களின் சிக்கற்தன்மை மற்றும் கிறிஸ்தவத் தூதுப்பணியிலே அவற்றின் தாற்பரியங்கள் ஆகியவற்றை மக்கள் பற்றிக்கொள்ள உதவியிருப்பதற்காக ஜேஸனுக்கு நன்றிகள் உரித்தாகட்டும்."

**_ ஜூடித் லிங்கென்ஃபெல்டர் (Judith Lingenfelter (Ph.D.))**
**பயோலா பல்கலைக்கழக பன்முகக்கலாச்சாரக் கற்கைகள் பிரிவின் (Intercultural Studies, Biola University) பேராசிரியர்**

"சட்டநியமம் (legalism), பெயர்ப்போலி (nominalism), சமரசப்போக்கு (syncretism) ஆகியவற்றை விளைவிக்கிறதான சுவிசேஷக மாதிரிகளால் களைத்துப்போனீர்களா? ஜேஸன் ஜோர்ஜஸ் என்பவரின் "The 3D Gospel" ஆனது அவற்றுக்குச் சில திடமான தீர்வுகளை வழங்கிடும்.
**ரொம் ஸ்டெஃபான் (Tom Steffen (Ph.D.))**
**– முன்னாள் பேராசிரியர், பயோலா பல்கலைக்கழகம்**

"தற்போது The 3D Gospel கிடைக்கத்தக்கதாக உள்ளதையிட்டு மகிழ்வடைகிறேன். வெவ்வேறு கலாச்சாரங்களும் உலகநோக்குகளும் எமது வேதாகம வாசிப்புக்கள் மற்றும் தூதுப்பணி உபாயங்களை விருத்திசெய்தல் ஆகியவற்றிலே எவ்வாறாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதைக் காண விரும்பும் கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு நடைமுறையான வழிகாட்டியாகும்."
**– ஜக்ஸன் வூ (Jackson Wu (Ph.D.))**
**ஆசியாவின் ஒரு குருமட ஆசிரியர், "Saving God's Face" எனும் நூலின் ஆசிரியர்**

"பல்கலாச்சாரத்து மக்களை நேசிக்கும் கிறிஸ்தவர்கள் அனைவருமே ஜேஸன் ஜோர்ஜஸுடைய நூலைக் கட்டாயமாக வாசிக்கவேண்டும். பிரதான கலாச்சாரக் கட்டமைப்புக்கள் பற்றிய சுருக்கமான ஒப்படையாக The 3D Gospel நூல் உள்ளது. அவற்றின் மீட்புக்கான ஒத்திசைவானதோர் ஒப்படையினை ஆசிரியர் முன்மொழிகிறார். இது இந்த நூலைப் பயனுள்ளதாகவும் தகவலறிவாகவும் ஆக்குகிறதாய் உள்ளது"
**– ஃப்ளோறன்ட் வறக் (Florent Varak)**
**பிரான்ஸ் லியோனிலே (Lyon) போதகர், ஜெனீவா வேதாகமக் கற்கைநிறுவனத்தின் பேராசிரியர்**

"ஜேஸனின் உள்ளறிவுகள் அவரது பலவருடகாலத்து அனுபவங்கள், அதிகதிகமான வேதாகமக்கற்கை மற்றும் மானிடவியல் கற்கை ஆகியவற்றால் பிறந்ததாகும். The 3D Gospel நூலானது தனது சர்வதேச அயலவனைச் சந்திக்கிற பொதுநிலையினருக்கும், கடல்கடந்த தேசங்களில் பணியாற்றும் நீண்டகாலத் தூதுப்பணியாளர்களுக்கும், மேலும் இந்தத் தரப்புகளுக்கு இடைப்பட்ட அனைவருக்கும் உதவியாக இருக்கும்."
**– கிறான்ற் ஹேய்னஸ் (Grant Haynes)**
**அகிலாண்ட தூதுப்பணிகள் முன்னரண் (Global Frontier Missions) அமைப்பின் இயக்குனர்**

"நவீன, நவீனத்துக்குப் பிந்திய, மேற்கத்தேய, கிழக்கத்தேய, குடியேற்ற, புலம்பெயர் போன்றதான பல்வேறு உலகங்கள் முட்டிமோதிக்கொண்டிருக்க,

The 3D Gospel ஆனது சுவிசேஷத்தை வழங்கும்போது எமது பார்வை வில்லைகளுக்கு வேண்டியதான "நிறத் திருத்தங்களை" வழங்குகிறதாய் உள்ளது. உங்களது சொந்தப் பின்புலத்துக்கு வெளியே சுவிசேஷத்தைப் பகிரும்போது ஏதாவது அங்கே குறைவுபடுகிறதா எனும் திகைப்பு உங்களுக்கு இருக்குமாயின், The 3D Gospel நூலை வாசியுங்கள் – இதைப்போல வேறோரு துணைவளம் கிடையாது எனலாம்... சபையினதும் தூதுப்பணியினதும் அடுத்த பரம்பரைக்கு இது அத்தியாவசியமானதோர் வாசிப்பாகும்."

**– டேவிட் பார்க் (David Park)**

**போதகர், அடுத்த பரம். ஆசிய சபையின் (Next Gener.Asian Church) ஸ்தாபகர்**

"மத்திய ஆசிய மற்றும் கிழக்காசிய மக்களோடு பணியாற்றியவன் என்ற ரீதியிலே, ஜேஸன் ஜோர்ஜஸுடைய உள்ளறிவுகள் மிகவும் பயனுள்ளதாய் இருப்பதை நான் காண்கிறேன். தெளிவாக எழுதப்பெற்றதும், நடைமுறையானதுமான இந்த நூல் மக்ளுக்குத் தமது கலாச்சாரக் கண்செதிழ்களை அகற்றிப்போடவும், பிறரைப் புரிந்துகொள்ளவும், மிகவும் வினைத்திறனுடன் பணியாற்றவும் உதவுகிறதாக உள்ளது."

**– கிற்ரி பேர்கஸன் (Kitty Purgason) (Ph.D.)**

**பயோலா பல்கலைக்கழகத்தின் குக் பாடசாலையின் (Cook School of) ICS இலே பேராசிரியர்**

பலநூற்றாண்டு காலமாக சகல கலாச்சாரங்களுக்கும் பின்புலங்களுக்குமான சுவிசேஷமானது மேற்கத்தைய இறையியலின் ஏக பரிமாண அணுகுமுறையினால் துண்டாடப்பட்டிருந்தமை துரதிஷ்டமானதே. The 3D Gospel நூலானது வேதாகமத்தினதும் எமது உலகத்தினதும் கலாச்சாரங்கள் பற்றிய விளிப்பறிவை எமக்குத் தருகிறது. வினைத்திறனுள்ள கலப்புக்கலாச்சாரப் (cross-cultural) பணிக்கு முட்டுக்கட்டையாக இருந்த கலாச்சாரக் கண்மறைப்புக்களை இனங்கண்டு, அவைகளைத் தவிர்ப்பதற்கான அவசியமானதும் அத்திவாரமானதுமான வளமாக இது உள்ளது."

**– வண. மாட்டின் முன்யாஓ (Ph.D. மாணவன்)**

**கென்யாவிலே போதகரும் இறையியல் ஆசிரியரும்**

# கலாச்சாரப் பரிசீலனை

உங்களது கற்கை நலனுக்காக, உங்களது குழுவின் பிரதான கலாச்சார வகையை அறிந்துகொள்ளும்படிக்கு (அதாவது குற்ற உணர்வுசார்ந்ததா, அவமான உணர்வு சார்ந்ததா அல்லது அச்ச உணர்வு சார்ந்ததா) முதலாவதாக கலாச்சாரப் பரிசீலனை (The Culture Test©) எனும் ஒன்லைன் மதிப்பாய்வினைப் பூர்த்தி செய்யவும். இலவச பரிசீலனையாகிய இதனைப் பூர்த்தி செய்வதற்கு ஆக 5 நிமிடங்களே எடுக்கும், அத்துடன் அதன் பெறுபேறுகள் உடனடியாகவே பெறப்படும். இதற்காகத் தயவுசெய்து TheCultureTest.com இணையத்தளத்துக்கு விஜயம் செய்யவும்.

**3 பரிமாண சுவிசேஷம் (The 3D Gospel)**
குற்ற உணர்வு, வெட்க உணர்வு மற்றும் அச்ச உணர்வுக் கலாச்சாரங்களிலே ஊழியம்

© 2016 ஜேஸன் ஜோர்ஜஸ் (Jayson Georges)

ஆங்கில நூலானது ரைம் பதிப்பகத்தால் (Time Press) 2016 இல் பதிப்பிக்கப்பட்டது.

*சகல உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.* எழுத்தாசிரியரிடமிருந்து எழுத்துமூலமான அனுமதி பெற்றிருந்தாலே ஒழிய மற்றப்படி இந்த நூலின் எந்த ஒரு பகுதியும் போட்டோப்பிரதி, மின்னஞ்சல் போன்றதான எந்த ஒரு வடிவத்திலாவது முறையினாலாவது மீளுற்பத்தி செய்யப்படுவதோ அல்லது கடத்தப்படுவதோ கூடாது. மேற்கோள் காட்டுவதற்கான பாவனை மாத்திரமே இதற்குப் புறநடையாகும். தயவுசெய்து info@HonorShame.com இனைத் தொடர்பு கொள்ளவும்.

ஆரம்பத்தில் 2014 இலே பதிப்பிக்கப்பட்டது. 2016 இலே மீளாய்வுசெய்யப்பட்டு தரவுயர்த்தப்பட்டது.
ISBN-13: 978-0692338018
ISBN-10: 0692338012

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பிலே சுட்டிக்காட்டப்பட்டாலே ஒழிய மற்றப்படி வேதாகம மேற்கோள்கள் அனைத்துமே இந்திய வேதாகம சங்கத்தினரின் பதிப்பான பரிசுத்த வேதாகமத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

பதிப்பின்போது, சகல கட்டுரைகளும் புளொக் பதிவுகளும், இந்தநூலில் மேற்கோள் காட்டப்பட்ட காணொளிகளும் ஒன்லைனிலே இலவசமாகக் கிடைக்கும். மேற்கோள் என்பது அனைத்து எழுத்தாவணங்களையும் அங்கீகரிப்பதாக அர்த்தம் பெறாது, மாறாக மேலதிக கற்கைக்குப் பொருத்தமானவை என்பதே.

மொத்தக் கொள்வனவுகளுக்கு 50% விலைக்கழிவு உள்ளது – 50 பிரதிகள் $225 அமெரிக்க டாலர்கள். www.HonorShame.com/3DGospel எனும் தளத்தில் ஒன்லைனிலே உங்கள் கொள்வனவுக்கட்டளைகளைப் பதிவேற்றவும்

இந்த நூலானது Amazon.com இலே பின்வரும் மொழிகளிலும் கிடைக்கும்.
பிரெஞ்சு – French—*L'Evangile en 3D*
ஸ்பானியமொழி – Spanish—*El Evangelio en 3D*
ரஷ்யமொழி – Russian—*3D Evangeliye*
தமிழ் மொழி – Tamil – *3 பரிமாண சுவிசேஷம்*
[தமிழ் மொழிபெயர்ப்பு: பரமார்]

# உள்ளடக்கப் பட்டியல்


3 பரிமாண சுவிசேஷம் நூலைப்பற்றிய அணிந்துரைகள்:
(ஆங்கிலமூலம்)........................................................................1

கலாச்சாரப் பரிசீலனை........................................................................5

உள்ளடக்கப் பட்டியல்........................................................................7

தமிழ் மொழிபெயர்ப்பாளரின் அணிந்துரை........................................9

1. நிஜங்களைக் கண்டுகொள்ளுதல்................................................10

மூவகைக் கலாச்சாரங்கள்................................................................11

எபேசியர் நிருபத்திலே 3 பரிமாண சுவிசேஷம்..................................13

முழு வைரக்கல்லைப் பார்த்தல்.......................................................14

2. கலாச்சாரம்....................................................................................16

சமநிலையைப் பேணுதல்..................................................................16

குற்ற உணர்வு–அப்பாவித்தன்மை கலாச்சாரங்கள்...............................18

அவமான உணர்வு–கனமேன்மை கலாச்சாரங்கள்...............................21

அச்ச உணர்வு–வல்லமை கலாச்சாரங்கள்...........................................26

கலாச்சார வகைகளுக்கான காரணம்.................................................28

ஒவ்வொரு கலாச்சாரமும் மானிடத் தேவைகளை எப்படிச் சந்திக்கிறது....31

சமாந்தர அகிலாண்ட நிஜங்கள்.........................................................34

3. இறையியல்.....................................................................................36

இரட்சிப்பின் குற்ற உணர்வு–அப்பாவித்தனம் சம்பவக்கதை......................36

இரட்சிப்பின் அவமான உணர்வு – கனமேன்மை சம்பவக்கதை...............38

பிரதானமான அவமான உணர்வு – கனமேன்மை வசனங்கள்..................42

இரட்சிப்பின் அச்ச உணர்வு – வல்லமை சம்பவக்கதை.........................43

பிரதான அச்ச உணர்வு – வல்லமை வசனங்கள்.................................46

**ஏதேன் தோட்டமும் பாவமும்..........................................................47**

**பரிகாரபலியும் இயேசுவின் மரணமும்...............................................49**

மீட்கும்பொருள் கொள்கை (அச்சம்)...............................................50

திருப்திப்படுத்துதல் (அவமானம்)...................................................50

குற்றவியல் பிரதியீட்டுக்கொள்கை (குற்ற உணர்வு)..........................52

**ஒழுங்குபடுத்தப்பட்ட இறையியல் வகைகள்....................................53**

**4. ஊழியம்..........................................................................................56**

**இரட்சிப்புக்கான 3 பரிமாண திட்டம்..................................................57**

**இரட்சிப்பின் 3 பரிமாண கதை.........................................................59**

நீதிமன்ற மொழிநடைகள் (குற்ற உணர்வு).........................................59

சமூக மொழிநடைகள் (அவமானம்)...................................................60

போர் மொழிநடைகள் (அச்சம்).........................................................60

**பின்புலமயப்படுத்தப்பட்ட சாட்சிய வடிவங்கள்....................................61**

**சத்திய இடைப்படுதல்.......................................................................62**

**வல்லமை இடைப்படுதல்...................................................................64**

**சமூக இடைப்படுதல்.........................................................................66**

திரித்துவம்.....................................................................................67

சபை............................................................................................68

குடும்பம்.......................................................................................71

**5. முடிவாக.......................................................................................73**

**கலந்துரையாடல் மற்றும் சிந்தைப்பிரதிபலிப்புக் கேள்விகள்.........................75**

**கனமேன்மை & அவமானம் பற்றி மேலும் அதிகம் அறிந்திட.......................76**

**குறிப்புக்கள்.....................................................................................78**

# தமிழ் மொழிபெயர்ப்பாளரின் அணிந்துரை

ஜேஸன் ஜோர்ஜஸ் (Jayson Georges) என்பவர் குடும்பமாக மத்திய ஆசியாவிலே ஒன்பது வருடகாலமாகப் பணியாற்றி, சீஷராக்குதல், சபைநடுகை மற்றும் நுண்தொழில்முயற்சி விருத்தியாக்கம் போன்றவற்றிலே ஈடுபட்டுவந்தவர். அவர் எழுதிய The 3D Gospel எனும் ஒரு ஆங்கிலநூலை வாசித்தபோது அதனால் கவரப்பட்டவனாக, அதனைப் *பேழைப்புறா* வாசகர்களுக்கு ஒரு தொடராக மொழிபெயர்த்து வழங்க விரும்பி மின்னஞ்சலிலே அவரிடம் அனுமதி கேட்டபோது, மின்னஞ்சலிலே அனுமதி தந்தது மட்டுமன்றி அவரது நூலின் ஒரு மென்பிரதியையும் எனக்கு அனுப்பிவைத்தார். இந்த நூலானது சுவிசேஷக மற்றும் சீஷத்துவ ஊழியக் கண்ணோட்டங்களிலே எங்கள் எண்ணங்களைச் சவாலிடும் என்பதிலே ஐயமில்லை.

பரமார்
*பேழைப்புறா* சஞ்சிகையின் ஆசிரியர்

# 1

# நிஜங்களைக் கண்டுகொள்ளுதல்

குல்ஸெல் என்பவள் பல்கலைக்கழகத்திலே மாணவியாக இருந்தபோதே இயேசுவை நம்பி ஏற்றுக்கொண்ட ஒரு விசுவாசி. அவள் இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இருந்த செய்தியானது நேரடியானதுதான்: "உங்களது பாவங்கள் தேவனிடம் இருந்து உங்களைப் பிரித்துப்போடுகிறது; எனவே உங்களுக்குத் தகுந்த தண்டனை உண்டு. இயேசு உங்களது பாவங்களுக்காக மரித்தார். அவரில் நம்பிக்கை கொள்ளும்போது உங்களது பாவங்கள் மன்னிக்கப்படும்." அவளது விசுவாசம் நேர்மையானதும் நிஜமானதுமாகும். மத்திய ஆசியாவைச் சேர்ந்தவளான குல்ஸெல் தனது பாவங்கள் மன்னிக்கப்பெற்றவளாகக் கிறிஸ்துவிலே புதியவாழ்வினைச் சந்தோஷமாக அனுபவித்து வந்தாள். ஆனாலும், மன்னிப்பு முழுமையாகக் கையாள முடியாத பல தனித்துவமான சூழ்நிலைகளுக்கு அவள் முகங்கொடுத்துவந்தாள்.

ஒரு ஞாயிறு மாலைவேளையிலே, குல்ஸெல் நகரத்தில் இருந்து கிராமத்தில் இருந்த தனது தாயாரின் வீட்டுக்குத் திரும்பும்படியாக பயணச்செலவைப்பகிரும் ஷெயார்–டாக்ஸியிலே ஏறினாள். அதன் ஆண் சாரதியோடு மேலும் மூன்று ஆண் பயணிகளும் இருந்தனர். சிறிது தூரம் சென்றபின்பு அவளுடன் பேச்சுக்கொடுத்துவந்த அந்த ஆண் பயணிகள் அவளைத் தத்தமது வீடுகளுக்கு தேனீர் அருந்த வரும்படி அழைப்புவிடுத்து தத்தமது எண்ணங்கள் உத்தேசங்களையெல்லாம் அவளுக்குக் கூறிக்கொண்டு வந்தனர். இளம்பெண்ணான அவள் அவைகளால் வெகுவாகச் சங்கடப்பட்டு, தான் இறங்கும் இடம் எப்போது வருமென எதிர்பார்த்தவளாக நிலமையைச் சமாளித்துக்கொண்டு வந்தாள். அரைவாசித்தூரம் சென்றபின்பு அந்த ஆண்கள் ஒரு மதுக்கடையிலே வாகனத்தை நிறுத்தி சாராயம் குடித்தனர். போதையேறிய நிலைமையிலே திரும்பிய அவர்களைப் பார்த்த அவள், இப்போது அவர்கள் தனக்குச் சரீரகரீதியிலே தீங்கிழைக்கக்கூடிய நிலைமையில் இருப்பதை நிதானித்தறிந்தாள். அந்த வேளையிலே குல்ஸெலுடைய மாமா ஓருவர் அவரது வாகனத்திலே எதிர்த்தாற்போல வந்துகொண்டிருப்பதைக் கண்டாள். உடனே

பாதையிலே பாய்ந்து அவரை நிறுத்தி அதில் ஏறி, தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்குப் பதிலாக அவளோ அவரது வாகனம் கடந்து போகும் மட்டுக்கும் அவரது பார்வைக்குத் தன்னை மறைத்துக்கொண்டாள். தனது மாமா தன்னை அங்கே காண்பதை அவள் விரும்பவில்லை. அந்தக் கணத்திலே குல்ஸெலின் பிரதான நோக்கம் அங்கே அவள் நிற்பதை அவர் காணநேர்ந்தால் தனக்கு ஏற்படக்கூடிய அவமானத்தைத் தவிர்ப்பதும், தனது குடும்ப கௌரவத்தைப் பேணிக்கொள்வதுமாகவே இருந்தது.

சில வருடங்களின்பின்பு குல்ஸெலுடைய சகோதரன் மரித்துப்போனான். குடும்பத்திலே மூத்த மகன் என்ற அந்தஸ்தை வகித்த அவன் மரித்துப்போனதால், அவளது குடும்பம் அந்தத் துயர சம்பவத்தையிட்டு வெகுவாகக் கதறியழுதது. அவன் மரித்து சிலவாரங்கள் கழிந்தபின்பு, தனது சகோதரனைப் பற்றி அவளுக்கு தினந்தோறும் இருண்ட கனவுகள் தோன்ற ஆரம்பித்தன. அவள் நித்திரை கொள்ளும்போது அவளது சகோதரனின் சாயலில் உள்ள ஆவிகள் அவளை படுவேதனைப் படுத்தின. தனது இருண்ட கனவுகளைப் பற்றி குல்ஸெல் தனது குடும்பத்தினருக்குத் தெரிவித்தபோது, அந்த ஆவிகளைச் சாந்திப்படுத்துவதற்காக வழக்கப்படி அவளது சகோதரனின் கல்லறையில் இருந்து சிறிது ஊத்தையை உண்ணும்படி அவர்கள் கூறினார்கள். தனக்கு ஏற்படும் படுவேதனைகளில் இருந்து தப்பவும் சமாதானத்தைக் கண்டுகொள்ளவும் அந்த ஆவிமண்டலத்தை மேற்கொள்ளும் வல்லமையை அவள் வாஞ்சித்தாள்.

மெய்யாகவே பாவங்களில் இருந்து குல்ஸெல் மன்னிக்கப்பட்டிருந்தாலுங்கூட, அவளது குற்ற உணர்வுகளில் இருந்து மாத்திரமல்லாமல், அவளது அவமானம் மற்றும் அச்சம் ஆகியவற்றில் இருந்துங்கூட தேவனுடைய மீட்பினை அனுபவிக்க வேண்டியதான அவசியம் அவளுக்கு இருந்துள்ளது. பெரும்பாலான உலகின் அநேக கிறிஸ்தவர்களைப்போலவே, தேவனுடைய மன்னிப்பு, தேவனுடைய கனமேன்மை மற்றும் தேவனுடைய வல்லமை ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ஒரு முப்பரிமாண சுவிசேஷமானது வேண்டற்பாலதாகும்

# மூவகைக் கலாச்சாரங்கள்

மானிடக் கலாச்சாரங்களிலே பாவங்களைப்பற்றிய மூன்று வகையான பிரதியுத்தரங்களைக் கிறிஸ்தவத் தூதியலாளர்கள் (missiologists) இனங்கண்டுள்ளனர். யூஜின் நிடா (Eugene Nida) என்பவர் கூறுகிறபடி:

"மீறுதல்களின்போது மதரீதியாக ஒப்புதலளிக்கப்பட்ட நியமங்கள் என்றுள்ள 3 வெவ்வேறான பிரதியுத்தரங்களை நாம் புரிந்துகொள்ளவேண்டும், அவையாவன அச்ச உணர்வு, அவமான உணர்வு, மற்றும் குற்ற உணர்வு."[1] இந்த மூன்று அறநெறிய உணர்வுகளும் மூன்று வகையான கலாச்சாரங்களுக்கான அத்திவாரமாக உள்ளன: (1) குற்ற உணர்வு–அப்பாவித்தன்மை கலாச்சாரங்கள்; இவை தனிநபர்த்துவ (individualistic) சமூகங்களில் (அநேகமாக மேற்கத்தேய சமூகங்கள்) உள்ளன, அங்கே விதிமுறைகளை மீறுவோர் குற்றவாளிகளாகி, நீதியை நாடுவார்கள் அல்லது தவறுக்கு ஈடுசெய்யும் மன்னிப்பை நாடுவார்கள். (2) அவமான உணர்வு–கனமேன்மை கலாச்சாரங்கள்; இவை கூட்டிணைந்த கலாச்சாரங்களிலே (பொதுவாக கிழக்கத்தேய சமூகங்களில்) உள்ளன, அங்கே குழுவினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாது அவமானப்படும் மக்கள் சமூகத்தின்முன்பதாகத் தம்முடைய கனமேன்மையை மீள்சீரமைத்துக்கொள்ள நாடுவார்கள். (3) அச்ச உணர்வு–வல்லமை கலாச்சாரங்கள்; இவை ஆவியுலகுப்பின்புலங்களிலே (அநேகமாக tribal அதாவது குலமரபுச் சமூகத்தினிடையே) உள்ளன, அங்கே மக்கள் தீமையையும் தீங்கையும் பற்றிய அச்சம் கொண்டவர்களாக, சில மந்திர சடங்காசாரங்கள் வாயிலாக ஆவியுலகினை மேற்கொள்ளும் வல்லமையினை நாடுவார்கள்.

இந்த மூவகைக் கலாச்சாரங்களும் குழுவாரியாக (குழத்துவம்) மக்கள் உலகை எப்படியாக நோக்குகின்றனர் என்பதை வரையறுக்கிறதாய் உள்ளது. எப்படியாகத் தனிநபர்களுக்கு நபர்–துவம் (person-ality நபர்த்துவம்) உள்ளதோ அதேபோலவே கலாச்சாரக் குழுக்களுக்கு குழு–துவம் (group-ality குழுத்துவம்) உள்ளது. குழுத்துவம் என்பது, "ஒரு குழுவின் நடத்தைக் குணாம்சங்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட கோலங்கள்" என்பதைக் குறிக்கும்.[2] ஒருவரது கலாச்சார வழக்கமானது – அதாவது குழுத்துவமானது, அவரது உலகநோக்கு, அறநெறிகள், அடையாளப் படுத்துகை, இரட்சிப்பையிட்டதான எண்ணப்பாங்கு போன்றவற்றை அவரது தனிநபர்த்துவத் தன்மையிலும்பார்க்க அதிகமாக உருவேற்றிவிடும். இதனாலேதான் கலாச்சார வகைகள் பற்றிய விழிப்பறிவானது நாம் எதிர்கொள்ளக்கூடிய கலாச்சார மோதல்களைத் தெரியப்படுத்துவதுடன், உலகுக்கு சுவிசேஷத்தை மூன்று–பரிமாணங்களிலே தொடர்பாடல் செய்யவும் நமக்கு உதவுவதாக இருக்கும். தேவனுடைய கிருபையானது எப்படியாக குற்ற உணர்வு, அவமான உணர்வு, மற்றும் அச்ச உணர்வு ஆகியவற்றுக்குத் தீர்வை வழங்குகிறது என்பதற்கு எபேசியர் நூல் நல்லதோர் உதாரணமாகும்.

# எபேசியர் நிருபத்திலே 3 பரிமாண சுவிசேஷம்

பவுல் எபேசியருக்கான நிருபத்தை "கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தை" (3:8) விளக்கும்படியாக எழுதினார், அது தரப்படுகிற விதமாக இரட்சிப்பின் மூன்று கூறுகளுள் ஒவ்வொன்றையுமே உள்ளடக்கியதாகும்.

**குற்ற உணர்வு–அப்பாவித்தன்மை**: "*பாவமன்னிப்பாகிய மீட்பு* இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (1:7). "*அக்கிரமங்களில் (மீறுதல்களில்)* மரித்தவர்களாய் இருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்" (2:5)

**அவமான உணர்வு–கனமேன்மை**: "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுக் கிறிஸ்து மூலமாகத் தமக்குச் *சுவீகார புத்திரராக* ஆகும்படி முன்குறித்திருக்கிறார்" (1:6). "நீங்கள் இனி *அந்நியரும் பரதேசிகளுமாய்* இராமல், பரிசுத்தவான்களோடே ஒரே *நகரத்தாரும்* தேவனுடைய *வீட்டாருமாய்* (இருக்கிறீர்கள்)" (2:19, ஒப்பிடுக 2:12–13).

**அச்ச உணர்வு–வல்லமை**: "தாம் கிறிஸ்துவை மரித்தோரில் இருந்து எழுப்பி, அவரிடத்தில் *நடப்பித்த* தமது *பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே* ...எல்லாத் *துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும்... மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக*, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி (செய்தார்)" (1:19–21). "... என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய *சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.* நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு *எதிர்த்து நிற்கத் திராணி* உள்ளவர்களாக ஆகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்" (6:10–11).

மேலும் பவுலின் ஜெபத்திலுங்கூட இரட்சிப்பின் இந்த மூன்று அம்சங்களுமே புலப்படுகின்றன: "...நமக்கு *உண்டாயிருக்கிற நம்பிக்கை* இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற *சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம்* இன்னதென்றும், ... நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய *வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்* இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்." (1:18–19). சுவிசேஷமானது எப்போதுமே பிரிக்கமுடியாதோர் முழுமையாகவே உள்ளது, ஆனாலும் அதன் தோற்றப்பாடுகளைத் தனித்தனியாக பரிசீலிப்பதானது இரட்சிப்பையிட்டதான முழுமையான விளக்கத்தை வழங்குவதாக இருக்கும். எபேசியர் நூலை மூன்று–பரிமாணங்களிலே வாசிப்பதானது கிறிஸ்தவர்கள் "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி சகல ஞானத்தோடும்,

புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணிய (அவருடைய கிருபையை)" (1:7–8) முழுமையாகப் பற்றிக்கொள்வதற்கு உதவிடும்.[3]

# முழு வைரக்கல்லைப் பார்த்தல்

சுவிசேஷமானது பல பக்கங்களைக்கொண்ட ஒரு வைரக்கல்லாகும்; சகல கலாச்சாரங்களிலும் உள்ள மக்கள் தமது முழுமையான இரட்சிப்பை அனுபவிக்கும்படியாகத் தேவன் விரும்புகிறார். கிறிஸ்தவ இரட்சிப்புக்குப் பல்பரிமாணத் தன்மை இருந்தாலுங்கூட, மேற்கத்தேய கிறிஸ்தவமானது இரட்சிப்பின் ஒரு அம்சத்தை மாத்திரமே வலியுறுத்துகிறது (அதாவது, பாவத்தில் இருந்து மன்னிப்பு); அதனால் இயேசுக்கிறிஸ்துவுடைய சுவிசேஷத்தின் ஏனைய தோற்றப்பாடுகளை அது உதாசீனம் செய்துவிட்டது. ஒரு பக்கத்தை மாத்திரம் கொண்டிருக்கும் ஒரு வைரக்கல்லைக் கற்பனை செய்து பாருங்கள்! கலப்புக்கலாச்சாரப் பணியாளர்களுக்குத் துண்டாடப்பட்ட சுவிசேஷமானது ஆன்மீகத்துக்கும், இறையியலுக்கும், உறவுகளுக்கும் மற்றும் ஊழியத்துக்கும் முட்டுக்கட்டையாகிவிடும். நாம் வேண்டுமென்றே தேவனை ஒரு பெட்டிக்குள் போட்டுவிட்டு, ஒரு களத்தில் மாத்திரமே அவரை இரட்சிக்க அனுமதிப்பவர்களாக ஆகிவிடுகிறோம்.

மேற்கத்தேய கிறிஸ்தவம் அதனது சொந்தக் கலாச்சாரப் பின்புலத்துக்கு அர்த்தமுள்ளவிதத்திலே வேதாகம இரட்சிப்பின் தோற்றப்பாட்டினை வலியுறுத்துவது புரிந்துகொள்ளத்தக்கதே. சரித்திர ஓட்டத்தில், மேற்கத்தேய இறையியலுக்கு முதுகெலும்பாயிருந்த குறிப்பிடத்தக்க இரண்டு குரல்களாவன: ஹிப்போவைச் சேர்ந்த அகஸ்தீன் (Augustine, பிறப்பு 354) மற்றும் ஜெர்மானியரான மாட்டின் லூத்தர் (Martin Luther, பிறப்பு 1483). அவர்கள் இருவருமே தமது மீறுதல்களையிட்டதான தேவனுடைய உக்கிர கோபாக்கினையால் ஆத்மார்த்தமாகப் பீடிக்கப்பட்டனர். எனவே அவர்களது எழுத்தாக்கங்கள் தேவன் எப்படியாக குற்றவாளியான பாவிகளை (குற்ற உணர்வுள்ளவர்களை) மன்னித்து குற்றத்திலிருந்து விடுவிக்கிறார் (அப்பாவியாக்குகிறார்) என்பதையே ஆராய்கிறது. மேற்கத்தேயப் பின்புலங்களில் இருந்துவரும் மேற்கத்தேய இறையியலானது குற்ற உணர்வு–அப்பாவித் தன்மை இவைகளைக் கருத்திற்கொள்ளும்போது, உலகின் பெரும்பான்மை கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்களோ அவமான உணர்வுகளை மூடத்தக்கதான

கனமேன்மை மற்றும் அச்சத்தைத் தணித்தாட்கொள்வதற்கான வல்லமை ஆகியவற்றையே வாஞ்சிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

அகில உலகக் கலாச்சாரங்களிலே அவமான உணர்வு–கனமேன்மை கலாச்சாரத்தின் மேம்பாடு மற்றும் அச்ச உணர்வு–வல்லமை கலாச்சாரத்தின் இயக்கப்பண்பு ஆகியவைகள் இருந்துங்கூட, அநேகமான கிறிஸ்தவ இறையியல்களிலே அவை கவனியாது விடப்படுவது துலாம்பரமாகவே தொடர்கிறது. கிறிஸ்தவ இரட்சிப்பையிட்டு குல்ஸெல் கொண்டிருந்த புரிந்தறிவு, அதாவது மேற்கத்தேய கிறிஸ்தவத்தால் கைக்கொள்ளப்பட்ட அது, அவளுக்கு ஆக ஒரு பரிமாணத்தினதாகவே இருந்துள்ளது. அதன் விளைவாக, அவள் கனமேன்மை மற்றும் வல்லமை ஆகியவற்றைப் பெற்றடைவதற்குத் தனக்குக் கைவசமிருந்த கலாச்சார வழக்கங்களை நாடினாள், அதனால் அவள் தேவனுடைய கிருபையைக் கடந்துசெல்ல நேரிட்டது. குற்ற உணர்வு, அவமான உணர்வு மற்றும் அச்ச உணர்வு ஆகிய பின்புலங்களுக்கான சுவிசேஷம் என்ன? முழுமையான வைரக்கல் எப்படியாக வெளித் தெரிகிறது?

வேதாகம உலகின் கலாச்சாரங்கள் பிரதானமாக அவமானம்–சார்ந்த மற்றும் அச்சம்–சார்ந்த கலாச்சாரங்களாகவே இருந்துள்ளன. அதனாற்தான் கனமேன்மையும் வல்லமையும் வேதாகமக் கதையிலே பிரபலமான அம்சங்களாகத் தோன்றுகின்றன. வேதாகமத்தின் இரட்சிப்புக் கதையானது இறையியல் மற்றும் தூதியல் ஆகியவைகளை அனைத்துக் கலாச்சாரங்களுக்கும் – அதாவது மூவகைக் கலாச்சாரங்களுக்கும் வழங்குகிறது. அதேபோலத்தான் தற்காலத்து சபையும், பல்வேறான கலாச்சாரப் பின்புலங்களிலே 3 பரிமாண சுவிசேஷத்தை வழங்கவேண்டும். ஊழியத்திலே கனிநிறைவின் அதிகரிப்புக்கு உலகளாவிய கிறிஸ்தவர்களைத் தகவூட்டுவதற்கு நாம் தொடர்ந்துவரும் பகுதிகளிலே மேற்படியான மூவகையின் ஒவ்வொன்றினதும் நாட்டப்போக்குகளை (orientation) கலாச்சாரரீதியாகவும், இறையியல் ரீதியாகவும் தூதியல் ரீதியாகவும் பரிசீலனை செய்வோம்.

# 2.

# கலாச்சாரம்

## சமநிலையைப் பேணுதல்

குற்ற உணர்வுகள், அவமான உணர்வுகள், மற்றும் அச்ச உணர்வுகள் ஆகியவை மூன்று வெவ்வேறான கலாச்சாரக் கண்ணோட்டங்களாக இருந்தாலுங்கூட, எந்த ஒரு சமூகக் கலாச்சாரமும் முற்றும்முழுதுமாக ஒரு உணர்வினாலேயே ஆனதாகக் கருதமுடியாது. மூன்று உணர்வுகளுமே சகல சமூகங்களுக்குள்ளும் மேவியும் உள்ளார்ந்தும் உள்ள விசையியக்கங்களாகும். குல்ஸெல்லுடைய சூழ்நிலைகள், எப்படியாக மத்திய ஆசிய கலாச்சாரமானது அவமான மற்றும் பய விசையியக்கங்களை கூட்டிணைத்துள்ளது என்பதைப் புலப்படுத்துவதாக உள்ளது. ஒரே கலாச்சாரத்துக்குள்ளேயுங்கூட தனிநபர்களிலும் குழுக்களிலும், பிராந்தியம், வயது, பாலினம் போன்றவைகளிலே சார்ந்தாகவும் அவை வேறுபடலாம். உதாரணமாக, தாய்லாந்தின் கிராமியத்தவர் ஒருவர் பாங்கொக் தலைநகரவாசியைவிடவும் அதிகமான அச்ச உணர்வைக் கொண்டிருக்கலாம். நம்பத்தகுந்தவைகளையும் தொடர்பிணைப்புகளையும் நாடும் அமெரிக்கநாட்டு இளசுகள் அதிகதிகமாக அவமான உணர்வு சார்ந்திருப்பதுண்டு. மனித சிக்கல்கள், இது அல்லது அது எனும் எளிமையான வகையறாக்களுள் அடக்கக்கூடியவை அல்ல.

ஒரு கலாச்சாரத்தின் துல்லியமான மாதிரியானது, அதன்மீதான ஒவ்வொரு விசையியக்கக் குழுவினதும் செல்வாக்கினை அளவீடுசெய்கிறது. கீழே காட்டப்பட்டுள்ள முக்கோண வரைபடத்தைப் பார்க்கவும். ஒவ்வொரு மூலையும் முறையே குற்ற, அவமான மற்றும் அச்ச ஆகிய உணர்வுகளைக் குறிக்கும். முக்கோணத்தினுள் வகிக்கிற நிலையினால் பிரதிபலிக்கப்படும் ஒரு குழுவின் கலாச்சார நாட்டமானது, ஒவ்வொரு உணர்வினதும் விசையியக்கம் அந்தக் குழுவை எவ்வளவாக ஈர்க்கிறது என்பதிலே சார்ந்ததாக இருக்கும்.




கலாச்சார உலகநோக்குகள் ஒவ்வொன்றுமே குற்ற, அவமான மற்றும் அச்ச உணர்வுகளின் தனித்ததோர் கலவையாகும். எனவே குற்ற உணர்வு சார்ந்த கலாச்சாரமானது மேற்புற மூலையை நோக்கியதாக நிலைப்படுத்தப்படும் (அந்த மூலையில் அல்ல). றோலன்ட் முல்லர் (Roland Muller) என்பவர் கூறுகிறார்: மூன்று விசையியக்களுமே மூன்று அடிப்படை நிறங்களைப் போன்றது, ஒரு சித்திரக்கலைஞர் அவைகளைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான நிறங்களை உருவாக்குவார். ஒவ்வொரு நிறமும் பயன்படுத்தப்படும் அளவுகள்தான் அங்கே இறுதியாக வெளிப்படும் கலாச்சார வகையை நிர்ணயிக்கும்.[4]

அனைத்துக் கலாச்சார உருமாதிரிகளையும் போலவே, தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக சிக்கற் தன்மையான அவைகள் குற்ற, அவமான மற்றும் அச்ச உணர்வுகளின் மூவவைக்குள் ஒன்றாக வகைப்படுத்துகிறது. ஒவ்வொரு கலாச்சாரமுமே தனித்துவமானவை என்பது மெய்யாயினும், அவை ஒவ்வொன்றுமே இந்த மூவகைக்குள் ஒன்றாக வகைப்படுத்தப்படுகிறது. பின்வரும் பகுதிகள் ஒவ்வொரு கலாச்சார வகைகளினதும் பொதுவான தன்மைகளைச் சுருக்கமாக வழங்குகிறது.

# குற்ற உணர்வு-அப்பாவித்தன்மை கலாச்சாரங்கள்

*"நேர்மை (நாணயம்) என்பது எவருமே பார்க்காத போதுங்கூடச் சரியானதைச் செய்வதாகும்"*

– சி.எஸ். லூயிஸ் (C.S Lewis)

குற்ற உணர்வு–அப்பாவித்தன்மை கலாச்சாரங்களில் சரி தவறு எனும் கற்பிதமானது அடிப்படையான தூண்களாகும். என்னென்ன செயல்கள் சரி, எவையெவை தவறு போன்றவற்றை இனங்காண்பதற்கான நியமங்களையும் விதிமுறைகளையும் சமூகம் உருவாக்குகிறது. இந்த நியமங்களும் விதிமுறைகளுந்தான் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க நடத்தை எது என்பதை வரையறுக்கும். சரியெது தவறெது என்பதை அறியும் ஒரு முதிர்ச்சிதான் ஒருவரைச் "சட்டம் பேணும் குடிமகன்" ஆக்கும். சரியானதைச் செய்வது அவரை அப்பாவியாக (மாசற்றவராக) ஆக்கும்; குற்றமிழைப்பது அவரைக் குற்றவாளியாக ஆக்கும். அரசாங்கங்களும், கூட்டுத்தாபனங்களும், பாடசாலைகளும், அத்துடன் குடும்பங்களுங்கூட சமூக நடத்தையை வழிநடாத்தும் விதிமுறைகளை நிலைநாட்டி, சகலருக்கும் அவை பொருந்தும் என எதிர்பார்க்கிறது. எவருமே சட்டத்தை விட மேம்பட்டவரல்ல. கண்கட்டப்பட்ட நீதித்தேவதை எப்போதுமே பாரபட்சமற்ற நீதியை வழங்கும்படி சமூகம் எதிர்பார்க்கிறது.

குற்ற உணர்வுசார்ந்த கலாச்சாரங்கள் வெறுமனே விதிமுறைகளையும் நியமங்களையும் வலியுறுத்துவதுடன் நின்றுவிடாது, மாறாக அவற்றின் நடத்தை நியமங்களை உள்ளகப்படுத்தும்படி மக்களைச் சமூகமயப்படுத்திடும். அறநெறிப் பொறுப்புக்கள் அவர்களுக்கு உள்ளேயிருந்து வரும். "சரி"யானதை நாம் செய்யும்படிக்கான உள்ளக மனச்சாட்சி எம்மை வழிநடாத்தும் எனச் சமூகம் எதிர்பார்க்கிறது. எனது சிறுபராய நினைவுகளுள் என் மனச்சாட்சியை அதிகம் உறுத்திய விடயம் முன்பள்ளியிலே ஒரு பொம்மைவண்டியைத் திருடியதேயாகும். எவருமே அதைக் காணவில்லை, ஆனாலும் அடுத்தநாள் அதை நான் திருப்பி ஒப்படைக்குமட்டும் எனது மனச்சாட்சி என்னை உறுத்திக்கொண்டே இருந்தது. குற்ற உணர்வு கொள்வதற்குப் பார்வையாளர் தேவைப்படாது.

இதனால் விளைவது ஒரு தனிநபர்த்துவத் தொகுதியாகும். மேற்கத்தைய பெற்றோர் தமது பிள்ளைகளை "நீங்களாகவே சிந்தியுங்கள்", "உங்களுக்கு நீங்கள் உண்மையாக இருங்கள்", "உங்கள் தடத்தை நீங்களே ஒளிர்வூட்டுங்கள்" என்றெல்லாம் பயிற்றுவிக்கின்றனர். சமூக அழுத்தங்களுக்குத் தலைவணங்குவதோ அல்லது அதனுடன்

இரண்டறக்கலப்பதோ மெச்சப்பட மாட்டாது. மக்கள் தானே தனக்குதவி என்று வாழுவார்கள். ஒவ்வொருவருமே தத்தமக்குள் உள்ளகத் திசைகாட்டிகளை கொண்டிருப்பதால், ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நடத்தை இன்னது என்பதை அந்தந்தத் தனிநபர்களே வரையறுப்பர். மக்கள் தாமாகவே சரியாக நடந்துகொள்வார்கள் என்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பாக இருக்கும்.

ஆனால் ஒரு நபர் குற்றமிழைத்துவிட்டால் (நியதிகள் மற்றும் விதிமுறைகளின் வரையறையின்படி), நடுநிலையான முறையில் அந்தக் குற்றச்செயல்களுக்கான நீதி வேண்டப்படும். மேற்கத்தேய மொழிநடையின் கட்டமைப்பு அந்த சமூகத்தில் நீதியின் உச்சத்தன்மையைப் பிரதிபலிப்பதாக உள்ளது; ஒரு தவறு இழைக்கப்பட்டால், அந்த சமூகம் "நீதியை நாடி", "நீதியைக் கோரி", அத்துடன் "நீதி நடப்பிக்கப்படவேண்டும்" எனவும் எதிர்பார்க்கும். நீதி என்பது ஒருவித அகிலாண்டரீதியிலே சரியான அறநெறியாக இருக்கும்.

குற்ற உணர்வுக் கலாச்சாரங்கள், செயற்பாடுகளிலே குவியநோக்கம் கொண்டிருக்கும். ஏதாவதொன்றை மீறிக் குற்றம் செய்யும் ஒருவர், அதனை வேறொரு செயலால் – அதாவது சமூகசேவை, தண்டம் செலுத்துதல், சிறையில் இருத்தல் போன்றதான செயல்களால் நிவிர்த்தி செய்யலாம். அவரது பிரச்சினை தவறான செயல் என்பதால், அதற்கான தீர்வு அதனைச் சமநிலைப்படுத்தும் சரியான செயல். குற்றத்தை நிவிர்த்திசெய்யும்படிக்காக, ஒரு நபர் தனது குற்றத்தை அறிக்கைசெய்து அத்துடன்/அல்லது அதற்கான ஒரு இழப்பீட்டையும் வழங்கியாகவேண்டும். தனது குற்றத்துக்கு நேர்மையாகப் பொறுப்பேற்பவர் பாராட்பெறுவார். உதாரணமாக, திருமணத்துக்கு உண்மையாய் இராத ஒரு அரசியல்வாதி, தனது குற்றத்தைப் பகிரங்கமாக அறிக்கையிடுவதால் அதனைத் திருத்தியமைத்திடலாம். உள்ளாய்வு மனச்சாட்சி, பாவ அறிக்கை, சரி/தவறு, நிவிர்த்திசெய்யும் இழப்பீடு, நீதி, மற்றும் மன்னிப்பு ஆகிய இடைத்தொடர்புள்ளதான கருதுகோள்கள் குற்ற உணர்வு–அப்பாவித்தனம் கலாச்சாரங்களின் சமூக நடத்தையை வழிநடாத்தும்.

குற்ற உணர்வு–அப்பாவித்தனப் போக்கானது ஒரு கலாச்சாரத்தின் அறநெறியைக் கட்டமைப்பது மாத்திரமல்லாது, மானிட அடையாளம் பற்றிய கருதுகோள்களிலும் ஆதிக்கம் செலுத்தும். அங்கே வலியுறுத்தல் செயல்களிலே இருப்பதால், "செய்வதிலேதான்" தனிநபர்த்துவர்கள் பெறுமதியைப் பெற்றடைகின்றனர். ஒருவரது அறிமுக அடையாளம் சார்ந்திருப்பது அவரது குடும்பத்திலோ மொழியினத்திலோ அல்ல, மாறாக அவரது வேலைகள், பொழுதுபோக்குகள் ஆகியவற்றிலேதான். தாம் எந்தக் குழுவின் அங்கமாக இருக்கிறார்கள் என்பதால் அல்ல, மாறாக தமது

நடத்தைகளும் சுய–புலப்பாடும் குழுவில் இருந்து எப்படியாக வேறுபடுகிறது என்பதாலேதான் மக்கள் தம்மை வரையறுத்துக்கொள்வார்கள்.

இப்படியான குற்ற–அப்பாவித்தன, தனிநபர்த்துவ மேற்கத்தைய கலாச்சாரமானது சுமார் 2,500 வருடங்களுக்குமுன்னர் ஆரம்பித்தது. பண்டைய கிரேக்கர்களும் ரோமர்களும் கனமேன்மைக்காக வாழ்ந்தார்கள்; ஃபிலொற்றிமோ (philotime) எனும் கிரேக்க வார்த்தையின்படி "கனமேன்மையை நேசித்தல்" அவர்களால் உயர்வாக மெச்சப்பட்டது. ஆனால் காலப்போக்கிலே கனமேன்மையானது குடும்ப வம்சம், தடகளஉடல்வாகு (athleticism) மற்றும் ஐசுவரியங்கள் போன்றவைகளிலே சார்ந்திராமல் அறநெறியில் சார்ந்ததாக இருக்கவேண்டும் என்ற ஆலோசனையைத் தத்துவவியலாளர்கள் வழங்கிவந்தனர். வெறுமனே வலிமையாக இருப்பதாலல்ல, சரியானதைச் செய்வதாலேதான் ஒருவன் கனம்பெறவேண்டும். *யூதிஃப்புறோவின் தர்மசங்கடம்* (*Euthyphro's Dilemma அதாவது பக்தியைப் பக்தியானதெனத் தேவர்கள் நேசிக்கிறார்களா அல்லது தேவர்கள் நேசிப்பதால் பக்தி பக்தியாகிறதா எனும் சிக்கற் கேள்வி*) பற்றி சோக்கிரடீஸ் கொண்டிருந்த முடிவான நிலைப்பாடு எதுவென்றால், தேவர்களுங்கூட பக்தியாகச் செயற்படவேண்டும் என்பதாகும். பண்டைய தத்துவியலாளர்கள் அந்தஸ்தை தனிநபர் அறநெறி நடத்தையுடன் சேர்த்துவிட்டனர்.

பின்பு, மறுமலர்ச்சி மற்றும் ஒளிர்விப்புச் (Renaissance and Enlightenment) சிந்தனையாளர்கள் மக்களைத் தானாக இயங்கக்கூடிய, காரணங்கற்பிக்கக் கூடிய தனிநபர்களாக வரையறுத்தனர்: "*நான் சிந்திக்கிறேன், அதனாலேதான் நான் I think, therefore I am.*" இன்று மேற்கத்தேயத் தத்துவமானது ஒரு நபரது சாராம்சம் இன்னதென்பதை சமூகத்துடனான அவரது உறவுகளுக்கு அற்பாற்பட்ட விதத்திலே விளக்குகிறது. இதனால், மேற்கத்தைய நாகரீகமானது சமூகஞ்சார்ந்த இயக்கிகளைப் (அதாவது கனமேன்மை, அவமானம், முகத்தோற்றம் போன்றவைகள்) புறந்தள்ளி, குற்ற உணர்வு, அப்பாவித்தனம் மற்றும் நீதி ஆகியவற்றைச் சார்ந்துநிற்கிறது.

# அவமான உணர்வு-கனமேன்மை கலாச்சாரங்கள்

*"கனமேன்மை என்பது நல்ல மக்களின் நல்ல மனக்கருத்து"*

– செனெக்கா (Seneca), பிரபல ரோம தத்துவவியலாளர்

பூஸ்டன் மரதனிலே 2013 இல் துயரச்சம்பவமான குண்டுவெடிப்பு இடம்பெற்றபின்பு, அதன் சூத்திரதாரிகளெனச் சந்தேகிக்கப்பட்டவர்களின் மாமனாரை ஊடகங்கள் கண்டுபிடித்தன. தொலைக்காட்சிக்குப் பேட்டிவழங்கிய அந்த செச்னிய மாமனார், தனது மருமக்களின் செயலை வன்மையாகக் கண்டித்தார்: "எமது முழுக் குடும்பத்துக்கும் அவமானத்தை ஏற்படுத்தி விட்டீர்களே – எமது சர்னேவ் (Tsarnaev) குடும்பம். மேலும் அனைத்துச் செச்னிய (Chechen) மொழியினத்தவர்களையும் அவமானப்படுத்திவிட்டீர்கள்.... இப்போது எல்லோருமே எமது முழு மொழியினத்தின்மீதும் அந்த அவமானத்தைச் சார்த்துகின்றனர்." அமெரிக்கர்கள் அந்தச் துயரச்சம்வ இழப்புக்களிலே புரண்டுகொண்டிருக்க, அந்த செச்னிய மாமனாரோ தனது மக்களின் அவமானத்தை எண்ணிப் புலம்பிக்கொண்டிருந்தார்.[5]

அவமான–கனமேன்மை சமூகங்கள் வலிமையான குழும நாட்டத்தைக் கொண்டவை. கனமேன்மை என்பது ஒருவரது சமூக மதிப்பு; சமூகத்தின் பார்வையிலே அவரது பெறுமதி; மற்றவர்கள் உங்களைப்பற்றிக் கொண்டிருக்கும் நல்லெண்ணம்; அதுதான் சமூகத்திலே இசைவான சமூகப் பிணைப்புகளை ஏற்படுத்தும். கனமேன்மையானது உறவுகளில் இருந்து வரும்.

மறுபுறத்தே அவமானம் என்பது பகிரங்கமான எதிர்மறை மதிப்பீடு: சமூகம் உங்களைப்பற்றிக் கொண்டிருக்கும் கீழ்த்தரமான சிந்தனை. சமூகக் குழுமம் உங்களுடனான தொடர்பை அறுத்துவிடும். உதாரணமாக, அவமானப்படுத்துதல் என்பதற்கான தாய்லாந்திய பதத்தின் அர்த்தம் பிறர் முன்னிலையிலே அசிங்கமான தோற்றத்தைக் கொண்டிருக்கும்படிக்கு "ஒருவரது முகத்திரையைக் கிழித்துப்போடுதல்" என்பதாகும். தமக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பற்றித் தேவனிடம் இஸ்ரவேலர் புலம்பும்போது, "எங்களை அடுத்து வாழ்வோரின் (அயலவரின்) *பழிப்புக்கு* எங்களை ஆளாக்கினீர்; எங்கள் சுற்றுப்புறத்தாரின் (சூழ இருப்பவர்களின்) *ஏளனத்துக்கும் இகழ்ச்சிக்கும்* எங்களை உள்ளாக்கினீர். வேற்றினத்தாரிடையே எங்களை ஒரு *பழிச்சொல்லாக* ஆக்கினீர்; ஏனைய மக்கள் எங்களைப் பார்த்துத் தலையசைத்து *நகைக்கின்றனர்.* எனக்குள்ளே *மானக்கேடு* நாள்முழுவதும் என் கண்முன் நிற்கிறது; *அவமானம்* என் முகத்தை மூடியுள்ளது" (சங்கீதம் 44: 13–15 பொதுமொழிபெயர்ப்பு, வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

கனமேன்மையும் அவமானமும் ஒருவரது நற்கீர்த்தியைத் தரவரிசைப்படுத்தி அளவிடுகின்ற சமூக மூலதனம்போலத் தொழிற்படும். கனமேன்மையும் அவமானமும் உள்ளாரத் தொடர்புறவானவை என்பதால், அப்படியான கலாச்சாரங்கள் கூட்டாண்மையானதாக இருக்கும். அவமான–கனமேன்மை கலாச்சாரத்தின் அங்கத்தவர்கள், அநேகமாக அவர்களது தனிப்பட்ட ஆசைகளை நசுக்கித்தன்னும், குழுமத்தின் சமூக அந்தஸ்தைப் பேணும்படி எதிர்பார்க்கப் படுவார்கள். இளைஞன் ஒருவன் தப்பான ஒரு வம்சத்துக்குள்ளே திருமணம் செய்தால், அந்தக் கிராமம் அதைப் பார்க்கும் விதமானது, அவனது தந்தையை அவரது குடும்பத்தின் கனமேன்மையின் நலன்களை முன்வைத்ததான செயற்பாடுகளுக்கு நிர்ப்பந்திப்பதாக இருக்கும். கனமேன்மையும் அவமானமும் தொற்றிக்கொள்ளும்; ஒருவர் செய்யும் காரியம் அந்த முழுக் குழுமத்தையுமே பாதிக்கும். 2014 இல் இடம்பெற்ற உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் பிரேஸில் ஜெர்மனியிடம் 7–1 என்ற கோல் கணக்கிலே தோல்வியடைந்தபோது பிரேஸில் ரசிகர்கள், "எமது தேசம் காயப்பட்டுவிட்டது. இனி எமது வாழ்நாள் முழுவதும் மக்கள் எம்மை ஏளனப்படுத்த, அதற்கு நாம் முகங்கொடுத்தாகவேண்டும்" என்று கூறி, "பிரேஸில் நாட்டவன் என்று கூறுவது எனக்குப் பெரும் அவமானமாக இருக்கிறது" என்றார்கள்.[6] வேதாகமத்திலுங்கூட தேவஜனங்கள் தேவனுடைய நாமத்தை அவமானப்படுத்தினார்கள் (ஒப்பிடுக, மல்கியா 1:6; ரோமர் 2:24). குழுமத்தின் கனமேன்மையைப் பேணும் பிரதிநிதிகளாகத் தாம் தொழிற்படும்படி எதிர்பார்க்கப்படுகின்றனர் என்பதைப் பிள்ளைகள் இளவயதிலேயே கற்றுக்கொள்கின்றனர். எனவே, தனது குடும்பத்தின்மீதும், கிராமத்தின்மீதும், தேசத்தின்மீதுங்கூட அவமானம் ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதே ஒருவரது நோக்கமாக இருக்கும்.

கனமேன்மை–அவமானக் கலாச்சாரங்களின் சமூகக் கட்டமைப்பானது உறவுகளின் வலையமைப்பை ஸ்தாபித்தல் மற்றும் விஸ்தரித்தல் ஆகியவைகளைச் சூழ்ந்ததாக வடிவமைக்கப்படும். வாழ்வின் அனைத்து அம்சங்களிலுமே தொடர்புறவுகள் மிக முக்கியமானவை. உங்களுக்கு யாரைத் தெரியும் (அல்லது உங்களை யாருக்குத் தெரியும்) என்பதிலேயே அனைத்தும்! குழும நாட்டமுள்ள கலாச்சாரங்கள் உறவுகளிடையே இசைவுநிலவுவதை மதிப்பன. பிறர் மனதை நோகப்பண்ணாமல் நபரிடைத் தொடர்புகளைப் பேணுவதற்கு மக்கள் எத்தனிப்பார்கள். சாதூரியமாக நடந்துகொள்வதும் சமாதானத்தைத் தக்கவைப்பதுந்தான் தொடர்பிணைப்புகளைப் பேணும்.

உறவுகளிலே, கடப்பாடுகள் மற்றும் பிரதியுபகாரங்களிடையே சமநிலையைப் பேணுவதென்பது அத்தியாவசியமானதாகும். சகபாடிகளுக்கு முன்பாக

அவமானத்தின் "சமூகக் கடன்" தமக்கு இராதிருக்கும்படிக்கு, வெகுமதிகளும் விருந்துகளும் எப்போதுமே மீளச்செலுத்தப்படும். குடும்ப இயக்கமும் மற்றும் தலைமைத்துவக் கட்டமைப்பும் அநேகமாக சர்வாதிகாரப் போக்கானதாகவே இருக்கும். பாதுகாப்பையும் வாழ்வுக்கான ஏதுக்களையும் வழங்குவோருக்கு ஈடாக மக்கள் அதிகாரத்தையும் புகழ்ச்சியையும் வழங்குவார்கள்.

ஒரு அவமான–கனமேன்மை கலாச்சாரத்திலே ஒவ்வொருவருக்கும் முறையான வகிபங்கு இருக்கும்; அநேகமாக, அது வயதிலும், பாலினத்திலும், வகிக்கும் ஸ்தானத்திலும் சார்ந்ததாக இருக்கும். தத்தமது வகிபங்குகளுக்கு ஏற்றபடி நடந்து கொள்வதால் மக்கள் கனமேன்மையைப் பேணுகிறார்கள். பிள்ளைகளுங்கூட உறவுகளையும் சூழ்நிலைகளையும் எப்படிக் கௌரவமாகச் செலுத்தலாம் என்பதைக் கற்றுக்கொள்வார்கள். வெஸ்லி யாங் (Wesley Yang) என்பவர் கூறுகிறார், "ஆசியப் பெற்றோர்த்துவமானது பரந்த கூட்டாண்மையின் தேவைகளின் நலனுக்காக தனிநபர் சுயத்தைத் தாழ்த்துவதை வெளிப்படையான நோக்காகக் கொண்டிருக்கும்....இப்படியான பெற்றோர்த்துவமானது 'இடைத்தொடர்புள்ள சுயத்தை' உருவாக்குவதை நோக்காகக் கொண்டது; அந்தச் சுயமானது உள்ளார்ந்த தற்போக்கினால் அல்ல, மாறாக எந்தப் பின்புலத்திலே சார்ந்துள்ளதாகத் தன்னை அது இனங்காண்கிறதோ, அதைப்பொறுத்து வகிக்கவேண்டியதான சமூக வகிபங்குகளையிட்ட அதன் உணர்வறிவினால் வரையறுக்கப்படும்."[7]

குழுமம் அறநெறியை வெளியகமாக நிர்ப்பந்திக்கும். தெரிவுகளைச் செய்யும்போது மக்கள் கேட்கும் கேள்விகளாவன, "எது கனமேன்மையானது?", "மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்", அல்லது "எனது குடும்பப்பெயர் என்னாவது?" ஒருவருக்குப் பல்வேறு சமூக வகிபங்குகள் இருக்குமாயின், அவருக்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நடத்தை சார்ந்திருப்பது சட்டவிதிகளில் அல்ல, மாறாக பின்புலங்களிலேயே. அவமான–கனமேன்மை கலாச்சாரங்கள் அறநெறிப்படியான சரி தவறுகளை நம்புகிறவைகள்தான், ஆயினும் அவை அறநெறியைச் சட்டபூர்வமாயோ கோட்பாட்டுரீதியிலோ அல்லாமல் உறவுரீதியாகவே வரையறுக்கும். உறவுக்கு சிறந்தது எதுவோ அதுவே அறநெறிப்படி சரியானதுமாகும்.

ஒருவரது செயல்கள் (வரிகட்டாமல் டிமிக்கி கொடுத்தல், அல்லது மேடைத் தடுமாற்றம் போன்றவை) அவமானத்தைத் தோற்றுவிக்கலாமாயினும் குறித்த வகையான நபராக இருப்பதால் வரும் அவமானந்தான் அநேகமாகப் படுமோசமான அவமானமாய் இருப்பதுண்டு. கூட்டாண்மைக் கலாச்சாரங்களிலே அந்தஸ்து என்பது பிரதானமாகக் குழுமத்தில் இருந்து சுதந்தரிப்பதாகவே இருக்கும். நீங்கள் யார், கனமேன்மைக்குரியவரா

அவமானத்துக்குரியவரா என்பதெல்லாம் உங்களது குழுமத்தின் மொழியினம், பிரபல்யம், ஆரம்பம், மற்றும் வம்சாவழி போன்றவைகளைப் பொறுத்தே இருக்கும். நீங்கள் செய்வது இன்னது என்பதைவிடவும் நீங்கள் யார் என்பதில் சார்ந்ததாகத்தான் உங்களது அடையாளம் இருக்கும். ஆசிய கலாச்சாரங்களில் உள்ளவர்கள் முதலாவதாகத் தமது குடும்பப் பெயரை வழங்கித்தான் தம்மை அறிமுகப்படுத்துவார்கள். சுவிசேஷ நூல்களிலே தம் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் நிமித்தம் அவமானத்திலே வாழ்ந்திருந்த மக்கள்மீது இயேசு கனமேன்மையையும் மாண்பினையும் வழங்கியருளினார். குருடர், முடவர், குஷ்டரோகிகள், உதிரப்பெருக்குள்ள பெண்கள், பிசாசு பிடித்தவர்கள், மற்றும் புறவினத்தவர்கள் ஆகியோர் புறந்தள்ளப்பட்ட அசுத்தர்களாகக் கணிக்கப்பட்டனர், அவர்களை இயேசு சரீரக ரீதியிலும் சமூக ரீதியிலும் மீள்சீரமைத்தார்.

அவமானமானது சிறுமை–மனப்பான்மை, அங்கீகாரமின்மை மற்றும் கைவிடப்பட்டநிலை போன்றதான உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும். அவமானம் என்பது முழுமையான நபர்த்துவத்தின் போதாக்குறை என அர்த்தப்படும். குற்ற உணர்வு "நான் ஒரு தவறு இழைத்து விட்டேன்" என்று கூறும்போது, அவமான உணர்வோ "நானே ஒரு தவறு" கூறும்; அதன்படி, நிஜ நபரேதான் பிரச்சினை எனக் கணிக்கப்படுவதால், அந்த அவமானத் தனிநபர் குழுமத்தில் இருந்து ஒதுக்கிவைக்கப்படுவார். அப்படியான தனிமைப்படுத்தலையும் புறக்கணிப்பையும் தவிர்த்துக் கொள்ளும்படிக்கு அப்படிப்பட்டவர்கள் பிறரின் பார்வைக்கு உட்படாமல் தமது அவமானத்தை மறைப்பார்கள். எப்படியாகக் குற்றஉணர்வுக் கலாச்சாரமும் அவமான உணர்வுக்கலாச்சாரமும் நடத்தைகளை உருவமைக்கின்றன என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| | **குற்ற உணர்வு சார்ந்தவை** | **அவமான உணர்வு சார்ந்தவை** |
|---|---|---|
| **பொதுவாக வரையறுக்கப்படுவது** | விதிமுறைகள் மற்றும் சட்டங்கள் | உறவுகளும் வகிபங்குகளும் |
| **நடத்தை வழிநடாத்தப்படுவது** | உள்ளக மனச்சாட்சியால் | வெளிப்புறச் சமூகத்தால் |
| **மீறுதல் விளைவிப்பது** | குற்ற உணர்வு | அவமான உணர்வு |
| **மூலாதாரப் பிரச்சினை** | "நான் தவறிழைத்துவிட்டேன்" (செயற்பாடு) | "நான் ஒரு தவறு (இருப்பு) |

| **மீறுதல் பாதிப்பது யாரை** | மீறுபவரை | குழுமத்தை |
|---|---|---|
| **மிறுகிறவரின் பதிலீடு** | நியாயப்படுத்தல் அல்லது மன்னிப்புக்கோருதல் | மறைத்தல் அல்லது மூடுதல் |
| **பொதுஜனத்தின் பதிலீடு** | நீதியின்படியான தண்டனை வழங்குதல் | அவமானத்தை அகற்றும்படி தள்ளிவைத்தல் |
| **தீர்வுகாண்பதற்கான வழிமுறை** | மன்னிப்பு | மீள்சீர்படுத்துதல் |

அவமானப்பட்ட நபர் (குற்ற உணர்வுள்ளவரைப் போலல்லாது) தான் ஏற்படுத்திய சமூக சேதத்தைத் திருத்தியமைக்க இயலாதவராக இருப்பதால், அவமானத்தை நிர்வகிப்பது முக்கியமானது. அவமானத்தை அகற்றுவதற்கு மன்னிப்புக்கும் அதிகமானவைகள் அவசியப்படும். அவமானத்தைத் திருத்துவது ஒருவிதத்திலே சுயத்தை மீளமைப்பதை அல்லது உருமாற்றுவதை வேண்டிநிற்கும்; ஒருவரது அடையாளம் மாறவேண்டும். உயர் அந்தஸ்தில் உள்ள ஒருவர் அவமானப்பட்ட நபருடைய கனமேன்மையினைப் பகிரங்கமாக மீள்சீரமைத்திடவேண்டும், தனது ஊதாரி மகனுக்குத் தந்தையானவர் கிருபையாகச் செய்ததைப் போல, லூக்கா 15.

பிற கலாச்சாரங்களில் உள்ள கனமேன்மை மற்றும் அவமான இயக்கவிசைகளை மேற்கத்தையவர்கள் அநேகமாக காணத்தவறுவதுண்டு. கனமேன்மை மற்றும் அவமானத்தைப்பற்றிக் கதைப்பதற்கு அவர்களது மொழிகளில் மகிமை, நற்கீர்த்தி, அந்தஸ்து, மாண்பு, அல்லது மதிப்பு போன்றதான பல்வேறு பதங்களைப் பயன்படுத்துவது ஒரு காரணமாக இருக்கலாம். மக்கள் பெயராலும் முகத்தாலும் அறியப்படுவதால், பல கலாச்சாரங்கள் "பெயர் (name)", "முகம் (face)" போன்றதான ஆகுபெயர்களை அதற்காகப் பயன்படுத்துவதுமுண்டு.

மேலும், கனமேன்மை மற்றும் அவமானம் பற்றிய கலாச்சாரப் புலப்படுத்தல்கள் முரண்பாடாகத் தென்படக்கூடும். உதாரணமாக, மத்திய கிழக்கத்தைய கலாச்சாரங்கள் கனமேன்மைக்காக மூர்க்கத்தனமாகப் போட்டியிடுவதுண்டு. முறுகல்கள் ஒன்றில் வெற்றி–தோல்வியாக அல்லது தோல்வி–வெற்றியாக நோக்கப்படும். எனவே அவமானத்தைத் தவிர்த்து கனமேன்மையை மீள்சீரமைக்கும்பொருட்டாக அவர்கள் கௌரவக் கொலைகளை அல்லது பயங்கரவாதத்தை நாடக்கூடும். ஆனால் ஜப்பான், கொரியா போன்ற தூர

கிழக்கத்தைய கலாச்சாரங்கள், இசைவுக்காக (harmony) எத்தனிப்பவை. முறுகல்கள் ஒன்றில் வெற்றி–வெற்றி அல்லது தோல்வி–தோல்வி விளையாட்டாக இருக்கும். எனவே கிழக்காசிய மக்கள் அவமானத்துக்குப் பிரதியுத்தரமாகப் பின்வாங்குதலை அல்லது தற்கொலையை நாடுவதுண்டு. வெளிப்புறப் புலப்படுத்தலில் இந்த இரண்டு கலாச்சாரத் தொகுதிகளும் முரண்படுவதாகத் தென்பட்டாலுங்கூட, அவை அவமான – கனமேன்மை மதிப்பீடுகளிலே ஆளமான வேரூன்றியவையாகும்.[8]

# அச்ச உணர்வு-வல்லமை கலாச்சாரங்கள்

பயம் சார்ந்த கலாச்சாரங்களிலே, சில உண்மைகளை நேர்மையாக நம்புவதோ அல்லது அறநெறி நியமங்களைப் பின்பற்றுவதோ முக்கியமானதாக இராது. மாறாக, ஆவிக்குரிய வல்லமைகளை சாந்திப்படுத்தும் வழக்கங்கள்தான் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க மானிட நடத்தைகளாக வரையறுக்கப்படும். கண்ணுக்குத் தெரியாத வல்லமைகளை உங்களுக்குச் சாதகமாக சாந்திப்படுத்தும் அல்லது கையாளும் 'எழுந்தமானமான' நுட்பங்களிலேயே இதன் குவியநோக்கம் இருக்கும். ஆவி உலகுக்கு முன்பாக எதையாவது தப்பாகச் செய்திடுவோமா எனும் அச்சம் மக்கள் மத்தியிலே இருக்கும். அச்சம்–வல்லமை பின்புலங்களிலே உள்ள தலைவர்கள் அநேகமாக மத அல்லது ஆன்மீக நபர்களாக இருப்பதுடன், அவர்தம் மத அனுஷ்டானங்களூடாக சரித்திரத்தையே மாற்றும் ஆற்றல் கொண்டவர்கள் என எண்ணப்படுவார்கள். அச்சம் மற்றும் வல்லமையின் இயக்குசக்தி பொதுவாகக் குலவினத்து மாந்திரீகருடன் (tribal shamans) அல்லது கரீபியன் பில்லிசூனியருடன் (voodoo) தொடர்புபட்டதாக இருந்தாலுங்கூட, அவர்கள் ஒரு புனிதரிடம் வேண்டுதல் செய்யும் ஒரு பிரேசில்நாட்டு வர்த்தகரில் அல்லது சாத்திரகாரனைக் கலந்தாலோசிக்கும் ஒரு வாஷிங்டன் அரசியல்வாதியில் செல்வாக்குச் செலுத்துகிறவர்களாகவும் இருப்பார்கள்.[9]

பல முறைசார் மதக் கிளைகளின் தோற்றப்பாடுகளின் பின்னால் அச்ச உணர்வு–வல்லமை கலாச்சாரங்களின் தொழிற்படு மதமாகிய ஆவிமார்க்கம் (animism) இருக்கும். பௌதீக உலகிலே (மரங்கள், காலநிலைகள், மக்கள், நோய்நொடிகள் போன்றவைகளில்) ஆவிகள் குடிகொண்டிருப்பதாகவும், அவை தனிப்பட்ட நன்மைக்காக மாந்திரீகச் சடங்குகள் மூலமாக ஆட்டிப்படைக்கப்படலாம் எனவும் ஆவிமார்க்கம் நம்புகிறது . இத்தகைய

'கிராமிய' அல்லது 'குலவின' மதங்கள் நிஜம் பற்றி மூன்று பரிமாணங்களைக் கடைப்பிடிப்பதுண்டு:

1. காணப்படும் உலகம் (மக்கள், வீடுகள், மற்றும் இதர பௌதீகப் பொருட்கள்)
2. இந்த உலகில் புலப்படாதவை (தேவதூதர்கள், ஆவிகள், *மனா (mana), பரக்கா (baraka)*, சாபங்கள், முன்னோர்கள் போன்றவை)
3. மறு உலகிலே புலப்படாதவைகள் (தேவன், பரலோகம், நரகம் போன்றவை)

கண்ணுக்குப் புலப்படாத ஆன்மீக வல்லமைகள் எமது நாளாந்த வாழ்வை ஊடுருவுவதால் பயிர்விளைச்சற் பாதிப்புகள், இழப்புகள், நோய்கள், விபத்துகள், யுத்தம் அல்லது ஒரு பிள்ளையின் பாலினம் போன்றவற்றை விளக்குவதற்கு இந்த உலகிலே கண்ணுக்குப் புலப்படாத பரிமாணத்தையே மக்கள் நோக்கிப்பார்ப்பார்கள். 1982 இலே, "விலக்கப்பட்ட மத்தியத்தின் குறைபாடு (The Flaw of the Excluded Middle)" எனும் நூலை எழுதிய தூதுப் பணியியலாளரான போல் ஹீபேர்ட் (Paul Hiebert) என்பவர், அதிலே எப்படியாக விஞ்ஞானக் காரணீயவாதத்தால் செல்வாக்குச் செலுத்தப்படும் மேற்கத்தேய உலக நோக்கானது அதன் நாளாந்த வாழ்விலே ஆன்மீக வல்லமைகளின் மத்திய பரிமாணத்தை விலக்கிவைக்கிறது என்பதை விளக்கியுள்ளார்.[10] நவீனத்துவமானது அச்சம்–வல்லமை உலகநோக்கினை "விஞ்ஞானபூர்வமற்ற மூடநம்பிக்கை (unscientific superstition)" என்று நிராகரித்து, உலகில் ஆன்மீக வஸ்துகளின் நிஜப் பிரசன்னத்தை உதாசீனம் செய்கிறது.

அச்ச உணர்வு–வல்லமைக் கலாச்சாரங்கள் கண்ணுக்குப் புலப்படாத வல்லமைகளையிட்ட தொடர்ச்சியான அச்சத்தில் வாழ்கின்றன. ஒரு தப்பான அடியெடுத்து வைத்தாலே அது விபத்துகள், கெட்ட கனவுகள், பிசாசுபீடிப்புக்கள் பேன்றதான தீமைகளுக்குத் தம்மை உள்ளாக்கும் அல்லது ஆன்மீக செல்வாக்குக்கு உட்படக்கூடிய எளிதில் பாதிக்கப்புக்கு உள்ளாக்கும் ஸ்தானத்தைத் திறக்கும் என அவர்கள் அஞ்சுவார்கள். தான்தோன்றித்தனமான (capricious) தீய ஆவிகள் எத்தகைய தீங்குகளை ஏற்படுத்தும் என்பதை அச்சம் சார்ந்த பின்புலத்திலுள்ள மக்கள் அறியமாட்டார்கள். வாழ்விலே அறியப்படாதவைகளைக் கட்டுப்படுத்தவும் தீமையின் செல்வாக்குகளை அகற்றிப்போடவும் அவர்கள் மாந்திரீகச் சடங்குகளை நாடுவதுண்டு. தீமையைத் தவிர்க்கும்படிக்கும் ஆசீர்வாதங்களை வரவழைக்கும்படிக்கும் ஆன்மீக வல்லமைகளை இரகசிய நுட்பங்கள் சேணமிடும். இந்த உலகில் தம்முடன் குடியிருக்கும் வல்லமைகளோடு சமாதானமாக வாழ்வதற்கே மக்கள்

முயற்சிப்பார்கள். ஆன்மீகத்துடனான இசைவின்மையானது பேரழிவுக்கு வழிவகுக்கும்.

வல்லமையைப் பெறும் பொதுவான வழக்கங்கள், தாயத்துக்கள் (amulets), சாபங்கள், மந்திரிப்புகள் (charms), மந்திரித்த பொருட்கள் (fetishes), உச்சரித்தல்கள் (recitations), வர்த்திகள் கொழுத்துதல் (incantations), சூனியம் (witchcraft), சாத்திரக்கணிப்புகள் (horoscopes) அல்லது கண்ணூறு (evil eye) போன்றவற்றின் பயன்பாடுகளை உள்ளடக்கியதாகும். அச்ச உணர்வு–வல்லமை கலாச்சாரங்களின் அறநெறிவாதம் கூறுகிறது: புலப்படாத உலகினை உங்களுக்கு உதவும்படி கையாள்வதற்காக புலப்படும் உலகிலே ஏதாவது செய்தாகவேண்டும்.

புதிதாகப் பிறந்த எளிதில் பாதிப்புறக்கூடிய பிள்ளையைத் தீங்கிலிருந்து பாதுகாப்பதற்காக, ஆவிகளைத் திசைதிருப்பும்படி பெற்றோர்கள் குழந்தையின் நெற்றியிலே ஒரு உருவத்தை வர்ணந்தீட்டக்கூடும். தீங்கிழைக்கப்பெற்ற ஒருவர் தனது எதிரியைப் பழிவாங்கும் நோக்கிலே, எதிரியின் படத்தை எரிக்கக்கூடும். இனப்பெருக்கத்தை ஊக்குவிக்கும்படிக்கென ஒரு ஜோடியினர் ஒரு பரிசுத்த மலைக்கு விஜயம் செய்து ஜெபிக்கக்கூடும். தொற்றுநோயைக் கட்டுபாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கிலே, கிராமத்து மூப்பர்கள் தேவர்களைச் சாந்திப்படுத்தும்படி ஒரு எருதைப் பலியிடக்கூடும். செல்வச்செழிப்பை உறுதிசெய்யும்படியாக, நபரொருவர் தமது குடும்ப பலிபீடத்திலே முன்னோர்களுக்குப் பலியிடக்கூடும். வாழ்க்கைபூராக இயற்கைக்கு அப்பாற்பட்ட செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு ஒருவர் தமது வாழ்வினுள் இருண்ட வஸ்துக்களை வலிந்து வரவழைக்கக்கூடும். இத்தகைய ஆவிகளுக்குத் தன்னார்வமாகவே அடங்கிக் கீழ்ப்படுவது பாதுகாப்பையும், ஆன்மீக வழங்கல்களையும், ஒருவேளை சமூகத்திலே மாந்திரீகர் (shaman) எனும் ஒரு கனம்பொருந்திய அந்தஸ்தையும் வழங்கலாம்.[11]

## கலாச்சார வகைகளுக்கான காரணம்

குற்ற உணர்வு, வெட்க உணர்வு மற்றும் அச்ச உணர்வுக் கலாச்சாரங்கள் ஏன் உள்ளன? இதற்கான பதில்கள் பெரும்பாலும் சமூக–பொருளாதாரப் பதில்களே. குழுவானது அதன் அங்கத்தவர்களை எப்படி மெச்சும் (அப்பாவித்தனம், கௌரவம், வல்லமை) அல்லது தண்டிக்கும் (குற்ற உணர்வு, வெட்க உணர்வு,

அல்லது அச்ச உணர்வு) என்பதில் மக்கள் வளங்களைப் பெறும் தொகுதிகள் செல்வாக்குச் செலுத்தும்.

உணவு, பாதுகாப்பு, தகவல், ஆரோக்கியம், வேலை போன்றதான வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கான அடைவினை அனைத்து மக்களும் எப்படியாவது பெற்றடைந்தாகவேண்டும். வாழ்வின் வளங்களை மட்டுப்படுத்தும் மூன்று வாசற் காவலாளிகள் எவையெனில், (1) முறைசார் நிறுவனங்கள், (2) மனித சமூகங்கள், மற்றும் (3) புலப்படாத ஆவிகள். நபரொருவர் முற்றும் முழுவதுமாகத் தனித்துப் பிழைக்க முடியுமாக இருந்தாலே ஒழிய மற்றப்படி குறைந்தபட்சம் இவற்றுள் ஒன்றுடனாவது நல்லுறவிலே இருந்தாகவேண்டும். நல்ல நிலைப்பாட்டினைப் பேணி வளங்களைப் பெற்றடைய மக்கள் பின்பற்றவேண்டிய தத்தமது தனித்துவமான நிபந்தனைகளை (protocol) ஒவ்வொரு தொகுதியுமே கொண்டிருக்கும். உதாரணமாக, ஒவ்வொரு கலாச்சாரத் தொகுதியிலும் வாகனம் செலுத்தும்போது மக்கள் எப்படியாக வழிகாட்டுதல்களைப் பெறுவதுண்டு என்பதைப் பார்ப்போம்.

மேற்கத்தேய நபரொருவர் அநேகமாக அவரது ஸ்மார்ட் ஃபோனிலே வரைபடத்தைப் பார்த்து வழிகாட்டலைப் பெற்றடைவார். அது சட்டபூர்வமாக நிலைநாட்டப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஸ்தாபனங்களிலே சார்ந்துள்ளது. இவ்விடயத்திலே அரசாங்கம் (GPS தகவலுக்காக அமெரிக்க இராணுவம்) மற்றும் கூட்டுத்தாபனங்கள் (அப்பிள் அல்லது கூகிள்) வழிகாட்டலுக்கான அடைவுவழிகளை வழங்கும். நிறுவனங்கள் வழங்கும் சேவைகளுக்கான பெற்றடைவினைப் பேணும்படிக்கு, நபரொருவர் சட்டபூர்வமான விதிமுறைகளையும் சட்டங்களையும் பின்பற்றிடவேண்டும். ஒரு விதிமுறையை அல்லது சட்டத்தை மீறிக் குற்றமிழைத்த நபரொருவர் குறித்த நிறுவனங்களில் இருந்து அகற்றப்படுவார். மேற்கத்தேயச் சந்தைப் பொருளாதாரங்களில், தொழில்வழங்கும் கம்பனிகள்தான் பொருண்மியங்களை வழங்கும் பிரதான நிறுவனங்களாக உள்ளன; உங்களது தொழிலைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மனிதவள அலுவலரின் (HR) கொள்கைக் கைநூலைப் பின்பற்றிடவேண்டும்.

கூட்டாண்மைச் சமூகங்களில் தகவலைக் கொண்டிருப்பது நிறுவனங்கள் அல்ல, மக்களே. மத்திய ஆசியாவிலே வாழும்போது, ஒரு இடத்துக்கான வழிகாட்டலைப் பெறுவதென்பது ஒரு சமூகம்–சார்ந்த புதையல்தேடல் (treasure hunt) ஆகும். நான் அடையவேண்டிய இடத்துக்கான பொதுவான வழிகாட்டலைத்தான் எனது அயலவர் கூறுவார்: 'நதிக்கு அப்பால் உள்ள அந்தப் பச்சைத் தொழிற்சாலைக்கு அருகே உள்ளது.' பச்சைத்

தொழிற்சாலைக்கு வந்ததும் குறித்த இடம் எங்கே என நான் அங்கிருக்கும் வேறொருவரிடம் கேட்கவேண்டும். அவர் கூறும் இடத்தை அடைந்ததும் வேறொருவரிடம் கேட்கவேண்டும், எனது இடத்தை அடையும் வரைக்கும். தகவல்களைப் பெறுவதற்காக உறவுரீதியான தொடர்பிணைப்புகள் அவசியமானதாகும், கௌரவமிக்க ஒரு நற்கீர்த்தி அப்படியான அவசியமான உறவுகளை உறதிப்படுத்தும். அவமான மக்களுடன் சமூகம் தொடர்புகொள்வதோ அல்லது அவர்களுக்கு உதவுவதோ கிடையாது. குழுவுக்கு அப்பால் நபரொருவர் வாழ்வுக்கு வேண்டியதான அடிப்படையான வழங்களைப் பெறுவதென்பது கடினமானதாகும்.

ஆவிசார் கலாச்சாரங்கள் புலப்படாத ஆவிநிஜங்களைச் சார்ந்துதான் வழிகாட்டலைத் தெரிவுசெய்யும். தெய்வப்பூசாரி ஒருவரைக் கலந்தாலோசிப்பதாலோ, மத்திர வல்லமையை உச்சரிப்பதாலோ அல்லது ஆபத்தான பகுதிகளைத் தவிர்ப்பதாலேயோ உறதிப்படும் அதிசிறந்த ஆவிசார் வழியையே மக்கள் வாஞ்சிப்பதுண்டு. பயணத்தின் இலக்கு வேகம் அல்ல, மாறாகப் பாதுகாப்பே ஆகும். மானிடர்கள் அவர்களது அடைவிடத்தைப் பாதுகாப்பாக எப்படி அடைவது என்பதை ஆவிகள் மட்டுந்தான் அறியும் என்பதால், ஆன்மீக நிஜத்துடனான நல்ல உறவு, வாழ்வை வாழ்வதற்கு அத்தியாவசியமான ஒன்றாகும்.

வாழ்வில் எனக்கு வேண்டியதைக் கட்டுப்படுத்துவது யார்: முறைசார் நிறுவனங்களா, மனித சமூகங்களா அல்லது ஆவிசார் வல்லமைகளா? மக்களிடையே வளங்களின் பகிர்வினை ஒழுங்குபடுத்தும்படிக்கு சமூக – பொருளாதார குழுக்கள் பயன்படுத்தும் அறநெறி உணர்ச்சிகள்தான் குற்ற உணர்வு, வெட்க உணர்வு மற்றும் அச்ச உணர்வு ஆகியவை. வழிகாட்டலைப் பெற்றடைவதற்காக விளக்கப்பட்ட மூன்று முறைகளும் எப்படியாக மக்கள் இருக்கவேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது: குற்றவாளிகளெனக் கருதப்படாதிருக்கும்படிக்காக, மக்கள் விதிமுறைகளையும் சட்டங்களையும் கடைப்பிடிப்பதால் ஸ்தாபனங்களுக்கு முன்பாக *அப்பாவிகளாக* இருக்கவேண்டும்; அவமானப்படாதபடிக்கு, குழுமத்தின் எதிர்பார்ப்புக்களை மதித்துப் பொருத்தமான வகிபங்குகளை வகிப்பதன்மூலம் சமூகத்திலே *கௌரவமாக* இருக்கவேண்டும்; அல்லது அவர்கள் வலுவிழந்து எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களாக ஆகாதபடிக்காக முறையான நுட்பங்களையும் சடங்குகளையும் கைக்கொண்டு ஆன்மீக நிஜத்தளத்திலே *வல்லமையானவர்களாக* இருக்கவேண்டும்.

படத்திலே காட்டப்பட்ட சக்கரமானது பார்வைரீதியாக எப்படியாக நபரொருவர் (நடுவிலே தெரிபவர்) அடிப்படையான வளங்களை (வெளிச் சுற்றில் காட்டப் பட்டவை) பெற்றடைகிறார் என்பதையும், சாத்தியமான மூன்று சமூகத் தடைகளையும் காண்பிக்கிறது.




# ஒவ்வொரு கலாச்சாரமும் மானிடத் தேவைகளை எப்படிச் சந்திக்கிறது

ஒரு சமூகத்தின் பொருளாதாரத் தொகுதியானது, மீறுகிறவர்கள் பிரதானமாக அனுபவிப்பது குற்ற உணர்வா, வெட்க உணர்வா அல்லது அச்ச உணர்வா என்பதை நிர்ணயிப்பதில் செல்வாக்குச் செலுத்துகிறது. இந்த நிஜமானது கலாச்சாரப் பரிசோதனையில் (The Culture Test©) உள்ள பல கேள்விகளுக்கான அச்சாணியாக உள்ளது. கீழே உள்ள தீர்வுத் திறவுகோலானது ஒவ்வொரு கலாச்சார வகையும் அடிப்படையான தேவைகளைச் சந்திக்கும்படியாகப் பல்வேறு வாழ்க்கைச் சூழ்நிலைகளிலே எப்படித் தொழிற்படுகின்றன என்பதை விளக்குகிறதாய் உள்ளது. கலாச்சாரங்கள் எப்படியான நடைமுறைகளால் அவ்வவற்றின் உபமேற்பரப்பு மதிப்பீடுகளை (subsurface values) உள்ளடக்கியுள்ளன என்பதை இந்தப் பட்டியலானது புலப்படுத்துகிறது. இந்தப் பரிசோதனையை நீங்கள் செய்திராவிட்டால் தொடரமுன்பதாக www.TheCultureTest.com இற்கு விஜயம் செய்து அதிலுள்ள 5 நிமிட ஆய்விலே பங்கேற்கவும்.

| -- | குற்ற | அவமான | அச்ச |
|---|---|---|---|
| வழிகாட்டலைப் பெறுவதற்கு நீங்கள்: | வரைபடம் அல்லது GPSஐப் பயன்படுத்துவீர்கள் | நபரொருவரிடம் கேட்பீர்கள் | வழிகாட்டலுக்காக ஜெபிப்பீர்கள் |
| தொழிற்திறன்கள் பெறப்படுவது: | முறைசார் கல்வி | தொழில்பழகுதலும் அவதானிப்பும் | உன்னத அறிவைப் பெறுவதால் |
| நோயாளர்கள் பெறும் திறம்பட்ட சிகிச்சை: | வைத்தியரின் பரிகாரச்சிட்டை | பாரம்பரிய இற்கை நிவாரணி | சடங்காசார ஜெபங்களும் பலிகளும் |
| பாதிக்கப்பட்ட நபர்: | சட்டநீதியை நாடுவார் | பழிதீர்ப்பார் அல்லது ஒதுங்கிக்கொள்வார் | ஒரு சாபத்தை வைப்பார் |
| பிறப்படையாளம் என்பது: | தீங்கேதுமற்றது | சங்கடமான ஒரு கறை | ஒரு சகுணம் அல்லது அடையாளம் |
| தனிநபர் அறிமுகம் உள்ளடக்குவது: | முதற்பெயரும் தொழிலும் | முழுப்பெயரும் தொழிற்தரமும் | பிறப்புப்பெயரை மறைக்க ஒரு மாற்றுப்பெயர் |
| தப்புகள் பாதிப்பது தீங்கிழைத்தவரின்: | உள்ளான மனச்சான்றை | வெகுஜன நற்கீர்த்தியை | தலைவிதியை |
| குப்பைத்தொட்டி தவிர்க்ககாரணம்: | ஆரோக்கியமின்மையும் கெட்டமணமும் | மக்களை அசுத்தப்படுத்தும் | ஆவிகள் அங்கேதான் குடிகொண்டிருக்கும் |
| நல்ல வியாபாரம் ஆரம்பிக்கப் பிரதானமானது: | நல்லதோர் வியபாரத்திட்டம் எழுதுதல் | சரியான தொடர்புகளைக் கொண்டிருத்தல் | ஒரு மதச் சடங்கை அனுஷ்டித்தல் |
| மரித்த ஒருவரின் சொத்துக்கள்: | உரித்தில் எழுதப்பட்டபடி பகிரப்படும் | குடும்பத்துக்குக் கடத்தப்படும் | நபருடன் புதைக்கப்படும் |
| 70க்கு மேற்பட்டோர் சமூகரீதியாக: | பெருஞ்சுமை | மதிக்கப்படுவார்கள் | வல்லமையுள்ளவர்கள் |
| "குடும்பம்" எனும் கொள்கை உள்ளடக்குவது: | பெற்றோர், துணைவர் மற்றும் பிள்ளைகள் | சகல விஸ்தரித்த உறவுகளும் | விஸ்தரித்த உறவுகளும் மரித்த மூதாதையர்களும் |
| பெற்றோர் அநேகமாக பிள்ளைகளைக் கண்டிப்பது: | தமது சொந்த ஆவல் விருப்பங்களைப் பூர்த்திசெய்ய | சமூக எதிர்பார்ப்புகளைக் கடைப்பிடிக்க | புலப்படாத வல்லமைகளைச் சாந்திப்படுத்த |
| உண்மை எதிலிருந்து வருவதென்றால்: | விஞ்ஞானம் மற்றும் மெய்மைகள் | பாரம்பரியங்கள் மற்றும் இணக்கப்பாடுகள் | மறைபொருள்கள் (mysticism ) & அனுஷ்டிப்புகள் (pragmatism). |

| | | | |
|---|---|---|---|
| **பயணிப்பவர்கள் தேர்ந்தெடுக்கும் பாதை:** | மிகக்குறுகிய பாதை | போகும் வழியிலே குடும்பத்தினர்களை விஜயம் செய்யும்படி | "கரிய" பகுதிகளைத் தவிர்க்கும் வீதிகள் |
| **கருவுறாமை எப்படிக் கையாளப்படும்:** | மருத்துவ சிகிச்சையைக் கண்டுகொள்ளுதல் | புதியதோர் துணையை நாடுதல் | ஒரு புனித தலத்தை அல்லது நபரை விஜயம் செய்தல் |
| **பொருத்தமற்ற நடத்தை விளைவு:** | தண்டனை | ஓரங்கட்டப்படுதல் | பலவீனம் |
| **திருமணங்கள் அநேகமாக ஆரம்பிப்பது:** | திட்டமிடப்பட்ட நேரத்திலே | பிரதான நபர்கள் வந்தபின்பு | சுப வேளையில் அல்லது அதிஷ்ட நாளில் |
| **தலைவர்கள் தொடர்புபேணுவது எவருடனெனில்:** | அவரைப் பின்தொடர்பவர்கள் | செல்வாக்கான நபர்கள் | ஆன்மீக வல்லமைகள் |
| **உணவு எங்கிருந்து பெறப்படும்:** | பல்பொருள் அங்காடி | குடும்பப் பண்ணை / உள்ளூர் சந்தை | இயற்கை வனவளம் |
| **மக்கள் எதன்படி ஒழுகவேண்டும்:** | சரி தவறு | வகிபங்குகளும் எதிர்பார்ப்புகளும் | நுட்பங்களும் தந்திர உபாயங்களும் |
| **பணம் உள்ள மக்கள்:** | சேமித்து முதலீடு செய்தல் | பிறருக்கு உதவுவதன்மூலம் உறவைத் தக்கவைத்தல் | துரதிஷ்டமான தீமையில் இருந்து அதனைப் பாதுகாத்தல் |
| **விருந்தினர் எங்கே அமர்வது என்பது:** | எழுந்தமானத் தெரிவு | அந்தஸ்தையும் வயதையும் சுட்டிக்காட்டும் | பின்பு நடக்கக்கூடியதை அது பாதிக்கலாம் |
| **பரிசுத்த எழுத்தாக்கங்கள் வழங்குவது:** | வழிகாட்டலும் அறிவுறுத்தலும் | மரபுரிமைச்சொத்தும் அடையாளமும் | பாதுகாப்பும் ஆசீர்வாதமும் |
| **மக்கள் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வது:** | பொலிசாரிடமிருந்து | நண்பர்களிடமிருந்து | மாந்திரீக வழங்கங்களிலிருந்து |
| **மக்கள் எதனை நாடுவர்:** | சமத்துவமும் நீதியும் | அந்தஸ்தும் முகஸ்துதியும் | பாதுகாப்பும் சமாதானமும் |
| **தப்புகள் செய்தபின்பு மக்கள் உணர்வது:** | மனக்கிலேசம் | தாழ்வுமனப்பான்மை | இனம்புரியாத ஏக்கம் |

# சமாந்தர அகிலாண்ட நிஜங்கள்

குற்ற உணர்வு, வெட்க உணர்வு மற்றும் அச்ச உணர்வு எனும் மூவகைகள் உலகை முழுமையாக மேம்படப் புரிந்திட எமக்கு உதவிசெய்யும். இந்த மூன்று கலாச்சார வகைகளும் வேறு மூன்று அகிலாண்ட நிஜங்களுடன் தொடர்பானவை. பின்வரும் பட்டியலானது குற்ற உணர்வு, வெட்க உணர்வு மற்றும் அச்ச உணர்வு சார்ந்த கலாச்சாரங்களின் வெளிச்சத்திலே நவீன உலகின் பல்வேறு அம்சங்களை வழங்குகிறதாய் உள்ளது.

| கலாச்சாரவகை | குற்ற உணர்வு | வெட்க உணர்வு | அச்ச உணர்வு |
|---|---|---|---|
| **சமூகக் கட்டமைப்பு** | தனிநபர்த்துவம் | கூட்டாண்மை | ஆவிமார்க்கம் |
| **அமைவிடம்** | மேற்குலகு (வட அமெரிக்கா, ஐரோப்பா) | கிழக்குலகு (மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஆசியா) | தெற்குலகு (குலவினம், கரீபியன்) |
| **LMR மாதிரி (R. லூயிஸ்)** | நேரிய–செயல்வீரிய | மீள்–செயல்வீரிய | பல்வகை–செயல்வீரிய |
| **மதம்சார் அந்தஸ்து:** | கிறிஸ்தவத்துக்குப் பிந்தியது | குறைந்தபட்சக் கிறிஸ்தவம் | முளைவிட்டெழும் கிறிஸ்தவம் |
| **தூதுப்பணி அந்தஸ்து 1910 இலே % கிறிஸ்தவர்கள் 2010 இலே % கிறிஸ்தவர்கள்** | சந்திக்கப்பட்டது 95% 81% | சந்திக்கப்படவில்லை 2.7% 8.5 % | இப்போ சந்திக்கப்படுகிறது 16% 62% |
| **குடிசனத்தொகை (2010):** | 1.08 பில்லியன் | 4.37 பில்லியன் | 1.42 பில்லியன் |
| **கிறிஸ்தவ இறையியல்:** | அகஸ்தீனிய, புரட்டஸ்தாந்திய | விருத்தியாக்கப்படாத | பெந்தெகொஸ்திய, ஆவிப்பரவச |

சில பொதுப்படுத்தல்கள் நிச்சயமாகவே மிகையாக எளிமையாக்கப்பட்டுள்ளது.[12] உதாரணமாக, கனமேன்மை மற்றும் அவமானம் இயக்கப்பண்பானது தென் ஐரோப்பாவின் கலாச்சாரங்களையும் குலவின மக்கள் குழுக்களையும் கணிசமான அளவுக்கு உருவேற்றியுள்ளன. மிகவும் அகலமான தூரிகையைப் பயன்படுத்துவது நிச்சயமான புறவரைவை உருவாக்கும், ஆனாலும் நுட்ப வண்ணத்திலே குறைவுபடும். ஆனாலும் இந்த கிரகத்தின் 7.2 பில்லியன் மக்களை மூன்று வகைகளுள் ஒழுங்குபடுத்துவதானது நவீன உலகின் சில அரசியல் மற்றும் மத அம்சங்களிலே ஒளிர்வைத் தருவதாய் இருக்கும்.

கிறிஸ்தவ ஜனத்தொகைக்கும் இறையியலுக்கும் இடையிலான தொடர்புறவு தூதுப்பணிரீதியிலே கவனத்திற் கொள்ளப்படவேண்டியதாகும். அகிலாண்ட தெற்கிலே கிறிஸ்தவம் இருபதாம் நூற்றாண்டிலே காளான்களாக, ஆவிப்பரவச இறையியல் (Charismatic Theology) மற்றும் தூதியலுடன் முளைவிட்டன. ஆவிப்பரவசப் புலப்படுத்துதலானது லத்தீன் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் சபை வளர்ச்சிக்குக் *காரணமாக* இருந்துள்ளதா? அல்லது ஆவிப்பரவசம் என்பது நிலைநாட்டப்பெற்ற சபையானது அதன் சுவிசேஷத்தை அச்சம்–வல்லமை பின்புலங்களுக்கு இசைவாக்கியதால் ஏற்பட்ட *விளைவா?*

ஒருவேளை கிழக்கிலே சபையின் பிரசன்னம் எல்லைப்பட்டதாக இருப்பதற்காக காரணம் அவர்களது கனமேன்மை–அவமானக் கலாச்சாரங்களுக்குப் பின்புலமாக்கப்பெற்ற இறையியல் இல்லாதிருப்பதனால் எனலாம். பெரும்பாலும் கனமேன்மை–அவமானம் கலாச்சாரத் திசைப்படுத்தலிலேதான் அநேகமான சந்திக்கப்படாத மக்கள் குழுக்கள் உள்ளன. இந்தக் காரணத்தால், கனமேன்மை–அவமானம் கலாச்சாரங்களுக்கான ஒரு இறையியலானது, சகல ஜாதிகளிலும் இருந்து சீடர்களை ஆக்கும்படிக்கு விடுக்கப்பட்ட பெரும் தூதுக்கட்டளையை நிறைவேற்றுவதற்கு ஒருவேளை தூதுப்பணி ரீதியிலே உபாயமானதாக அமையலாம்.

# 3

# இறையியல்

குற்ற–வெட்க–அச்ச உணர்வுகளின் முப்பிரிவாக்கமானது மேலதிகமாக வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கும் இறையியயலைப் பின்புலமயமாக்குவதற்கும் ஏற்ற ஒரு கட்டமைப்பாகவும் தொழிற்படும். இந்தப் பகுதியானது வேதாகம சம்பவக் கதைகளையும் மற்றும் இறையியல் வகைகளையும் ஒவ்வொரு கண்ணோட்டத்திலுமிருந்து பகுப்பாய்வு செய்கிறதாய் உள்ளது. சுவிசேஷத்தைப் பல கோணங்களில் இருந்து ஆராய்வது கிறிஸ்தவர்களாகிய எமக்கு சுவிசேஷத்தையிட்ட முழுமையான ஒரு புரிந்தறிவைப் பெறுவதற்கு உதவிசெய்யும். ஆனாலுங்கூட வேதாகமமானது மன்னிப்பு, கனமேன்மை மற்றும் வல்லமை ஆகியவைகள் ஒன்றாகப் பின்னிப் பிணைந்துள்ளதான ஒரேயொரு சம்பவக் கதையே என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

## இரட்சிப்பின் குற்ற உணர்வு-அப்பாவித்தனம் சம்பவக்கதை

தேவன் பூரண பரிசுத்தரும் நியாயஸ்தருமாவார். அவரது வழிகள் அனைத்திலும் அவர் பரிபூரண நீதியுடன் தொழிற்படுகிறவர். அவரது பிரசன்னத்திலே பாவம் என்றுமே நுழைவதில்லை. இந்தத் தேவன் முழு உலகையுமே ஒன்றும் இல்லாமையில் இருந்து சிருஷ்டித்தார்.

தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து ஏதேன் தோட்டத்தில் வைத்தார். எந்த மரத்தின் கனியையும் புசிக்கும் சுயாதீனம் கொடுத்த அவர் ஒரு மரத்தின் கனியை மட்டும் புசிக்காதிருக்கும்படித் தெளிவாக அறிவுறுத்தியிருந்தார் – அதாவது நன்மை தீமை அறியும் அறிவின் மரம். ஆனால் தேவனின் கட்டளையை ஆதாமும் ஏவாளும் மீறியபோது, அதன் விளைவுகளை அவர்கள் அனுபவித்தார்கள் – சரீரக மற்றும் ஆன்மீக மரணம். அவர்களது மீறுதல்களுக்கான ஒழுக்காற்று அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அவர்களது செயற்பாட்டின் நிமித்தமாக மக்கள் பாவத்தின் நிலைமையிலே பிறப்பதும், இயல்பாகவே தேவனையும் அவரது நியாயப்பிரமாணங்களையும் எதிர்ப்பதும் விளைவாகியது. பாவம் மக்கள் அனைவரையும் பரிசுத்த தேவனிடமிருந்து வேறுபிரிக்கிறது. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்டனர்.

தேவன் இஸ்ரவேலுக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்திருந்தார். அதற்கு இரண்டு பிரதான அம்சங்கள் இருந்தன. முதலாவதாக, நியாயப்பிரமானமானது மக்களுக்கு அவர்களது அறநெறியின் போதாமையையும் இரட்சிப்புக்கான அவர்களது தேவையையும் வெளிப்படுத்தியது. தமது சொந்தப் பெலத்தால் தேவனுடைய கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றிட இஸ்ரவேலர்களால் கூடாதிருந்தது. மானிட எத்தனங்கள் எதுவுமே என்றுமே பரிசுத்தத்தின் தெய்வீக நியமங்களை எட்ட உதவாது. இஸ்ரவேலின் சரித்திரமானது மீண்டுமீண்டுமான கீழ்ப்படியாமைகளையும் அவற்றின் தண்டனைகளையும் கொண்டுள்ளது.

ஆனால் நியாயப்பிரமாணம் பாவங்களின் மன்னிப்புக்கான வழங்கல் ஏற்பாடுகளையும் கொண்டது. தமது மீறுதல்களுக்கான குற்ற நிவாரண பலியைச் செலுத்தும் ஒரு வழிமுறையைத் தேவன் அவர்களுக்கு வழங்கினார். இஸ்ரவேலின் பலித்தொகுதியானது பழுதேதும் இல்லாத மிருங்களின் சடங்காசாரப் பலியிடுதலினூடான பாவமன்னிப்பை அனுமதித்திருந்தது. இஸ்ரவேல் எகிப்திலிருந்து விடுபட்ட புறப்பட்ட யாத்திரையின் பஸ்கா, தேவனுடைய உக்கிர கோபத்திலிருந்து இரத்தம் சிந்துதல் எப்படியாக மக்களை மீட்கும் என்பதை நிழலிட்டுக் காட்டுவதாய் இருந்தது.

தேவனுடைய ஏக மைந்தனான இயேசுக்கிறிஸ்து மானிட பாவங்களை எடுத்துப்போடும் பரிபூரண பலியாகினார். இயேசு பரிபூரணமான பாவமற்ற வாழ்வை வாழ்ந்தவர். தன்னிலே பாவம் எதுவும் இல்லாதிருந்த அவரால் எமது பாவங்களைத் தன்மீது ஏற்றிடக்கூடுமாய் இருந்தது. இயேசுவே தேவனுடைய பரிபூரண ஆட்டுக்குட்டி. அவர் எமது மீறுதல்களுக்காகக் காயப்பட்டார், எமது பாவங்களின் ஆக்கினையைத் தன்மீது சுமந்தார். சிலுவையிலே இயேசுவின் மரணம் எமது மீறுதல்களை மன்னிப்பதுடன், எமக்கு எதிராக இருந்த கடன்பாட்டின் பதிவினை ரத்துசெய்துவிட்டது. பின்பு இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்து பரமேறிச்சென்றார்.

இப்போது இயேசு தனது சபையை தமது பாவங்களில் இருந்து மனந்திரும்பியவர்கள் மற்றும் இயேவில் நம்பிக்கை கொள்கிறவர்களைக் கொண்டு கட்டிவருகிறார். இயேசுவின் பின்பற்றுனராய் ஆவதற்கு ஒருவன்

பரிசுத்த ஆவியால் மனதிலே குத்தப்பட்டவனாக, தேவனுக்கு முன்பாகத் தனது பாவங்களின் நிஜத்தை இனங்கண்டு அறிக்கையிடவேண்டும். இயேசு தேவனுடன் எம்மை ஒப்புரவாக்குகிறவர் என்பதால், அறநெறி பூரணத்துவத்தை நோக்கியதான எமது எத்தனங்கள் வீணானவைகளே. தேவனிடம் இருந்து பெறும் கிருபையான கொடையான விசுவாசத்தால் நாம் மீட்கப்படுகிறோம், எமது சொந்த நற்கீர்த்திகளால் அல்ல. எமது பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக நாம் பிறரை மன்னிக்க அழைக்கப்படுகிறோம்.

தேவன் பூமிக்கு மீள வரும்போது, தேவன் அனைத்து மக்களையும் நீதியாக நியாயந்தீர்த்து பாவத்தைத் தண்டிப்பார். துன்மார்க்கர் நரகத்துக்குள் சாபமிடப்படுவார்கள், அத்துடன் நீதிமான்களோ பரலோகத்திலே தேவனுடன் நித்தியத்தைக் கழிப்பார்கள்.

# இரட்சிப்பின் அவமான உணர்வு - கனமேன்மை சம்பவக்கதை

தேவன் நித்தியம் அனைத்திலும் முழு மகிமையுடனும் கனமேன்மையுடனும் இருக்கிறவர். அவர் கனமேன்மையான ராஜா, தனது முழுக்குடும்பத்துக்குமே வழங்கிடும் பிதா. அவர் தூய்மையும், உண்மையும் மகிமையுமானவர் – அனைத்துக் கனமேன்மைக்கும ஊற்று அவரே.

அவரது கனமேன்மையைத் தெரியப்படுத்துவதற்குத் தேவன் உலகத்தைப்படைத்து அவர் பேச உயிர்கள் உருவாயின. மண்ணில் இருந்து தேவன் ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கி அவர்களைக் கனத்தாலும் மகிமையாலும் முடிசூட்டினார். தேவனுடைய கனம்பெற்ற இணை ஆளுனர்களாய் சிருஷ்டிகள்மீது அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். தேவனுடைய பிள்ளைகளாக அவர்கள் தேவனுடைய நாமத்தின் கீழ் வாழ்ந்தனர். ஆதாமும் ஏவாளும் தேவனிடமிருந்து மேன்மைமிக்க அடையாளப்படுத்துதலைப் பெற்றுக் களிகூர்ந்தனர். அவர்கள் நிர்வாணிகளாய் நடந்துதிரிந்தாலும் அவமானப்படவில்லை.

ஆனால் ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு விசுவாசமானவர்களாய் இருக்கவில்லை. சுயமாகச் சம்பாதிக்கும் கனமேன்மையைப் பற்றிக்கொள்வதற்காகத் தெய்வீகக் கனமேன்மையை அவர்கள் உதாசீனப்படுத்தினர். தேவனுக்கு உண்மையில்லாதிருந்தமை அவமானத்தை உருவாக்கியது, எனவே அவர்கள் மறைந்திருந்து தம்மை மறைத்துக்

கொண்டனர். மேலுமாக அவர்களது பாவம் தேவனைக் கனவீனப்படுத்தியது. தேவன் முகங்கோணினார். ஆதாமும் ஏவாளும் எல்லார்மீதும் அவமானத்தைக் கொண்டுவந்ததால், தனது மாண்பைப் பேணும்படிக்குத் தனது பிரசன்னத்தை விட்டு அவர்களை அவர் துரத்திவிட்டார்.

ஆதாமின் வழித்தோன்றல்களாக நாமும் அவர்களது மூல்ம அவமானத்தைச் சுதந்தரித்துக்கொண்டோம். பின்பு எமது சொந்த அசுத்தமும் விசுவாசமற்றதுமான இதயம் அவமானத்தை அதிகரிக்கிறது. இந்த அவமானம் எமது அடையாளத்தையும் நடத்தையையும் உருவேற்றுகிறது. பாவம் (அதாவது துஷ்பிரயோகம், கோபம், வம்பளப்பு, பெருமை, இனத்துவேஷம் வன்முறை, யுத்தம் போன்றவைகள்) பெரும்பாலுமே எமது அவமானத்தை மூடவும் கனமேன்மையை உருவமைத்திடவும் நாம் மேற்கொள்ளும் போலி முயற்சிகளாகும். அநேகமாகப் பிறரை அவமானப்படுத்துவதாலோ அல்லது எமது சொந்தக் குழுவின் மேன்மையைப் பெருமைபேசுவதாலோ நாம் போலியான அந்தஸ்தை உற்பத்தியாக்குகிறோம். எமது ஆன்மீக முகத்தை, குடும்பத்தை, பெயரை மற்றும் அந்தஸ்தை இழந்துபட்ட நிலையில் எமது வாழ்வானது போலியானதோர் கனமேன்மையைக் கட்டியெழுப்பும் ஒரு தொடர்முயற்சியாக உள்ளது. பாபேல் கோபுரக் கதை புலப்படுத்துவதுபோல, மக்கள் தம்மை உயர்த்திடவும் அவர்களுக்குப் பெயரை உண்டாக்கவும் நாடுகின்றனர். எமது அவமானமானது வெட்கக்கேடான நடத்தைக்குக் காரணமாகி தேவனைக் கனவீனப்படுத்துகிறது.

மானிடக் கனமேன்மையை மீள்சீரமைத்திடத் தேவன் ஒரு திட்டத்தை ஆரம்பித்தார். மேன்மையான பெயர் புகழுடனும், நிலம், ஆசீர்வாதம், தேசம் மற்றும் அநேக பிள்ளைகளுடனும் கனமேன்மைப்படுத்திடும்படிக்கு அவர் ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கை பண்ணினார். பெரும் ஜாதியாக ஆபிரகாமின் குடும்பம் அனைத்து ஜாதிகளுக்கும் ஆசீர்வாத அல்லது கனமேன்மைக் கருவிகளாக அமையும். ஆபிரகாமின் வமசத்தினர் எகிப்தின் அடிமைத்தனத்திலே வேதனைப்பட்டபோது, அந்த வெட்கக் கேடான அடிமைத்தனத்தில் இருந்து தேவன் அவர்களை விடுவித்தார். இஸ்ரவேல் பாராட்டுப்பெற்ற ஒரு ஜாதியாக, தேவனுடைய கண்மணியாக, மற்றும் அவரது இதயத்துப் பொக்கிஷமாக இருந்தது.

இஸ்ரவேல் தேவனுடைய தோறாவிற்கு (மோசேயின் ஆகமங்கள்) விசுவாசமாயும் கீழப்படிவாயும் இருந்து தேவனைக் கனமேன்மைப்படுத்தினால், இஸ்ரவேலைத் தான் கனமேன்மைப்படுத்துவதாக விசேஷ உடன்படிக்கையைத் தேவன் செய்துகொண்டார். தோறாவின் விதிமுறைகள் இஸ்ரவேலின் அசுத்தத்தைச் சுத்தமாக்கி, அவர்களை சமூகமாக மீள்சீரமைப்பதற்கு

அனுமதித்தது. கனமேன்மையை உருவாக்குவதை உடன்படிக்கையின் நோக்காகத் தேவன் கொண்டிருந்தாலுங்கூட, இஸ்ரவேலின் அடிக்கடியான விசுவாசமில்லாத் தன்மைகள் ஜாதிகள் நடுவிலே தேவனுடைய நாமத்திற்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தியது. பிற தேவர்களிடம் திரும்புகையில் இஸ்ரவேல் தேவனுடைய முகத்தை அலங்கோலப்படுத்தி, அவருக்குத் தகுதியற்ற ஒரு துணைவியாக இருந்துவந்தாள். இஸ்ரவேலின் தெரிவானது அவர்களைத் தமது மொழியின மையப்படுத்தலுக்கு (ethnocentrism) – குழுநீதிக்கு இட்டுச்சென்றது. புறவினத்தார் தரங்கெட்டவர்களும் தேவனுடைய குடும்பத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர்களுமாக உள்ளதாக அவர்கள் நம்பினார்கள். ஆதாமைப்போல, இஸ்ரவேல் கனமேன்மைக்காகத் தெரியப்பட்டது, ஆனாலும் வெட்கக்கேடான நாடுகடத்தலுக்கு உள்ளாகினார்கள். இஸ்ரவேலின் கதையானது தேசிய அவமானத்திலே நிறைவுற்றாலுங்கூட, வாக்குறுதிகளும் தெய்வீக உயர்த்துகைகளின் தருணங்களும் (அதாவது ருத், தாவீது, தானியேல், எஸ்தர்) மானிட குடும்பத்தை அவமானத்தில் இருந்து மீட்டு அதன் கனமேன்மையை மீள்சீரமைக்கும் மாபெரும் இடைப்படுதலை நிழலிட்டுக்காட்டியது.

தேவனுடைய மைந்தனாக இயேசு பரலோகத்தில் நித்தியமாக மகிமையும் கனமேன்மையும் கொண்டிருந்தாலுங்கூட, அவமானத்தில் இருந்து மக்களை மீட்கும்படிக்கு அவர் மனிதராகித் தாழ்ந்துவந்தார். அவரது அற்புதமான குணப்படுத்துதல்களும் அவரது புரட்சிகரமான பந்தி ஐக்கியமும் ஓரங்கட்டப்பட்ட மக்களின் மாண்பையும் கனமேன்மையையும் மீள்சீரமைத்தது. எவ்வளவாக இயேசு தெய்வீகக் கனமேன்மை கொண்டிருந்தாரெனில், அவரைத் தொட்டவர்கள் சுத்திகரிகப்பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அவரது போதனைகள் சத்தியத்தையும், கனமேன்மையின் நித்திய நியமத்தையும் பிரகடனம் செய்தது. மக்களை அவர்தம் புகழ்ச்சி இகழ்ச்சியைச் சாராமல் நேசித்தமையாலும் ஏற்றுக்கொண்டமையாலும் இயேசு சமூகத்தின் போலியான கனமேன்மை நியமங்களுக்குக் குழிபறித்து, மனுக்குலத்துக்குத் தெய்வீகக் கனமேன்மையை வழங்கினார். இயேசுவின் வாழ்க்கையானது தேவனை முற்றுமுழுதாக மேன்மைப்படுத்தியது.

ஆனால் இயேசுவின் ஊழியம் ஸ்தாபிக்கப்பெற்ற தலைவர்களின் பூலோகக் கனமேன்மையை அச்சுறுத்தியது. எனவே அதற்குப் பிரதியுத்தரமாக அவர்கள் இயேசுவைக் கொடூரமாயும் பகிரங்கமாயும் அவமானப்படுத்தினார்கள். இயேசு கைதுசெய்யப்பட்டு, ஆடை களையப்பட்டு, பரியாசம் பண்ணப்பட்டு, கசையால் அடிக்கப்பட்டு, துப்பி உமிழப்பட்டு, சிலுவையிலே ஆணிகளால் கடாவப்பட்டு அனைவருக்கும் முன்பு நிர்வாணியாகத் தொங்கினார். அவர் அனைத்து

அவமானங்களையும் உண்மைத்தனத்தோடு சகித்து அதன் வல்லமையை முறித்துப்போட்டார். சிலுவை தேவனுடைய கனமேன்மையை மறுசீரமைத்து எமது அவமானத்தை அகற்றிப்போட்டது. கவிழ்ந்த முகம் மீள்சீரமைவாக நிமிர்ந்தது.

பின்பு தேவன் இயேசுவின் அவமானத்தைச் சகித்த மரணத்தை அவரை மகிமைக்கு உயிர்ப்பித்ததனூடாகப் பகிரங்கமாக அங்கீகரித்தார். இப்போது இயேசு எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தோடுகூட தேவனுடைய கனமேன்மையான வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார். ஆதாமும் இஸ்ரவேலும் தோல்வியுற்றிருக்கையிலே, இயேசுவோ மெய்யான மனிதனாக வெற்றி சிறந்தார்; அவரது வாழ்வு தேவனையும் மானிடக்குடும்பத்தையும் கனமேன்மைப்படுத்தியது.

இயேசுவுக்குத் தமது ராஜவிசுவாசத்தை வழங்குபவர்கள் புதியதோர் அந்தஸ்தைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களது அவமானம் மூடப்பட்டு, அவர்களது கனமேன்மை மீள்சீரமைக்கப்பெற்றது. புதிய அந்தஸ்துக்காக இயேசுவில் முழுமையாக நம்பிக்கை கொள்வதற்கென சமூக ஆட்டிப்படைத்தல், அந்தஸ்தைக் கட்டமைத்தல், மற்றும் தலைகவிழாது சமாளித்தல் போன்றதான விளையாட்டுக்களை மக்கள் வெறுத்தொதுக்கிடவேண்டும். தேவனுடைய குடும்பத்து அங்கத்துவமானது ஒருவரது மொழியினம், நற்கீர்த்தி, அல்லது சடங்காசார சுத்தம் ஆகியவற்றில் சார்ந்ததல்ல, மாறாக சிலுவையில் அறையப்பட்ட மேசியாவுக்கான அவரது குடும்ப விசுவாசத்தனத்திலே சார்ந்ததாகும். தேவன் எமது பழைய அந்தஸ்தை அசுத்தமாக, தகுதியற்றதாக, மற்றும் இழிந்த புறம்போக்காகக் கருதி அதனை தூய, தகுதியான, கனமேன்மையான பிள்ளைகளெனும் அந்தஸ்தினால் பிரதீயிடு செய்கிறார். கிறிஸ்துவின் அவமானச் சிலுவைவரை அவரைப் பின்தொடர்பவர்கள் உயிர்த்தெழுதலின் மகிமைக்குள்ளும் அவரைத் தொடர்வார்கள்.

தேவனுடைய குடும்பத்துக்குள் வரவேற்கப்படுதலானது வேறு குழுக்களை வரவேற்று ஏற்றுக்கொள்வதற்கு மக்களை அனுமதிக்கிறதாயுள்ளது. கிறிஸ்தவர்கள் தேவனுடைய நித்திய கனமேன்மையையும் அவரது வலுவேற்றும் ஆவியையும் கொண்டவர்களாதலால், பிறரைக் கனப்படுத்தி தேவனை மகிமைப்படுத்தக்கூடியவர்களாக உள்ளனர். இயேசுவின் மீள்வருகையின்போது, அவிசுவாசிகள் லௌகீக கனமேன்மைகள் யாவுமே களையப்பெற்றவர்களாக நித்திய அவமானத்துக்குள் தள்ளப்படுவார்கள்; விசுவாசிகளோ தேவனுடைய மகிமை அனைத்து சிருஷ்டிப்பையும் நிரப்புவதுபோல நித்திய கனமேன்மையான கிரீடங்களைப் பெறுவார்கள்.[13]

# பிரதானமான அவமான உணர்வு - கனமேன்மை வசனங்கள்

ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாய் இருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள் (ஆதி. 2:25)

எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர்களாகி(னார்கள்) (ரோமர் 3:23)

பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே நீ இலச்சை அடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய் (ஏசா. 54:4)

என் இரட்சிப்பும் என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது (சங். 62:7)

அவர் சிறியவனைப் புழுதியில் இருந்து எடுத்து, எளியவனைக் குப்பையில் இருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடு உட்காரவும் மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார் (1 சாமு. 2:8)

அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாய் இருந்தார்; அவரைவிட்டு நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற் போனோம் (ஏசா. 53:3)

இயேசு தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபி. 12:2)

அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப். 2:8–9,11)

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று வேதம் சொல்லுகிறது (ரோமர் 10:11)

அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:22)

அதின்மேல் (மூலைக்கல்) விசுவாசமாய் இருக்கிறவன் வெட்கப்படுவதில்லை ... விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது ... நீங்களோ ...

தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாய் இருக்கவில்லை. (1 பேதுரு 2:6–10)

கனமேன்மையின் சம்பவக் கதைகள்: ஆதாம் (ஆதி. 2), ருத் மற்றும் நகோமி (ருத்), இஸ்ரவேல் (எசேக். 16), அன்னாள் (1 சாமு. 2), தாவீது (2 சாமு. 7), யோபு, மேவிபோசேத் (2 சாமு. 9), எஸ்தர், சமூகத்தால் ஒதுக்கப்பட்டோர் (லூக். 14), ஊதாரி மகன் (லூக். 15) மற்றும் இயேசு (பிலிப். 2:5–11)

# இரட்சிப்பின் அச்ச உணர்வு - வல்லமை சம்பவக்கதை

ஆதியிலே சிருஷ்டிகரான தேவன் உலகத்தை அவரது வல்லமையான வார்த்தையினால் உண்டாக்கினார். வானங்கள் மற்றும் பூமி மீதும் அனைத்து சிருஷ்டிப்புகள்மீதும் தேவன் ராஜரீகம் கொண்டவர். அன்பிலே அவர் பூரண அதிகாரத்துடனும் வல்லமையுடனும் ஆளுகை செய்கிறவர், சிருஷ்டிப்பு அவரது பராக்கிரமமிக்க வலிமையைப் புகழ்கிறது.

உலகத்தைத் தனது ராச்சியமாகப் படைத்தபின்பு, அனைத்து சிருஷ்டிப்புகள் மீதும் ஆளுகை செய்யும்படியாகத் தேவன் ஆதாமை நியமித்தார். ஆதாம் தேவனுடைய இணை–ஆளுனராக, சிருஷ்டிப்பின் ராஜகுமாரனாக இருந்தான். தேவனுடைய சிருஷ்டிப்பை ஆளும் மேலாண்மை அவனுக்கு வழங்கப்பட்டது, மிருகங்களுக்குப் பெயரிடும் அவனது உரிமையால் இது அடையாளப்படுத்தப்படுகிறது. ராஜரீக ராஜா என்ற ரீதியிலே, தனது உலகத்தை ஆளும்படிக்குத் தேவன் மனுக்குலத்தை நியமித்தார்.

ஒரு கட்டத்திலே, தேவனுடைய ராஜரீக ஆட்சிக்கு எதிராக ஆன்மீகத் தேவதூதர்கள் கலகம் செய்தனர். எதிரியாகிய சாத்தான் அந்தக் கிளர்ச்சியை வழிநடாத்தினான். பிசாசு மனுக்குலத்தைத் தனது ஆட்சிக்குக்கீழ் கொண்டுவருவதனூடாக தனது சட்டவிரோத வல்லமையை விஸ்தரித்திடத் திட்டமிட்டான். தந்திரமான சர்ப்பம் ஆதாமையும் ஏவாளையும் நயவஞ்சமாகத் தூண்டி தேவனுடைய ராஜ்யத்தை விட்டுத் தனது ஆட்சிக்குள் இழுத்துவிட்டான். கிளர்ச்சிப் படைகள் மனுக்குலத்தைத் தம்வயப்படுத்தின. ஆதாமின் குடும்பம் இந்த உலகில் கொண்டிருந்த அதன் வல்லமை மற்றும் அதிகாரத்தின் அந்தஸ்தை இழந்தது.

*நடப்பின்படி* இப்போது சாத்தானே ஆளுகை செய்பவன். அவன் புதிய ராஜகுமாரனானான்; நாம் அவனது ராஜ்யத்திற்குள் பிறந்தோம். சாத்தானால்

மக்களின் கண்கள் குருடாக்கப்பட்டு இதயங்கள் சிறைப்படுத்தப்பட்டன. பாவம், ஆன்மீக தாக்குதல், மற்றும் விக்கிரக ஆராதனை என்பன மனித ஆன்மாக்களை இருளின் படைகளுக்கு அடிமைப்படுத்தியது.

தனது ராச்சியத்தின்மீது அறுதியான ராஜரீகத்தை மீள்சீரமைக்கும்பொருட்டாக, ஆன்மீகப் போராட்டத்திலே தனது விசேஷ கருவியாக இருக்கும்படியாக இஸ்ரவேலைத் தேவன் தெரிந்துகொண்டார். இஸ்ரவேலுடனான உடன்படிக்கை உறவின் ஊடாக, அனைத்து ஜாதிகள் மீதுமான தனது ஆதிக்கத்தைத் தேவன் விஸ்தரிப்பார். இஸ்ரவேல் எகிப்தினால் அடிமைப்படுத்தப்பட்டபோது, பார்வோனின் அடிமைத்தளையில் இருந்து அவர்களை விடுவிக்கும்படியாக எகிப்தியத் தேவர்களுடன் அவர் எதிர்த்துநின்றார். புறப்படுதல்யாத்திரையானது அனைத்து மக்களுக்கும் தேவனுடைய வல்லமையைப் புலப்படுத்தியது.

தேவன் ஒரு பராக்கிரமசாலி, தீமை மீதான அவரது பரலோக வல்லமையானது பூலோக வெற்றியாகத் தென்பட்டது. இஸ்ரவேல் தேவனிலே தங்கியிருந்தபோது, அவர்களது இராணுவ நிலைமை பாதகமானதாய் இருந்தபோதுங்கூட வெற்றியை வழங்கினார். ஆனால் சீக்கிரத்திலேயே அவர்கள் தப்பான இடங்களிலே வல்லமையை நாடத் தொடங்கினார்கள். விக்கிரக ஆராதனை மற்றும் தந்திரமந்திர வழக்கங்கள் போன்றவைகளிலே போலித்தேவர்களின் தூண்டற்சோதனைகளுக்கு இஸ்ரவேலர் இரையானார்கள். ஆசீர்வாதத்துக்கும் பாதுகாப்புக்கும் சேனைகளின் கர்த்தரில் தங்கியிருப்பதற்குப் பதிலாக அவர்கள் கானானியத் தேவர்களுடனும் மற்றும் பெரும் ஜாதிகளின் அதிகாரிகளுடனும் கூட்டுச்சேரத் தொடங்கினார்கள். கானானியத் தேவர்களுக்கு மேலாகத் தேவனின் மேலாண்மையினைத் தீர்க்கதரிசிகள் பிரகடனப்படுத்தியதுடன் புலப்படுத்தவும் செய்தனர், ஆனாலும் சாத்தானின் செல்வாக்கிலிருந்து விடுபடுவதற்கு இஸ்ரவேலர்கள் தொடர்ந்தும் பலமிழந்தவர்களாகவே இருந்தார்கள்.

தேவனுடைய விடுவிக்கும் வல்லமையானது இயேசுவில் மனுவுருவானது. நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த தேவனுடைய ராச்சியத்தை அவர் ஸ்தாபித்துவைத்தார். தேவனுடைய ஆவியினாலே முழுவதுமாக வலுவூட்டப் பெற்றவராக, தனக்கு இணை–ஆளுனராக விளங்கும்படி சாத்தான் வழங்கிய வழங்குதலுக்கு எதிர்த்து நின்று, சாத்தானின் ராச்சியத்தைக் குலைத்துப்போடும்படி தேவனுடைய தூதுப்பணிக்கு அவர் தன்னை அர்ப்பணித்தவராகத் தொடர்ந்தார். முன்னெப்போதுமே இல்லாத ஒரு அளவிலே, சாத்தானால் கைதிகளாகப் பீடிக்கப்பட்டிருந்தவர்களை இயேசு விடுவித்தார். சாத்தானின் பிடிக்குள் உள்ள மக்களை விடுவிக்கும்படியாக சுகவீனர்களை சொஸ்தமாக்குவதாலும், மரித்தவர்களை உயிர்ப்பித்ததாலும்,

பிசாசுகளைத் துரத்தியதாலும் இயேசு பெயெல்செபூலை நிராயுதபாணியாக்கினார். தேவன் அவரோடு கூட இருந்ததால், பிசாசின் வல்லமையின் கீழ் இருந்த அனைவரையுமே இயேசு விடுவித்தார்.

தேவமைந்தனான அவரைக் கொன்றொழித்துவிட்டால் உலகின்மீதான தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என வல்லாதிக்கங்கள் நினைத்தன. அவர்களது திட்டம் அவர்களையே சுட்டது. இயேசுக் கிறிஸ்துவின் மரணந்தான் சகல தீய வல்லாதிக்கங்களுக்குமான மரண அடியாக விழுந்தது. சிலுவை சகல அதிகாரங்களையும் வல்லாதிக்கங்களையும் நிராயுதபாணிகளாக்கி வெளியங்கமாக அவற்றின்மீது வெற்றி சிறந்தது. பின்பு தெய்வீக வல்லமையின் இறுதியான புலப்பாடாகத் தேவன் இயேசுவை உயிர்ப்பித்தார். மரணத்தில் இருந்து உயிர்த்த இயேசு சகல அதிகாரங்களுக்கும் ஆட்சிகளுக்கும் மேலான வல்லமையையும் ஆளுகையையும் கொண்ட நிலைக்கு உயர்ந்தார்.

மக்கள் இப்போது இருண்ட வல்லமைகளை விட்டுத் திரும்பி, இயேசுவே கர்த்தர் எனக் கீழ்ப்படியவேண்டும். இயேசுவிலே விசுவாசிகள் இருளின் ராச்சியத்தில் இருந்து வெளிச்சத்தின் இராச்சியத்துக்கு இடமாற்றப்பட்டவர்கள். தேவன் எங்களைக் கிறிஸ்துவுடனேகூட எழுப்பி, பரலோக நிஜங்களிலே எம்மை இருத்துகிறார், அதனால் இதர அனைத்து அதிகாரங்களுக்கும் மேலாக நாமும் வல்லமையும் ஆளுகையும் கொள்ளத்தக்கதாக உள்ளது. தேவனுடைய கிருபையானது உலகத்திலே எமது அதிகாரத்துவ நிலைமையை மீள்சீரமைக்கிறது. நாம் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்கள்.

தேவனுடைய ஆவியைத் தொடர்ச்சியாகப் பெற்றடையத்தக்கதாக உள்ளதால் நாம் சாத்தானுக்கு எதிரகத் திடமாக நிற்கிறோம். சாத்தான் கர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடித் திரிகையிலே, எமது அடையாளத்தையும் தேவனைடய அபிஷேகிக்கப்பட்ட அதிகாரத்தையும் நாம் உறுதிசெய்துகொள்ளும்போது, இயேசு எம்மை துன்மார்க்கச் செல்வாக்கில் இருந்து கேடயத்தைப்போலப் பாதுகாக்கிறார். தேவன் கிறிஸ்தவர்களை பரலோக நிஜங்களில் உள்ள ஒவ்வொரு ஆசிர்வாதத்தாலும் ஆசீர்வதிக்கிறார், மந்திர தந்திரங்கள் மற்றும் சூனியங்களை அவர் ஆவிக்குரிய வீணானவைகளாகத் தீர்க்கிறார். கிறிஸ்தவர்கள் விசுவாசத்திலும் அன்பிலும் தேவனுடைய ஆவியால் நடக்கும்போது, நாம் எதிரியைத் தோற்கடித்து, அடிமைப்படுத்தும் பாவங்களையும் உரிந்துபோடுகிறோம். தேவன் சாத்தானின் வல்லமைகளைக் கட்டும்போது அந்த யுத்தம் முடிவடைந்து, அதன்பின் அவர் தனது ஜனங்களுடன்கூட நித்தியம் அனைத்திற்கும் தனது சிங்காசனத்தில் இருந்து உலகை ஆட்சிசெய்வார்.[14]

# பிரதான அச்ச உணர்வு - வல்லமை வசனங்கள்

கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்; வானத்திலும் பூமியிலும் உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் யார்? (உபா. 3:24)

தேவனுடைய சாயலாய் இருக்கிற கிறிஸ்துவின் மகிமையுள்ள சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாய் இராதபடிக்கு, இந்தப் பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். (2 கொரி. 4:4).

பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் (1 யோவான் 3:8)

நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே (மத். 12:28)

(இயேசு) துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கக் கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோசே. 2:15)

பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாய் இருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினால் அழிக்கும்படிக்கும், ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்துக்கு உள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார் (எபி. 2:14–15)

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்படுத்தினவருமாய் இருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் (கொலோசே. 1:13)

தாம் கிறிஸ்துவை மரித்தோரில் இருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவதிதன் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கும், அவர் உங்களுக்குப்

பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன். எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபேசியர் 1:19–21, ஒப்பிடுக 6:10–18)

ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இந்தப் பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களில் உள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6:12)

சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின்கீழ் நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே இருப்பதாக (ரோமர் 16:20)

வல்லமையின் சம்பவக் கதைகள்: விடுதலை யாத்திரை (யாத். 15), எலியா (1 ராஜா. 18), இயேசுவின் சோதனை (லூக்கா 4), கெனசரேத்தூரான் (மாற்கு 5), எபேசு (அப். நட. 19), யுத்தவீரன் (வெளி. விசேஷம் 19).

# ஏதேன் தோட்டமும் பாவமும்

அகிலாண்டக் கலாச்சாரங்களில் பிரசன்னமாயிருக்கும் குற்ற உணர்வு, அவமானம் மற்றும் அச்சம் ஆகியவை எம்மைத் திகைக்க வைக்காது. அவை அனைத்துமே ஆதியாகமம் 3 ம் அதிகாரத்திலே இடம்பெற்ற முதற் பாவத்தின் விளைவுகளே. தேவனுடைய 3 பரிமாண இரட்சிப்பின் வேதாகம சம்பவக் கதையைப் புரிந்துகொள்வதற்கு மனுக்குலத்திலுள்ள பாவத்தின் பல்வேறு பரிமாணங்களை நாம் முறையாக இனங்கண்டுகொள்ளவேண்டும்.

வீழ்ச்சியைத் தொடர்ந்த உடனடி நிகழ்வுகளாய் ஆதாம் மற்றும் ஏவாளின் கண்கள் திறக்கப்பட்டன. அவர்கள் நன்மை தீமையை, சரி பிழையை அறிந்துகொண்டார்கள். அவர்களது புதிதாகக் கண்டுகொண்ட அறிவானது தேவனுடைய கட்டளையை மீறிய குற்ற உணர்வை அவர்களிலே வருவித்தது. தோட்டத்தின் மத்தியில் உள்ள அந்த மரத்தின் கனியைப்

புசிக்கவேண்டாமெனத் தேவன் அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார், ஆனாலும் ஏதேன் தோட்டத்தில் இருந்த ஒரேயொரு விதிமுறையை அவர்கள் மீறினார்கள். எனவே அவர்கள் தமது அப்பாவித்தனத்தை இழந்து குற்ற உணர்வடைந்தனர். சரி பிழை என்பவை அவர்களது மனச்சாட்சிகளுள் உள்ளகப்படுத்தப்பெற்று, அவர்கள் குற்றவாளிகளாக உணர்ந்துகொண்டனர். ஆதாம் மற்றும் ஏவாளின் மீறுதலானது சரித்திரம் முழுவதிலுமாக மனுக்குலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது; பாவ ஜனங்கள் தேவனில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டு, தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றிடும் ஆற்றலற்றவர்களாக இருந்தார்கள். பாவம் செய்யும் குற்றமுள்ளவர்களாக நாம் யாவரும் இருந்தாலுங்கூட, தனது ஜனங்களுக்கான மன்னிப்பின் வழிமுறையைத் தேவன் வழங்குகிறார்.

ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமையானது உலகத்துக்கு அவமானத்தையும் அறிமுகப்படுத்தியது. தமது சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படியாது போனபின்பு, ஆதாமும் ஏவாளும் தம்மை அத்தி இலைகளால் மறைத்துக்கொண்டனர். அவர்கள் தாம் உள்ளபடி காணப்படுவதை விரும்பவில்லை. அவர்கள் தாம் மதிப்பற்றவர்களெனக் கருதிச் சங்கடப்பட்டார்கள். அவர்கள் பாவம் செய்யமுன்பு, ஆதாம் ஏவாள் இருவருமே "நிர்வாணியாக இருந்தும் வெட்கப்படவில்லை" (2:25), ஆனால் இப்போதோ அவர்கள் நிர்வாணியாக வெட்கப்பட்டார்கள். தேவன் தோட்டத்தில் நடந்தபோது, முதற் தடவையாக அவர்கள் ஒழிந்துகொண்டார்கள். தமது செயல்கள் மாத்திரமன்றி தமக்குள்ளேயே ஏதோ தவறு நிகழ்ந்துவிட்டதை அவர்கள் உணர்ந்தார்கள். ஆதாமும் ஏவாளும் அடைந்த அவமானம் தனிப்பட்ட பிரத்தியேக உணர்வல்ல, ஆனால் நோக்கவிளைவுள்ள ஒரு நிஜம். ஏனைய சிருஷ்டிகளுக்கு முன்பாக அவர்கள் தமது முகத்தையும் அந்தஸ்தையும் இழந்தவர்களாக, வேதனை, பலவீனம், அசுத்தம் ஆகியவற்றுடன் தொடர்புபடலாயினர். மரணத்தின்போது, மனுமக்கள் நிலத்தின் தூசிக்குத் திரும்புவார்கள். தேவனைக் கனவீனப்படுத்திய விசுவாசமில்லாத பிள்ளைகளாக அவர்கள் தாமே கனத்தை இழந்தவர்களானார்கள். இறுதியிலே ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சமூகத்தில் இருந்து கலைத்துவிடப்பட்டார்கள். மானிட குடும்பம் அதன் முகப் பொலிவை இழந்தது. தொடர்ந்துவந்த பிள்ளைகள் அந்த அவமானத்தைச் சுதந்தரித்தார்கள். தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளபடத்தகாதவர்கள் எனும் பயங்கரமான அவமானத்தை நாம் உணர்கிறோம். ஆனால் அவரது இரக்கத்திலே, ஆதாம் ஏவாளின் நிர்வாணத்துக்குத் தேவன் மிருகத் தோல்களை வழங்கி அவர்களது அவமானத்தை மூடினார். வேதாகமம் முழுவதிலுமாகத் தேவன் நிராகரிப்பையும் வெட்கக்கேட்டையும் புதுப்பிக்கப்பட்ட கனமேன்மையினால் இடம்பெயர்கிறவராய் இருக்கிறார்.

வீழ்ச்சியின்பின்பு ஆதாமும் ஏவாளும் அச்சத்தையும் உணர்ந்தார்கள். தேவன் தோட்டத்தில் உலாவுவதைக் கேட்ட ஆதாம் பயந்தான். சாத்தானின் தூண்டிஈர்க்கும் வல்லமையை எதிர்த்துநிற்க முடியாதவர்களாக, அவர்கள் மெய்யாகவே பலவீனமும் எளிதில் தாக்கப்படக்கூடியவர்களுமாய் ஆகிவிட்டுள்ளதை உணர்ந்தார்கள். அவர்கள் சோதனைக்குத் தாக்குப்பிடித்து நிற்கவில்லை. சாத்தான் இப்போது அவர்களது வாழ்க்கைமீது தனித்துவமான ஒரு செல்வாக்கினைச் செலுத்தினான். ஒரு காலத்திலே தேவனுடைய சிருஷ்டிப்புகள் அனைத்தின்மீதும் ராஜகுமாரர்களாக ஆண்டுவந்தவர்களாகிய ஆதாமும் ஏவாளும் இப்போது அதே சிருஷ்டிப்புக்குக் கீழ்ப்பட்ட வேலைக்காரரைப்போல வேலை செய்யவேண்டியதாயிற்று. தமது புதிய எஜமானிடம் தொடர்ச்சியான அச்சத்துடன் வேலைசெய்யும் அடிமைகளாக அவர்கள் இப்போது இருந்தார்கள். யுத்தவீரன் எம்மை மீட்க வரும் வரைக்கும் நாம் எளிதில் பாதிக்கப்படத்தக்கவர்கள், பாதுகாப்பற்றவர்கள்.

ஆதாம் ஏவாளின் மூல்ம பாவம் குற்ற உணர்வையும், வெட்கத்தையும் பயத்தையும் உலகுக்கு அறிமுகப்படுத்தியது. ஆனாலும் தேவன், இயேசுக் கிறிஸ்துவுடைய பரிகார ஜீவன் மற்றும் மரணத்தினூடாக அவரை நம்புகிறவர்களுக்கு அப்பாவித்தனம், கனமேன்மை மற்றும் வல்லமையை மீள்சீரமைக்கிறார். "குற்ற உணர்வு, பயம் மற்றும் அவமானத்தால் கட்டமைக்கப்பட்டதாகக் கிறிஸ்துவுக்கு வெளியாக உள்ள மனித அடையாளத்தைப் பற்றிய அதிகதிகமான வேதாகமப் புரிந்தறிவானது சிலுவைமீது கிறிஸ்து ஆற்றிய பணியைப் பற்றிய ஆழமானதும் விரிவானதுமான போற்றிப்புகழுவதை எம்மிலே தூண்டும்."[15]

# பரிகாரபலியும் இயேசுவின் மரணமும்

பரிகாரபலி (பிராயச்சித்தம்) எப்படி சிலுவையானது இரட்சிப்பைச் சாத்தியமாக்குகிறது என்பதை விளக்குகிறது. இயேசு மரித்தபோது விண்ணக நிஜத்தளத்திலே நடந்தது என்ன? சரித்திர ரீதியாக, இயேசுவின் மரணத்தின் இரட்சிப்பு அர்த்தத்தைப் பல்வேறுபட்ட பரிகாரப்பலி கொள்கைகளால் கிறிஸ்தவர்கள் விளக்கியுள்ளனர். பரிகாரபலி பற்றிய வேதாக போதனையை பின்புலப்படுத்துவதற்கு முன்னைய கிறிஸ்தவர்கள் எப்படியெல்லாம் முயற்சித்துள்ளனர் என்பதைக் காண்பதற்கும், வல்லமை, கனமேன்மை மற்றும் அப்பாவித்தனத்தை நாடும் மக்களுக்கு பரிகாரபலி பற்றிய தோற்றத்தைப் புரிந்துகொள்ளவும் நாம் அவற்றுள் மூன்று கொள்கைகளை விபரிப்போமாக.[16]

## *மீட்கும்பொருள் கொள்கை [அச்சம்]*

பொருத்தமில்லாத ஒரு சொந்தக்காரனுக்கு மனுக்குலத்தவர்கள் அடிமைப்பட்டுள்ளனர், எனவே அந்த அடிமைத் தளையில் இருந்து அவர்கள் விடுவிக்கப்படவேண்டும். ஆரம்ப சபைப் பிதாக்கள் கூறுகிறபடி, தேவனால் எம்மை மீளவும் களவாக எடுத்துவிட இயலாது, ஏனெனில் அது எதிரியின் மோசமான வழிமுறைகளைத் தழுவுகிறதாகிவிடும். மனுக்குலத்தவர்கள் மீதான சாத்தானின் அதிகாரத்தை விடுவிக்க ஒரு பேரம் இடம்பெற்றாகவேண்டும். அதிலே பேரம்பேசப்பட்ட பிணைத்தொகை இயேசு, அவர் தனது ஜீவனை மனுமக்களுக்கு மீட்கும்பொருளாக (பிணையாக) வழங்கினார் (மாற்கு 10:45). சாத்தான் அதை இரையை, தனது விஷயத்துக்கு ஈற்றிறுதியான மதிப்பு தேவனுடைய குமாரன்மீதான வெற்றியும் சொந்தமும் எனக் கருதியவனாக ஏற்றுக்கொண்டான். ஆனால் திட்டமிட்டபடி அவனால் கிறிஸ்துவின்மீது அதிகாரத்தைச் செலுத்த முடியவில்லை. இயேசு மரணத்துக்கு உரியவரல்லர், எனவே அவர் சாத்தானின் கட்டுப்பாட்டுக்குள் பிடிபடவில்லை.

இந்தப் பரிமாற்றங்களைப்பற்றி சபைப் பிதாக்கள் பல விபரங்களைப் புலப்படுத்தியிருந்தாலுங்கூட, சிலுவை பற்றிய அவர்களது பொதுவான விளக்கமானது தீய சக்திகள்மீதான தேவனுடைய வெற்றியும், மனுக்குலத்தவர்களின் விடுதலையுமே. சமகாலத்து இறையியலாளர்கள் பரிகாரபலியைப் பற்றிப் பேசும்போது, "கிறிஸ்து வெற்றிவீரர் (Christus Victor)" என்கிறார்கள், தீய வல்லமைகள் மீதான கிறிஸ்துவின் வெற்றியை அவ்விதமாக வலியுறுத்துகிறார்கள். இயேசுவின் மரணத்தின் நிமித்தமாக தேவன் எம்மை அச்சத்தில் இருந்து விடுவித்து எமக்கு ஆன்மீக வல்லமையைத் தந்தருளினார். சபையின் முதலாவது ஆயிர வருடகாலத்துக்கு இந்த மீட்கும்பொருள் கொள்கைதான் (ransom theory) பிரதான பாவநிவாரணபலிக் கொள்கையாக இருந்துவந்துள்ளது.

## *திருப்திப்படுத்துதல் [அவமானம்]*

மக்கள் அனைவருமே தேவனை நேசிப்பதாலும் அவருக்குக் கீழ்ப்படிவதாலும் தேவனைக் கனமேன்மைப்படுத்திட வேண்டும். கனமேன்மைக் கடனைச் செலுத்தும் கடப்பாடு நமக்கு உண்டு. கன்பரியின் அன்ஸ்லம் (Anselm of Canterbury பிறப்பு 1033) என்பவர் உரியபடி தேவனுக்கான கனமேன்மையைச் செலுத்தத் தவறுகிறவர்கள் அவருக்குமாத்திரமே உரிய கனமேன்மையை

எடுத்துப்போடுகிறார்கள் என்றார். பாவிகள் தேவனை அவமானப்படுத்திய படியால், அவரது முகப்பொலிவு இழப்புக்கு அவர் ஈடுசெய்யப்படவேண்டும். அவருக்குரிய கனமேன்மைக் கடனை திருப்திகரமாகச் செலுத்த மனுமக்கள் ஆற்றலற்றவர்கள், எனெனில் அவரைக் கனமேன்மைப்படுத்துவதே உரியதும் போந்ததுமானது. இயேசு மனுக்குலத்தவரின் பிரதியீட்டுப் பிரதிநிதியாக, பிதாவை முழுமையாக நேசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, பிதாவைக் கனமேன்மைப்படுத்தினார். பளிப்புக்குள்ளான தேவனுடைய கனமேன்மையை அவர் திருப்திப்படுத்தி, தண்டனை வழங்குவதற்கான எந்தத் தேவையையும் இல்லாமற் செய்தார். இயேசுவின் மரணம், சாராம்சமாக, தேவனின் முகப்பொலிவை மீட்கிறது.[17] அகிலாண்டத்தின் இரட்சிப்பு பற்றிய ஆபிரகாமிய வாக்குத்தத்தங்களை உறுதிப்படுத்துவதால் சிலுவை மேலுமாக தேவனுடைய போற்றுதற்குரிய தன்மையை நிலைநாட்டுகிறது; அவர் தகுதியற்றவராகவோ விசுவாசமற்றவராகவோ கருதப்பட இயலாதவர் (ரோமர் 15:8). அன்ஸ்லம் எழுதிய நூலாகிய கேர் டெயுஸ் ஹொமோ (Cur Deus Homo அதாவது தேவன் ஏன் மனிதனானார்), திருப்திப்படுத்தல் கொள்கையை விளக்கியுரைக்கும் பிரதானமான அது, பதினோராம் நூற்றாண்டில் நிலவிய தனிப்பட்ட கனமேன்மை பற்றிய நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகள் மற்றும் கனவீனத்தைத் திருத்தியமைத்தல் போன்றவற்றைப் பிரதிபலிக்கிறது. அவ்வகையிலே திருப்திப்படுத்தற் கொள்கையானது அவமானம்–கனமேன்மை அமைப்புகளுக்கான உயர் பின்புலமாக உள்ளது. தேவனுடய மகிமையை மீள்சீரமைப்பதே சிலுவையின் ஈற்றிறுதியான நோக்கமாகும், திருப்திப்படுத்தல் கொள்கையின் இரண்டாம் மட்டத்துப் பின்விளைவுதான் மனிதனின் கனமேன்மையை மீள்சீரமைப்பது. சிலுவை எமது அவமானத்தைச் சுமக்கிறது (ஏசாயா 53:3), அத்துடன் தேவனுக்கு முன்பாக எமது முகவிகாரத்தைத் திருத்தியமைக்கிறது. கிழக்கத்தேய கிறிஸ்தராச்சியத்திலே (Christendom) விரிவாக்கம்பெற்ற இறையியலானது எப்படி இயேசு மனுமக்களுக்கான மகிமையை மீள்சீரமைக்கிறார் என்பதை விளக்கியுள்ளமை ஆவலைத்தூண்டுவதாயுள்ளது; அலெக்சாந்திராவின் அத்தனேஸியஸ் (Athanasius of Alexandria பிறப்பு 296) கூறினார், "தேவன் மனிதனாக வந்தார், அதனால் மனிதர் தேவனாக ஆகும்படிக்காக." தெய்வீகப்படுத்தல் (deification) பற்றிய கிழக்கு வைதீகத்தின் சத்தியக்கோட்பாடு (தியோஸிஸ் theosis) மனுக்குலத்துக்கு மகிமையுள்ள தெய்வீக சாயலை மீட்டுத்தரும் கிருபையை தெய்வீகமயப்படுத்தலை உள்ளடக்கியது (ஒப்பிடுக யோவான் 17:22; 2 பேதுரு 1:4). இயேசுவின் மரணம் தேவனுக்கும் ஜனத்துக்குமான கனமேன்மையை மீள்சீரமைக்கிறது.

## குற்றவியல் பிரதியீட்டுக்கொள்கை [குற்ற உணர்வு]

தேவன் பரிபூரணமான பரிசுத்தரும் நீதிபரரும், எனவே அவர் பிரமாணத்தின் மீறுதல்களைத் தண்டித்தாகவேண்டும். தேவன் எம்மை நேசித்தாலுங்கூட, நீதியானது எமது தவறுகளுக்கான தண்டத்தை நாம் செலுத்தவேண்டும் எனக் கோருகிறது. குற்றவியல் பிரதியீட்டு (penal substitution) மாதிரியின்படி தண்டனை ஏதுமின்றி எழுந்தமானமாகப் பாவத்தை மன்னிப்பது தேவனை அநீதராக ஆக்கிவிடும். தேவன் நீதிபரர் என்பதால், தேவன் எப்போதுமே நீதியானதை நடப்பித்து மனுமக்களுக்கு அவர்களுக்கு உரியதை வழங்குகிறவர். எமது பாவம் எமக்கு நித்திய தண்டனையைப் பெற்றுத்தருகிறது. ஆனால் இயேசு எமக்காக அங்கே வந்து, எமக்குரிய கோபாக்கினைக்கான பலியாக எமது இடத்தை எடுத்தார். பாவங்களுக்கான பிரதியுபகாரமாக, சிலுவை எமக்கெதிரான தேவனுடைய உக்கிர கோபத்தைச் சாந்திப்படுத்தி, எமது மீறுதல்களின் கடனைச் செலுத்துகிறது. இயேசுவின் மரணமானது சட்டபூர்வ நீதியின்படி தேவையானவைகளை வழங்கித் திருப்திப்படுத்துவதால், குற்றவாளிகளான பாவிகளுக்கு எதிரான தேவனுடைய உக்கிர கோபாக்கினையைத் தணிக்கிறது. எமது இடத்துக்கு (பிரதியீடு substitution) அவரே தண்டனையானார் (குற்றத் தண்டணை penal). இப்படியாகத்தான் தேவன் குற்றவாளிகளைச் சுற்றவாளிகளெனத் தீர்த்து, தனது நீதியை சமரசம்பண்ணாமல் அவர்களை நீதிமான்கள் எனத் தீர்ப்பிட முடியும்.

குற்றத்தண்டனை பிரதியீட்டுக் கொள்கை மத்திய 1600 களில் இருந்த சீர்திருத்த சட்ட பண்டிதர்களிடமிருந்து வெளிவந்தது. 1800கள் தொடக்கம் மேற்கத்தேய கிறிஸ்தவத்துக்கான பிரதான முன்னனி பாவப்பரிகாரப்பலிக் கொள்கையாக அது இருந்துவருகிறது. மேற்கத்தேய சட்ட மதிப்பீடுகளின் மொழிநடையை அது பயன்படுத்துவதால் (குறிப்பாக பிராயச்சித்த நீதி retributive justice) குற்றவாளிகளான நபர்கள் எப்படிச் சட்டப்படியாக பரலோகத்துக்கு உரியவர்களாகலாம் என்பதை அது விளக்குகிறது. இயேசுவின் சிலுவை மரணமானது எப்படியாக மக்களை குற்ற உணர்வு, அவமானம் மற்றும் பயத்தில் இருந்து விடுவிக்கிறது என்பதை விளக்குதற்குச் சமகால இறையியல் எப்போதுமே வேதாகமத்தின் விளக்கத்தை முன்னுரிமைப்படுத்திடவேண்டும். இருந்தாலுங்கூட, சபை சரித்திரத்திலுள்ள பல்வேறான பாவநிவாரணபலிக் கொள்கைகள் எமது இறையியலுக்கு உதவியாக அமையலாம்.

# ஒழுங்குபடுத்தப்பட்ட இறையியல் வகைகள்

| வகை | குற்ற உணர்வு | அவமானம் | அச்சம் |
|---|---|---|---|
| **பிரதான உவமானம்** | சட்டமன்று (சட்ட) | சமூகம் (உறவுசார்) | போர் (படை) |
| **இருப்புப்பற்றிய கேள்வி** | பரலோகத்தை உறுதிப்படுத்திட என் பாவங்கள் எப்படி மன்னிக்கப் படலாம்? | கனமேன்மை பெறுவதற்கு எப்படி நான் சமூகத்தின் அங்கமாகலாம்? | வாழ்வைக் கட்டியாழ்வதற்கான வல்லமையை நான் எப்படி அடைந்திடலாம்? |
| **சரித்திர இறையியல்** | அகஸ்தீனிய, சீர்திருத்தம் | விருத்தியாக்கப் படவில்லை | பெந்தெகொஸ்தே, ஆவிக்குரிய |
| **தேவன்** | சட்டம் வழங்குபவரும் நீதிபரரும் (பாவமில்லாதவர், பூரணர், நீதிபரர்) | பிதாவும் போஷகரும் (உண்மைத்தனம், மகிமையுள்ள மேன்மையினர்) | ஆளுனரும் விடுதலையாளரும் (ராஜரீகர், கடந்திருப்பவர்) |
| **தேவனின் பரிசுத்தம்** | அவர் மாத்திரமே அறநெறிநியமத்தை பூரணமாகக் கடைப்பிடிப்பவர் | அவர்மாத்திரமே மகிமைக்குரியவர், கனமேன்மைக்கு உரியவர் | அவரே சிருஷ்டித்து அனைத்துக்கும் மேலாக இருக்கிறவர் |
| **தேவனின் ராஜரீகம்** | மீறுவோரை மன்னித்து எமது எதிர்கால இரட்சிப்பைச் செல்லுபடியாக்கு கிறார் | தாழ்மையுள்ள மரணசரீரரைக் கனமேன்மைப்படுத் துகிறார், போலிப் பெருமையினரைத் தாழ்த்துகிறார் | உலகின் ஆன்மீக எதிர்ப்பைத் தோற்கடித்து உலகை ஆள்கிறார் |
| **தேவனுடைய நீதி** | தண்டிக்கும் நீதி | உடன்படிக்கை உண்மைத்தனம் | அகில சக்தி |
| **பாவம்** | மீறுதல்கள் & பிரமாணத்தைக் கைக்கொள்ளாமை | கனவீனமும் ராஜவிசுவாசம் இல்லாமையும் | கீழ்ப்படியாமையும் விக்கிரக வழிபாடும் |
| **பாவத்தன்மை** | முழுமையும் தொலைந்தவர்கள் | முழுமையான ஏற்றுக்கொள்ளப் படாமை | தாக்குதலுக்கு உள்ளாகுந்தன்மையின் மோசமான நிலை |
| **மீறுவது** | தேவனுடைய பிரமாணங்களும் நீதியும் | தேவனுடைய முகமும் மகிமையும் | தேவனுடைய வல்லமையும் அதிகாரமும் |
| **பாவிகள்** | தீர்த்தொதுக்கப் பட்டவர்கள் | நிராகரிக்கப்பட்டவர் கள் | சபிக்கப்பட்டவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| **பாவத்தின்<br>பின்விளைவுகள்** | நியாயத்தீர்ப்பும்<br>தண்டனையும் | வெட்கக்கேடும்<br>அசுத்தமும் | ஆட்டிப்படைப்பும்<br>அடிமைத்தளையும் |
| **பாவத்தின்<br>உணர்ச்சிகள்** | மனஸ்தாபம் | தகுதியின்மை | ஏக்கம் |
| **வீழ்ச்சி (ஆதி 3)** | மற்றவரைக்<br>குற்றஞ்சாட்டுதல் | நிர்வாணத்தை<br>மறைத்தல் | பயத்தில்<br>ஒழித்துக்கொள்ளல் |
| **கலாச்சாரத் தீர்வுகள்** | நியாயப்படுத்தல்,<br>பாவ அறிக்கை,<br>மீள்சீர்பொருந்தல் | மூடுதல், ஓடுதல்,<br>ஒழித்தல் | ஆவிமார்க்கம்,<br>மந்திரம் |
| **தவறான எதிர்பார்ப்பு** | அறநெறி,<br>நற்செயல்,<br>நற்பலன் | அடையாளம்,<br>தொடர்புகள்,<br>பெயர்புகழ் | சடங்குகள்,<br>இரகசியங்கள்,<br>தாயத்துக்கள் |
| **ப.ஏ. பிரமாணங்கள்<br>வெளிப்படுத்துவது** | எம்<br>அறநெறித்தோல்வி | எமது<br>கெட்டுப்போதல் | எமது விக்கிர<br>ஆராதனை |
| **இயேசு கிறிஸ்து** | பிரதியீடும் பலியும் | மத்தியஸ்தரும்<br>சகோதரரும் | வெற்றிவீரரும்<br>விடுவிப்பவரும் |
| **மனுவுரு** | எமது கடனைச்<br>செலுத்த இயேசு<br>முழு மனிதனாக<br>வந்தார் | பிதாவை மகிமைப்<br>படுத்தும்படி<br>இயேசு மகிமையை<br>விட்டுச் சென்றார் | பிசாசின் வேலைகளை<br>அழித்தொழிக்க இயேசு<br>வந்துள்ளார் |
| **இயேசுவின் வாழ்வு** | பாவமின்றி<br>வாழ்ந்தார் | அசுத்தரைக்<br>குணமாக்கினார்,<br>புறவினத்தார் ஒதுக்<br>கப்பட்டோருடன்<br>உணவருந்தினார் | பிசாசுகளைத்<br>துரத்தினார்,<br>அற்புதங்கள்,<br>அடையாளங்கள்,<br>அதிசயங்கள் செய்தார் |
| **இயேசுவின் மரணம்** | எமது அறநெறி<br>மீறுதல்களுக்கான<br>தண்டனையைச்<br>சுமந்தார் | எம் அவமானத்தை<br>அகற்றி தேவனின்<br>முகம்/கனமேன்மை<br>யை மீள்சிரமைத்தார் | ஆவிகளையும்<br>வல்லமைகளையும்<br>தோற்கடித்தார் |
| **சிலுவை** | தேவனுடைய<br>கோபாக்கினையை<br>சாந்திப்படுத்துகிறது | தேவனுடைய<br>மதிப்பீட்டை<br>மாற்றிப்போடுகிறது | தேவனுடைய<br>வல்லமையை<br>நிலைநாட்டுகிறது |
| **பாவப்பரிகாரக்கொள்<br>கை** | தண்டனைக்கான<br>பிரதியீடு | திருப்தி,<br>தியோஸிஸ் *theosis* | மீட்கும் பொருள்,<br>கிறிஸ்துவில் வெற்றி |
| **இயேசுவின்<br>உயிர்த்தெழுதல்** | எதிர்கால<br>இரட்சிப்பின் உறுதி | அவமானப்பட்டவர்க<br>ளுக்கு தெய்வீகக்<br>கனமேன்மை | சாத்தான்மீதும்<br>மரணத்தின்மீதும்<br>வெற்றி |
| **இரட்சிப்பு** | அப்பாவித்தனமும்<br>மன்னிப்பும் | கனமேன்மையும்<br>முகமும் | வல்லமையும்<br>சுயாதீனமும் |

| | | | |
|---|---|---|---|
| **மனந்திரும்பல்** | நீதியின் செயல்களிலிருந்து (நற்செயல்களால் தேவனைப்பிரியப்படுத் தும் முயற்சியை நிறுத்தல்) | பெருமை பேசுவதிலிருந்து (கலாச்சாரத் தொகுதி களைப் பாவித்து அந்தஸ்து உயர்த்து வதை எதிர்த்தல்) | விக்கிரக ஆராதனையில் இருந்து (தவறான வல்லமைகள், மந்திர அனுஷ்டானங்களைக் கைவிடுதல்) |
| **கிருபை மேற்கொள்வது** | துஷ்டத்தனம் | மதிப்பில்லாமை | பலவீனம் |
| **மன்னிப்பு** | தவறுகளை மன்னிக்கும் | உறவுகளை மீள்சீரமைக்கும் | அரண்களை அகற்றும் |
| **தேவனுடைய வலக்கரத்தில்** | ஏற்பும் நெருக்கமும் | சலாக்கியமும் அந்தஸ்தும் | வல்லமையும் அதிகாரமும் |
| **தேவனுடன் ஒப்புர வாக்கம் எதனுடன் சமாதானம்** | சுயம் (ஆத்துமா, மனச்சாட்சி) | மக்கள் (குடும்பம், சமூகம்) | சிருஷ்டிப்பு (இயற்கை, ஆவிகள்) |
| **சீஷத்துவம்** | கீழ்ப்படிவு | ராஜவிசுவாசம் | கீழ்ப்பட உடன்படுதல் |
| **பரிசுத்த ஆவி** | நடத்தைக்கான வழிகாட்டி | திரித்துவத்துடன் அந்நியோன்னியம் | போராட்டத்துக்கான வலுவூட்டம் |
| **ஒழுக்கநெறிகள்** | பிறரை நேசித்தல் | பிறரைக் கனம்பண்ணுதல் | பிறரை ஆசீர்வதித்தல் |
| **இரட்சிப்பின் திடவுறுதி** | நான் இரட்சிக்கப்பட்டு அறநெறிப்படி ஏற்புடையவனா? | நான் சரியா சமூகத்தின் பகுதியாக இருக்கிறேனா? | இருண்ட வல்லமை களை மேற்கொள்ளும் வல்லமை எனக்கு உள்ளதா? |
| **எபேசியர் பகுதி** | 2:1–10 | 2:11–22 | 6:10–17 |

# 4

# ஊழியம்

வேதாகமத்திலே தேவன் எமது கலாச்சாரங்கள் அனைத்தினதும் – அதாவது அப்பாவித்தனம், கனமேன்மை, மற்றும் வல்லமை ஆகிய கலாச்சாரங்களின் பிரதம இதய வாஞ்சைகளுக்குடன் பேசுகிறார். சுவிசேஷமானது மெய்யாகவே ஒரு பல–முகப்புடைய வைரம், மனுக்குலத்தைப் பாவத்தின் அனைத்து அம்சங்களிலும் இருந்து மீட்க வல்லது. கிறிஸ்தவர்களாக எமது இலக்கு வெறுமனே வைரத்தின் மகிமைமிகு அற்புதத்திலே வியப்பதல்ல, மாறாக தேவனுடைய இரட்சிப்பின் அறிவைப் பரப்புவதாகும், அதனால் இயேசுக்கிறிஸ்துவில் தேவன் அமைத்துள்ள நிறைவான வாழ்வை ஜாதிகள் அனைத்தும் அறிந்துகொள்ளும். இந்த இறுதியான பகுதியிலே, ஒவ்வொரு கலாச்சாரப் பின்புலத்திலும் எப்படி ஊழியம் செய்வது என்பதை நாம் பரிசீலிப்போம்.

தத்தமது கலாச்சாரப் பின்புலங்களின் நாட்டத்தை மக்கள் பற்றிக்கொள்வது போலவே, கிறிஸ்தவர்கள் தாம் எந்தப் பின்புலங்களிலிருந்து சுவிசேஷத்தைக் கற்றார்களோ அந்தப் பின்புலத்திலிருந்தே கிறிஸ்தவ ஊழியத்தை அநேகமாக ஏற்பதுண்டு. ஒரு பின்புலத்திலே சுவிசேஷகமயப்படுத்தவும் சீஷராக்கவும் பயன்படுத்தப்பட்ட முறைமைகள் அகிலாண்ட ரீதியாகப் பிரயோகமுள்ளவை என நாம் நினைப்பதுண்டு. நாம் தவறான கண்வில்லைகளூடாக சுவிசேஷத்தை மக்களுக்குக் காட்டினால், அதைக் கண்டுகொள்வது அவர்களுக்குச் சவாலாக இருக்கும். பின்புலமயமாக்கத்தின் அவசியத்தை நாம் அங்கீகரித்தாலுங்கூட, பல்வேறுபட்ட கலாச்சாரங்களிலே கிறிஸ்தவ ஊழியத்தை அணுகுவதற்கான நடைமுறையான மாற்றீடுகள் கிடைக்காத பட்சத்திலே நாம் எமது இயல்புநிலை (default) முறைகளுக்கே திரும்புவதுண்டு.

அகிலாண்டக் கலாச்சாரங்களினதும் வேதாகம இரட்சிப்பினதும் மூன்று பரிமாணங்கள் தூதுப்பணிக்கான எமது அணுகுமுறையில் தாக்கத்தை விளைவிக்கும். ஒவ்வொரு வகையான கலாச்சாரத்திலும் சுவிசேஷத்தை மாபெரும் செய்தியாக நாம் எப்படிப் பரிவர்த்தனை செய்யலாம்? 3 பரிமாண

தூதியலை (3D missiology) விருத்தியாக்குவதற்கு முதலிலே நாம் சுவிசேஷகமயப்படுத்தும் இரு முறைமைகளை வழங்குவோம் (2 பரிமாண "இரட்சிப்புத் திட்டம்" மற்றும் "இரட்சிப்பின் கதை"). பின்பு மக்கள் அர்த்தமுள்ள வடிவங்களூடாக சுவிசேஷத்துடன் இடைப்படுவதை உறுதிப்படுத்தும்படிக்கு, கிறிஸ்தவ சாட்சியிடுதலின் மூன்று பின்புல அணுகுமுறைகளை நாம் புறவரைவிடுவோம் – சத்திய இடைப்படுதல், வல்லமை இடைப்படுதல், மற்றும் சமூக இடைப்படுதல்

# இரட்சிப்புக்கான 3 பரிமாண திட்டம்

நான்கு ஆன்மீக விதிகள் (The Four Spiritual Laws) குறுநூலானது மில்லியன் கணக்கான வாழ்வுகளைத் தொட்டுள்ளது. அந்தத் துணைகருவியின் எளிய, நான்கு பகுதியிலான கட்டமைப்பானது பல கிறிஸ்தவர்களின் சுவிசேஷ வழங்குதலுக்கான கட்டமைப்பை உருவமைக்கிறது. பின்வரும் அட்டவணையானது அதன் பரிச்சயமான கட்டமைப்பைப் பயன்படுத்தி, ஒவ்வொரு கலாச்சார வகைக்குமான இரட்சிப்புத் திட்டத்தை பரிந்துரைக்கிறது. ஒவ்வொரு பின்புலமும் நபரும் தனித்துவமானவர்கள் என்பதால், பின்வருவன ஆலோசனையாகத் தெரிவிக்கப்படும் சுவிசேஷக விளக்கங்கள் மாத்திரமே.

| | **குற்ற உணர்வு-அப்பாவித்தனம்** | **அவமானம்-கனமேன்மை** | **அச்சம்-வல்லமை** |
|---|---|---|---|
| **1. தேவனுடைய நோக்கம்** | தேவன் உங்களை நேசித்து எமது வாழ்வுக்கு அற்புத திட்டத்தை வழங்குகிறார். நாம் நித்திய வாழ்வைக் கொண்டவர்களாய் அழிந்துபோகதிருக்கும்படி இயேசு வந்தார். இயேசு எமக்கு நிறைவான வாழ்வை வழங்குகிறார். | தேவன் உங்களை மதிப்பாகக் கருதி உங்களைத் தனது பிள்ளையாகக் கனப்படுத்த விரும்புகிறார். தனது குடும்பத்துடன் இசைவாக வாழும்படியாகத் தேவன் எம்மை மகிமையுடனும் கனமேன்மையுடனும் சிருஷ்டித்தார். | தேவன் ராஜரீகமுள்ளவர், அவர் உங்களுக்கு ஆன்மீக அதிகாரத்தை வழங்குகிறார். தனது முழு சிருஷ்டிப்பையுமே (காண்பவையும் காணாதவைகளும்) ஆளும்படிக்கும் தனது ஆன்மீக ஆசீர்வாதங்களை அனுபவிக்கும் படிக்கும் தேவன் நம்மை சிருஷ்டித்தார். |

| | | | |
|---|---|---|---|
| **2. மானிட பிரச்சினை** | மக்கள் பாவிகளாய் தேவனுக்குமுன்பாக தீர்ப்பிடப்பட்டவர்களாய் உள்ளனர். எமது மீறுதல்கள் எமக்கும் பரிசுத்த தேவனுக்கும் இடையே ஒரு தடையை உருவாக்குகிறது. நற்செயல்கள் தேவனுடைய நியமத்தை அடையத் தவறுகின்றன. | மக்கள் வெட்கக் கேடானவர்கள், தேவனைக் கனவீனப்படுத்துகிறார்கள். எமது கலகம் மகிமைமிகு தேவனை கனவீனப்படுத்தி, அவமானத்தை ஏற்படுத்துகிறது. கனமேன்மையை மீள்சீரமைக்க நாம் எடுக்கும் முயற்சிகள் எமது ஆன்மீக அனாதைத்தனத்தின் அவமானத்தை மூடப் போதுமானதல்ல | மக்கள் சாத்தானின்கீழ் அச்சத்தோடு வாழ்கிறார்கள். எமது விக்கிர ஆராதனை தெய்வீக வல்லமையில் இருந்து எம்மைப் பிரித்துப்போடுகிறது. இருளின் அதிகாரங்கள் அனைத்து மக்கள்மீதும் ஆளுகை செலுத்தி, பாவத்தை, மரணத்தை, மற்றும் தீங்கை விளைவிக்கும். |
| **3. இயேசுவின் தீர்வு** | உங்களது பாவங்களுக்கான பரிபூரண பலி இயேசுக் கிறிஸ்துவே. பாவத்துக்கான தண்டனை செலுத்தும்படியாக எமது இடத்திலே இயேசு சிலுவையிலே மரித்தார். எம்மீதான தேவனுடைய தண்டனையின் உக்கிர கோபத்தை இயேசு எமக்காகச் சகித்தார். | இயேசுக்கிறிஸ்து உங்களது அவமானம் அனைத்தையும் சுமந்து கனமேன்மையை மீள்சீரமைக்கிறார். இயேசுவின் அவமானமான மரணம் எமது அவமானத்தை அகற்றி எமக்கு கனமேன்மையை மீள்சீரமைக்கிறது. தேவனை கனமேன்மைப்படுத்துவதால், இயேசு எம்மை மீளவும் தேவனின் குடும்பத்தில் இணைந்திட அனுமதிக்கிறார். | உங்கள் வல்லமையை உங்களுக்கு மீள்சீரமைக்கும்படி இயேசு போர்வீரராய் இருக்கிறார். தீய வல்லமைகளையும் மரணத்தையும் இயேசு வெற்றிகொண்டார் தேவ வல்லமையையும் ஆசீர்வாதத்தையும் எமக்குத் தரும்படியாக. அவரது மரணம் வல்லமைகளை நிராயுதபாணிகளாக ஆக்கி, எமக்கு ஆன்மீக அதிகாரத்தை வழங்குகிறது. |
| **4. எம் இரட்சிப்புப் பிரதியுத்தரம்** | நீங்கள் இயேசுவை உங்களது தனிப்பட்ட இரட்சகராகப் பெற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவைத் தனிப்பட்ட இரட்சகராகப் பெற்று மனித அறநெறிகளில் இருந்து திரும்பி, பாவங்களுக்கு மன்னிப்பையும் நித்திய வாழ்வையும் பெற்றுக்கொள்ளுங்கள். | நீங்கள் தேவனுடைய குடும்பத்துக்குள் நுழைவதற்கு உங்கள் உறுதியான பற்றுதலை இயேசுவிலே கொள்ளவேண்டும். போலிக்கலாசார முகத்தில் இருந்து திரும்பி, தேவனுடைய கனமேன்மையைப் பெற்றுக்கொள்ளுங்கள் | தெய்வீக வல்லமையை அடையும்படிக்கு நீங்கள் இயேசுவை அறிந்துகொள்ளவேண்டும். உறவார்ந்த ரீதியில் பாதுகாப்புக்கும் வல்லமைக்குமாக இயேசுக்கிறிஸ்துவை மாத்திரமே நம்பவேண்டும். மந்திர அனுஷ்டானங்கள், பில்லிசூனியங்கள் ஆகியவற்றில் இருந்து திரும்பி அதிகாரத்தையும் ஆசீர்வாதத்தையும் பெறுங்கள். |

# இரட்சிப்பின் 3 பரிமாண கதை

ஒவ்வொரு கலாச்சார வகையுமே குறிப்பான உவமேயத்தை (metaphor) மிகப் பொருத்தமானதாக ஏற்றுக்கொள்ளும். அதன் பொருள் என்னவெனில், வாழ்வின் ஒருதுறையில் இருந்து (அதாவது விசாரணைமன்று, சமூகம், அல்லது யுத்தம்) பெறப்படும் மொழிநடையும் மதிப்பீடுகளும் அவ்வவற்றின் உலகநோக்குகளையும் ஆன்மீக வாழ்வையும் ஒழுங்கமைப்பதற்கான உவமேயங்களாகப் பயன்படுத்தப்படும். உவமேயங்கள் ஆன்மீக நிஜங்களை விளக்குவதற்கு இவ்வுலகின் உருத்தோற்றங்களைப் பயன்படுத்தும். கீழே தரப்படும் சொற்களஞ்சியத் தொகுதிகள் கிறிஸ்தவ இரட்சிப்புக்கான குறிப்பான கொள்கை உவமேயங்களைப் பிரதிபலிப்பதாக உள்ளன. கலாச்சார ரீதியாகப் போந்ததான மொழிநடையை நாம் பயன்படுத்தும்போது, மக்கள் கிறிஸ்துவிலான இரட்சிப்பினை மேம்படப் புரிந்தறிந்துகொள்ள முடியும். ஒரு சுவிசேஷகமய பயிற்சியாக, இரட்சிப்பின் வேதாகமக் கதையை (அதாவது, சிருஷ்டிப்பு, வீழ்ச்சி, இஸ்ரவேல், இயேசு, மீள்சீர்பொருந்துதல் ஆகியவை) ஒரு கொள்கைவாரியான சொற்பதங்ளைப் பயன்படுத்திக் கூறுவதை அப்பியாசப் படுத்திடவும்.[18]

## *நீதிமன்ற மொழிநடைகள் [குற்ற உணர்வு]*

| | | |
|---|---|---|
| சட்டம் | மீறுதல் | நியாயத்தீர்ப்பு |
| சாந்திப்படுத்தல் | நீதிபதி | சரி/தவறு |
| விதிமுறைகள் | சுற்றவாளித்தீர்ப்பு | திருத்துதல் |
| தண்டனைத் தீர்வை | அப்பாவித்தனம் | தண்டம் |
| பலி | தனிநபர் | தண்டனை |
| மன்னிப்பு | தனிப்பட்ட | நற்பலன் |
| கடன் | செலுத்துகை | கட்டளைகள் |
| கோபாக்கினை | குற்ற உணர்வு | பலி |
| நீதி | மன்னிப்பு | செயல்கள் |

## சமூக மொழிநடைகள் [அவமானம்]

| | | |
|---|---|---|
| ராஜ விசுவாசம் | மத்தியஸ்தர் | குடும்பம் |
| தந்தை | யூதர்/புறவினத்தவர் | சமூகம் |
| பிள்ளை | இசைவு | பொதுஜனம் |
| கூட்டணியம் | பிரமாணிக்கப்பற்றுதல் | பண்டிகை |
| கனப்படுத்தல் | ஒருமைப்பாடு | சீர்கேடு |
| உள்வாங்கிக்கொள்ளல் | உபசரித்தல் | சிறுமைப்படுத்துதல் |
| முகம் | நற்கீர்த்தி | மதிப்பு |
| வணக்கத்துக்குரியவை | அடையாளம் | ஏற்புடைமை |
| மாண்பு | தூரமாக்கப்படல் | அவமதிப்பு |
| அசுத்தம் | அங்கீகாரம் | போஷகம்(போஷகத்துவம்) |
| பெறுமதியான | மகிமை | கனவீனம் |
| பெருமையாகப் பேசுதல் | தூய்மை | விரோதம் |
| அச்சறுத்தல் | சுதந்தரிப்பு | சுவீகாரம் |

## போர் மொழிநடைகள் [அச்சம்]

| | | |
|---|---|---|
| விடுவிப்பு | குணப்படுத்தல் | சாத்தான் |
| வல்லாதிக்கங்கள் | அடிமைத்தளை | அதிகாரம் |
| இருள் | ஆதிக்கம் | யாத்திராகமம் |
| மந்திரம் | அடையாளங்கள் | அதிசயங்கள் |
| அற்புதங்கள் | பீடிக்கப்படுதல் | வல்லமை |
| பலவீனம் | இடைப்படுதல் | கைதி |
| சமாதானம் | வல்லமை | மகாவல்லமை |
| சிங்காசனம் | கட்டுப்பாடு | ஒடுக்குதல் |
| போராட்டம் | ஆவிகள் | பரிசுத்த ஆவி |
| பிசாசுவிரட்டல் | ஜெபம் | ராச்சியம் |
| தேவதூதர்கள் | ஆசீர்வாதம்/சாபம் | பாதுகாப்பு |
| ஏமாற்றுபவன் | விடுதலை | வல்லரண் |
| வெற்றிசிறத்தல் | வெற்றி | விக்கிரக ஆராதனை |

# பின்புலமயப்படுத்தப்பட்ட சாட்சிய வடிவங்கள்

அவமானம்–சார் மற்றும் அச்சம்–சார் கலாச்சாரங்களிலே சீஷராக்குதல் வெறுமனே சுவிசேஷக ஒப்படைகளைப் பொதியவிழ்ப்பதிலும் அதிகமானவற்றை உள்ளடக்கியிருக்கும். நாம் சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்யும் வழிமுறைகளும் கலாச்சாரப் பின்புலங்களில் இருந்தே கைக்கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையை முப்பரிமாணமாகப் பரிவர்த்தனை செய்வதென்பது அப்பாவித்தனம், கனமேன்மை, மற்றும் வல்லமையைப் பெறுவதற்கு மக்கள் பரிச்சயப்படுத்திக் கொண்டுள்ள வடிவங்களை உள்ளடக்கியதாயிருக்கும்.

ஒரு 3 பரிமான சுவிசேஷமானது சுவிசேஷ உள்ளடக்கத்தையும் கிறிஸ்தவ சாட்சிய வழிமுறைகளையும் பாதிக்கும். இறையியலிலே பயன்படுத்தபட்டதான கொள்கைரீதியான உவமேயங்கள்தான் (முன்னைய பகுதியில்) எமது தூதியலை வழிநடாத்துகிற தொழிற்பாட்டு உவமேயங்களாய் இருக்கும். தேவனுடைய தூதுப்பணியை (அதாவது குற்றவாளியை மன்னித்தல், அவமானப்பட்டவரை வரவேற்றல், அல்லது அச்சம் கொண்டோரை விடுவித்தல்) எப்படிப் புரிந்து கொள்கிறோம் என்பது கிறிஸ்தவ ஊழியத்துக்கான எமது உபாயங்களை உருவமைக்கும்.

மூன்று கலாச்சார நாட்டங்களுக்குமான பொருத்தமான தூதியல் அணுகுமுறை எதுவாக இருக்கும்? எப்படி மக்கள் திறம்பட சுவிசேஷத்துடன் இடைப்படுவார்கள்? சத்தியமாகவா, வல்லமையாகவா அல்லது சமுதாயமாகவா? மக்களின் கலாச்சார நாட்டமானது அவர்கள் எப்படிச் சுவிசேஷத்தைப் பெறுகிறார்கள் என்பதிலும் புகழ்கிறார்கள் என்பதிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அப். நட. 26:18 இலே, பவுல் புறஜாதியாருக்கான தனது தூதுப்பணியை 3 பரிமாண பதங்களிலே விபரிக்கிறார். *'நீ அவர்களை இருளில் இருந்து ஒளிக்கும், சாத்தானின் அதிகாரத்தில் இருந்து கடவுளிடத்திற்கும் திரும்புமாறு (வல்லமை), அவர்கள் கண்களைத் திறக்கவேண்டும். இவ்வாறு அவர்கள் தங்கள் பாவங்களில் இருந்து மன்னிப்பைப் பெற்றுக்கொள்வார்கள் (அப்பாவித்தனம்); என்னிடம் (இயேசுவிடத்தில்) நம்பிக்கை கொண்டு தங்களைத் தூயோராக ஆக்கிக் கொண்டவர்களோடு உரிமைப்பேறு அடைவார்கள் (கனமேன்மை)' என்றார்* (பொது மொழிபெயர்ப்பு)

பவுலின் ஊழியமானது ஒரு முப்பரிமாண சுவிசேஷமாக இருந்தது. சுவிசேஷத்தின் இந்த முப்புரிகள் என்றுமே தனித்துத் தொழிற்பட்டதில்லை, ஆனாலும் குறித்த ஒரு கலாச்சாரத்தின் இயக்குவிசையானது ஏனைய அணுகுமுறைகளை விட ஒரு அணுகுமுறையைப் பிரதானமாக வேண்டிநிற்கும். அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் பவுலின் ஊழியத்தின்போது மூன்று இடைப்படுதல்கள் கிறிஸ்தவ சாட்சியத்தின் மூன்று அணுகுமுறைகளையும் விளக்கிக்காட்டுகிறது – சத்திய இடைப்படுதல், வல்லமை இடைப்படுதல் மற்றும் சமூக இடைப்படுதல்.

# சத்திய இடைப்படுதல்

பிசீதியா நாட்டின் அந்தியோகியாவிலே ஓய்வுநாளின்போது (அப். நட. 13:13–42), ஜெபாலயத் தலைவர்கள் பவுலிடம் உந்தி எழுப்பும் வார்த்தையைப் பகிரும்படியாக கேட்டுக்கொண்டனர். பவுல் எழுந்துநின்று இஸ்ரவேல் சரித்திரமானது எப்படியாக இயேசுவின் உயிர்த்தெழுதலிலே உச்சத்தை எட்டியது என்பதையிட்டுப் பிரசங்கித்தார். அவரது பிரசங்கத்தின் முடிவிலே, "ஆதலால் சகோதரரே, இவர்மூலமாய் (இயேசு மூலமாய்) உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று ... தெரிந்திருக்கக்கடவது" என்றார். பவுலைச் செவிமடுத்துக்கொண்டிருந்தவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்தோடு இடைப்பட்டார்கள்.

மேற்கத்தேய தூதியல் (missiology) – சட்டப்பிரமாண வலியுறுத்தலின் கலாச்சாரக் கட்டமைப்பிலே விருத்தியாக்கப்பட்ட அது, கிறிஸ்தவ ஊழியத்துக்கான நீதிமன்ற முறைமைகளை கைக்கொள்கிறது. சத்திய இடைப்படுதலின்போது, கிறிஸ்தவன் ஒரு சட்டத்தரணியைப்போல தொழிற்படுவார், சுவிசேஷத்தின் உண்மைத்தனத்தை வார்த்தை மூலமாக விளக்கித் தற்காப்பு வாதம் செய்வார். சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்துவதானது தெய்வீக சத்தியத்தை வாதரீதியாக வழக்குதலை உள்ளடக்கியதாகும். சத்தியமானது சரியோ பிழையோ அவை கூற்றுக்களாக நோக்கப்படுகிறபடியால், காரணியவிளக்கம் மற்றும் காரணம் ஆகியவற்றுக்கே அப்பீல்பண்ணப்படும். அப். நட. 13 ஐப்போல, மக்கள் சத்தியத்தை அறிந்து மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படியாக சவாலிடப்படுகின்றனர்.

சுவிசேஷக நுட்பங்கள் ஆன்மீக 'விதிமுறைகளை' பிரகடனப்படுத்துவதை வலியுறுத்துகிறது. "சுவிசேஷகத்துவ அதிர்வெடி' மற்றும் 'ரோமானியப் பாதை' போன்றவைகள் சுவிசேஷத்தை உண்மைக்கூற்றுக்களாக வழங்கி, சிந்தைக்

காரணியத்துக்கு அப்பீல் பண்ணுகிறது. காரணியவாதம் – கிறிஸ்தவப் பல்கலைக்கழகங்களில் பிரபல்யமான ஒரு பாடமாகிய அது – கிறிஸ்தவ விசுவாசத்துக்கான காரணவிளக்க அடிப்படையை வழங்குவதற்காக தத்துவவாதத்தைப் பயன்படுத்தி எழுப்பப்படும் ஆட்சேபனைகளுக்குத் தற்காத்துக்கொள்கிறது. பிரசித்தமான விற்பனையாகும் நூல்களான லீ ஸ்ட்றொபெல் (Lee Strobel) எழுதிய 'கிறிஸ்துவுக்கான வழக்கு (The Case For Christ)' மற்றும் ஜொஷ் மக்டவெல் (Josh McDowell) எழுதிய 'தீர்ப்பைக் கோரிநிற்கும் சான்று (Evidence that Demands a Verdict)' போன்ற நூல்கள் குற்ற உணர்வு– அப்பாவித்தன கலாச்சாரங்களில் கிறிஸ்தவ ஊழியத்தின் நீதிமன்ற அணுகுமுறையைப் புலப்படுத்துகிறது.

சத்தியத்தைக் கூறுவதுகூட எப்படி மேற்கத்தேய கிறிஸ்தவம் விசுவாசிகளைத் தகவூட்டுகிறது என்பதுமாகும். சீஷத்துவத்தின் பிரதான வடிவம் – பிரசங்கம் – அறிவுறுத்தற் போதனைகளூடாக மதிப்பீடுகள் திறம்பட ஊடுகடத்தப்படுகின்றன என்பதை எடுகோளாகக் கொண்டதாகும். மேற்கத்தேய இறையியலானது ஒழுங்குபடுத்தப்பெற்ற இறையியலையும் (systematic theology கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றி ஒழுங்காகவும் வாதங்களோடும் முன்வைக்கும் கொள்கை) பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தையும் (வேதாகமத்தின் மிக ஒழுங்கானதும் கூற்றுக்களாக உரைக்கப்பட்டதுமான நூல்) பெரிதும் விரும்புகிறது. இத்தகைய ஊழிய விருப்பத்தெரிவுகள் எப்படியாக நீதிமன்ற முறைமைகளின் எடுகோள்களும் முறைமைகளும் குற்ற உணர்வு – அப்பாவித்தனப் பின்புலங்களிலே கிறிஸ்தவ ஊழியத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

சத்திய இடைப்படுதலுக்கான தூதியல் அணுகுமுறையானது தேவனுடைய ராச்சியத்துக்கு வியத்தகு கனியை உற்பத்தியாக்கியுள்ளது, எனவே தூதுப்பணிகளில் அது பிரதான உபாயமாகத் தொடர்ந்தும் நிலவுகிறது. உலகம் தொடர்ந்தும் சுவிசேஷத்தின் சத்தியத்துக்குச் செவிமடுக்கவேண்டும். ஆனாலும் குற்ற உணர்வு – அப்பாவித்தனக் கலாச்சாரங்களில் உள்ள கிறிஸ்தவர்கள் எப்படியாக அவர்களது இயல்பான கலாச்சார நாட்டமானது அவர்தம் தூதியல் முறைமைகளிலே செய்வாக்குச் செலுத்துகிறது என்பதைப்பற்றிய விழிப்பறிவைக் கொண்டிருக்கவேண்டும். பெரும்பான்மையான உலகக் கலாச்சாரங்கள் தேவனுடைய இரட்சிப்பை வல்லமை மற்றும் சமூகத்தினூடாக மேம்பட இடைப்படக்கூடும்.

# வல்லமை இடைப்படுதல்

பவுலும் பர்னபாவும் தமது முதலாவது பயணத்தின்போது அந்தியோகியாவைவிட்டுப் புறப்பட்டு சீப்புரு தீவை வந்தடைந்தார்கள். அதன் தேசாதிபதி பவுலையும் பர்னபாவையும் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொள்ளும்படி அழைப்பு விடுத்தான், ஆனால் ஒரு உள்ளூர் மந்திரவாதி அவர்களது செய்தியை எதிர்க்க ஆரம்பித்தான். அந்த மந்திரவாதியின் வார்த்தைகளின் பின்னாகச் செயற்படும் இருண்ட ஆவி வல்லமைகளைப் பவுல் உடனடியாகவே இனங்கண்டுகொண்டவராக, கர்த்தரின் கரத்தை அவனுக்கு எதிராக இருக்கும்படி ஆணையிட்டான். அந்த மந்திரவாதியின் கண்கள் எப்படிக் குருடாயிற்று என்பதைக் கண்ட தேசாதிபதி, கர்த்தரைப் பற்றியதான அவர்களது போதனையை விசுவாசித்தான். அந்த சீப்புருதீவு தேசாதிபதி சுவிசேஷத்தின் வல்லமையை அப். நட. 13:4–12 இலே இடைப்பட்டான்.

அச்சம் – வல்லமை கலாச்சாரங்களுக்கு கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திலே நம்பிக்கை கொள்வதற்கு காரணிய விளக்கமல்ல, வல்லமை நிரூபணம் தேவைப்படலாம். தேவனுடைய வல்லமையை மக்கள் தமது நாளாந்த வாழ்விலே கைக்கெட்டியதாகக் கண்டுகொள்ளவேண்டும். வல்லமை இடைப்படுதல் அணுகுமுறையின்போது, தூதுப்பணிகள் ஆன்மீக யுத்தங்களாகும்.

கிறிஸ்தவர்கள் சாத்தானின் வல்லரண்களை மேற்கொண்டு தேவனுடய ராச்சியத்தை விஸ்தரிப்பதற்காகப் போரிடும் தேவனுடைய படைகள். சபையானது மக்களை இருளின் ராச்சியத்துக்குள் இருந்து இயேசுவின் ராச்சியத்துக்குள் மக்களை மீட்கிறது. தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்ட விசுவாசிகள் சாத்தானின் அடிமைப்படுத்தும் வல்லமையை தேவனுடைய விடுவிக்கும் வல்லமையோடு எதிர்த்துப் போரிடுவார்கள். சுவிசேஷகத்துவமானது ஒரு வல்லமை இடைப்படுதலாக இருக்கும், அதிலே மனந்திரும்பியவர்கள் ஒரு ஆன்மீக அதிகாரத்தின்கீழ் இருந்து (சாத்தான்) இன்னொரு அதிகாரத்துக் கீழ்ப்படும்படி (இயேசு) நகர்வார்கள். மூல்மமான யுத்தமானது தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையே கட்டுப்பாட்டுக்கும் ஆராதனைக்குமாக இடம்பெற்றாலும் அது இங்கே பூமியிலும் அரங்கேறுகிறது. இவ்வகையில், ஆன்மீகப் போராட்டமானது பூமியிலான வாழ்வுமீது இயேசு பெற்ற பரலோக வெற்றியைப் பொருத்தமானதாக ஆக்குகிறது. ஆன்மீகப் போராட்டத்துக்கான அடிப்படையான கருவிகள் தேவனுடைய வார்த்தையும் ஜெபமுமாகும்.

தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்கள் சாத்தானின் போலி ராச்சியத்தின் ஏமாற்றுதல்கள் மற்றும் பொய்களுக்குத் தாக்குப்பிடிக்கத்தக்க ஆன்மீக வளங்களை எமக்கு வழங்குகிறது. ஜெபம், மெய்யான விசுவாசத்தோடு இணைந்ததாக இருக்கும்போது அது ஆன்மீகச் செல்வாக்குக்கான வழிமுறைகளான மந்திரச் சடங்காசாரங்கள் மற்றும் பரிசுத்த வஸ்துக்களை இடம்பெயர்க்கிறது. ஜெபமானது ராஜரீக சிருஷ்டிகரிடம் அவரது மகிமையுள்ள ராச்சியத்தைப் பூமியிலுள்ள பரிசுத்தவான்களை ஆசீர்வதிப்பதால் விஸ்தரிக்கும்படியாக உறவார்ந்த ரீதியிலே கேட்பதாக உள்ளது.

வேதாகமத்தாலும் ஜெபத்தினூடாகவும் பெற்றடைந்த தெய்வீக வல்லமையைப் பல வழிமுறைகளிலே கிறிஸ்தவர்கள் பிரயோகித்திடலாம்.

1. ஆற்றுப்படுத்திடும் ஊழியங்கள் தேவனுடைய ஆன்மீக வளங்களாலும் கிறிஸ்துவிலான மெய்யான அடையாளத்தாலும் பாவத்தின் பிணைப்புக்களை மேற்கொள்ளும்படிக்கு கிறிஸ்தவர்களை சீஷத்துவப்படுத்தும். சாத்தானின் வஞ்சனையையும் மற்றும் உள்ளகக் குணமாக்குதலையும் பகுத்தறிவதால், விசுவாசிகள் ஆன்மீக அடிமைத்தனத்திலும் பாவத்திலும் இருந்து தேவனுடைய விடுதலையை அனுபவிப்பார்கள்.

2. அதிசயங்களும் அடையாளங்களும் தேவ ஆவியினுடைய வல்லமையை விசுவாசிகள் மத்தியில் புலப்படுத்திடும் காணத்தக்க அற்புதங்களாகும். இயேசுவின் சீடர்கள் இருளின் வல்லமைகளை இயேசுவின் நாமத்திலே ஜெபிப்பதால் மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டவர்கள்.

3. தீர்க்கதரிசனம் நேரடியான, அறிவுறுத்தல் அல்லது உற்சாகமூட்டும் ஆன்மீக வார்த்தைகளைக் குறிக்கும், அது தேவனுடைய ஆவியின் வல்லமையையும் அறிவையும் புலப்படுத்திக்காட்டுவதாய் இருக்கும்.

4. மோசேக்கும் பார்வோனுக்கும் இடையிலான (யாத்திராகமம் 7–12) அல்லது எலியாவுக்கும் பாகால் தீர்க்கதரிசிகளுக்கும் இடையிலான இடைப்படுதல்களைப்போல (1 ராஜாக்கள் 18) பகிரங்க இடைப்படுதல்கள் வம்சக் கடவுள்களினது வல்லமையைச் சவாலிட்டு, சிருஷ்டி தேவனின் மேலான வல்லமையை நிரூபிக்கும்.

5. கனவுகள் அநேகமாகத் தேவனுடைய வெளிப்படுதல்களாக விளங்கிக்கொள்ளப்படும். பல முஸ்லிம்கள் இயேசுவைக் கனவில் கண்டபின்பு கிறிஸ்துவிடம் திரும்புவதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. முஸ்லிம்களுடனான கலந்துரையாடல்கள் வாக்குவாதங்களாக மாறும்போது, சிலவேளைகளிலே நான் அந்த

உரையாடலை "இயேசு உமது கனவில் வரும்படி நான் ஜெபிக்கிறேன். அப்படி அவர் வந்ததும் என்னைத் தொலைபேசியில் அழையும்" என்று திசை திருப்புவதுண்டு.

6. மக்கள் தேவனுடைய வல்லமையின் நற்செய்தியை ஆற்றுப்படுத்தலூடாக, அடையாளங்கள் அதிசயங்களூடாக, தீர்க்கதரிசனமூடாக, பகிரங்க இடைப்படுதல்களூடாக, மற்றும் கனவுகளூடாக அனுபவிக்க முடியும். அச்சம்–வல்லமை பின்புலங்களிலே கிறிஸ்தவத் தூதுப்பணியானது சுவிசேஷத்தைத் தேவனுடைய வல்லமையைப் பின்புலத்திற்குப் பொருத்தமான வழிமுறைகளிலே வெளிப்படுத்துவதனூடாக வழங்க முடியும்.[19]

# சமூக இடைப்படுதல்

பவுலும் சீலாவும் அவர்களது சிறைக்கூண்டுக்குள் இருந்து, தேவனுக்குப் பாடல்கள் பாடி ஜெபித்துக்கொண்டிருந்தனர். திடீரென ஒரு பூமியதிர்ச்சி உண்டாகி, சங்கிலிகள் கழன்றுவிழ சிறைச்சாலைக் கதவுகளும் திறக்கப்பட்டன. நித்திரையில் இருந்த சிறைக்காவலாளி இந்தக் களேபரத்தால் திடீரென விழித்தெழுந்து, நிலைமையைக் கண்டுகொண்டதும் தான் தனது கடமையிலே தவறியதாகக் கருதித் தன்னை மாய்த்துக்கொள்ளும்படி தன் பட்டயத்தை உருவினான். பவுல் சரியான நேரத்திலே குரல் கொடுத்தார்: "உனக்குக் கெடுதி ஒன்றும் செய்துகொள்ளாதே! நாங்கள் இங்கேதான் இருக்கிறோம்!" நிலைமை தணிந்ததும் அந்த சிறைக்காவலாளியும் அவனது வீட்டாரும் இரட்சிப்புக்காகக் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து, பவுலோடும் சீலாவோடும் இரவுநேர ஐக்கியத்தில் ஒன்றாகக் கூடிக் களித்திருந்தனர். அப். நட. 16 இலே, பிலிப்பிய சிறைக்காவலாளியின் குடும்பம் சமூகமாக சுவிசேஷத்துடன் இடைப்பட்டபோது அவர்கள் இயேசுவிலே விசுவாசித்தார்கள்.

அவமானம்–கனமேன்மை பின்புலங்களிலே, கிறிஸ்தவத் தூதுப்பணியானது மெய்யான சமூகத்துடன் இடைப்படும்படியாக மக்களைக் கொண்டுவருகிறது. ஒரு சமூக இடைப்படுதலானது நபரொருவரின் பிரதான குழும அடையாளத்தை மெய்யான உறவுகளூடாக மீள்வரையறுக்கிறது. புதியதோர் சமூகத்துக்குள்ளான நுழைவானது ஒருவரது ஆன்மீக நிலைமையை மாற்றியமைக்கிறதாய் உள்ளது. மனமாற்றம் என்பது புதியதோர் குழுவுக்கு – தேவனுக்கும் அவரது ஜனங்களுக்கும் – தனது ராஜவிசுவாசத்தையும் உண்மைத்தனத்தையும் வழங்குவது என அர்த்தம்பெறும். சமுதாய

இடைப்படுதலூடாக, அவிசுவாசிகள் தமது நற்கீர்த்தியின் முன்றிலையும் (அதாவது, எந்த மக்கள் கனமேன்மையானவர்கள் என்பதை யார் தீர்மானிப்பது), மற்றும் கனமேன்மை நியமத்தையும் (அதாவது எது மெய்யாகவே கனமேன்மைக்குரியது எது அவமானத்துக்குரியது என்பது) தேவனுடைய கனமேன்மை வெளிச்சத்திலே மீள்வரையறுக்கிறார்கள். ஒரு வேதாகமச் சமூகத்தின் இடைப்படுதலானது மூன்று குழுக்களிடையேயான முகப்பிடையைக் கொண்டதாகும்: திரித்துவம், சபை, மற்றும் குடும்பம்.

## *திரித்துவம்*

கிறிஸ்தவ தூதுப்பணியானது மிகவும் கனமேன்மையானதும் மகிமையானதுமானவருடனான இடைப்படுதலுக்கு இட்டுச்செல்லும். கனமேன்மையானது திரித்துவ சமூகத்தைச்சூழ மீள்திசைப்படுத்தப்படும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி திரித்துவமானது சமூகக் கனமேன்மையாக குடும்பம், மொழியினம் மற்றும் குலவினம் ஆகியவற்றை இடம்பெயர்க்கிறது. அவமானப்பட்டவர்களைப் பிதாவானவர் கிருபையுள்ள ஏற்றுக்கொள்ளுதலுடனும் கனமேன்மையோடும் வரவேற்கிறார். குமாரன் இப்போது எமது கனமேன்மையான சகோதரனாய் இருக்கிறார், எமக்காகப் பரலோகத்திலே ஒரு இருக்கையை அவர் ஆயத்தமாக்கி வைத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் எமது எதிர்காலத்து மகிமைச் சுதந்தரத்துக்கான பிணைப்பணமாக வருகிறார். மெய்யான முகமானது தேவனுடைய முகத்தை இடைப்படுதலால் மாத்திரமே வரும். உறவார்ந்த ரீதியிலே தேவனுடைய முகத்தை அறிதலானது, இயேசுவின் முகத்திலே வெளிப்படுத்தப்பட்டதுபோலவே, புதியதும் உன்னதமானதுமான புதிய அந்தஸ்தைப் பெற்றடையவதற்கான ஒரேயொரு நிச்சயமான மூல்மமாகும்.[20]

பிலிப்பிய சிறைக்காவலாளி தனது பணியிலே வெட்கப்படத்தக்க தோல்வியை மூடிமறைப்பதற்காகத் தன்னைத்தானே கொன்றுபோட நாடினான். ஒரு ஜப்பானியப் போர்வீரனைப்போல தனது சொந்த வாழ்வைப் பலியிடுவதன்மூலம் தனது மக்களின் கனமேன்மையைப் பாதுகாத்திடும்படி அவன் செயற்பட்டான். கனமேன்மை–அவமான கலாச்சாரங்களில் உள்ள மக்கள் சமூக அவமானத்தின் போலித்தனத்தை அங்கீகரித்திடவேண்டும். அது ஆரம்பத்திலே மிக வேதனையானதாக இருந்தாலுங்கூட அது அவசியமே. தனது வாள் உருவப்பட்டிருந்த நிலையில், பிலிப்பிய சிறைக்காவலாளி எப்படியாகத் தேவனுடைய கனமேன்மையானது சாத்தியமான அனைத்துச் சமுதாய

அவமானங்களிலும்பார்க்கக் கனமானது என்பதைக் கருத்திற் கொள்ளுமளவுக்கு நேரம் எடுத்தான்.

நித்திய மகிமையானது முற்றும் முழுதுமாகத் தேவனுடைய குமாரனூடாகவே வருகிறது (யோவான் 17:22), ஏனெனில், தேவனுடைய மனக்கருத்தே என்றென்றைக்கும் நிலைக்கும். கனமேன்மைக்கான ஒரே மூல்மமாயும் மத்தியஸ்தராயும் உள்ள தேவனை மக்கள் நிராகரிக்கும்போது, அவர்கள் நித்தியமகிமைக்கும் மேலாக அநித்தியமான கனமேன்மையைத் தெரிவுசெய்கிறவர்களாகிறார்கள் (யோவான் 12:42–43). கிறிஸ்தவ தூதுப்பணியானது போலியான அவமானத்தையும் ("நான் பெறுமதியில்லாத ஒன்றமில்லாதவன், செல்லாக்காசு") மற்றும் போலியான கனமேன்மையையும் ("எனது குழுதான் மிகச் சிறப்பானது!") தேவனிடமிருந்தான மெய்யான கனமேன்மையினால் இடம்பெயர்க்கிறது.

## *சபை*

சிறைக்காவலாளியின் ஜீவனைக் காப்பாற்றும்படி பவுல் கதறினார், "நாங்கள் இங்கே இருக்கிறோம்!" பூமியிலுள்ள கிறிஸ்துவின் சரிரம் என்ற ரீதியிலே சபையானது அவிசுவாசிகள் சுவிசேஷத்தை இடைப்படும் பிரதம சமுதாயமாக உள்ளது. முடிவான கனமேன்மை தேவனிடமிருந்து வருகிறதாயிருக்க, பூமியிலே தேவனுடைய குடும்பத்திலே பங்கேற்பதிலேதான் கனமேன்மை மீளுருவாக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு புலப்படுத்தப்படும். கிறிஸ்தவ சமூகமானது மக்களின் கனமேன்மையை உறுதிப்படுத்தும். சபையானது ஒரு செவிலிக்குடும்பமாக (surrogate family) தொழிற்படுகிறது, அதன் கிருபைமிகு வரவேற்பானது மக்களை அவர்களது அவமானத்தை களைந்துபோடும்படி விடுவித்திடும்.

அவமானம்–கனமேன்மை மக்களின் உரையாடலானது பொதுவாக சமுதாயத்துடனேயே (அதாவது சமுதாயம்? சுவிசேஷக மயமாக்கம்) ஆரம்பிக்கும், ஆனால் சத்திய இடைப்படுதலானது தனிநபர்களை சுவிசேஷமயப்படுத்துவதுடன் ஆரம்பித்து அவர்களைச் சபைக்குள் சேர்க்கும் (சுவிசேஷகமயம்? சமுதாயம்). குழு–நாட்டமான மக்கள் ஒரு குழுவுக்குள் நுழையும்படிக்கான அழைப்பினை ஏற்றுக்கொள்ள முன்பதாக அதனை முதலில் அனுபவித்திருக்கவேண்டும். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பொதுவாகவே தேவனுடைய சமுதாயத்துக்குள் உள்ளடக்கப்படுவதை கிறிஸ்தவ இரட்சிப்புடன் சமப்படுத்துவதுண்டு. "அவரிலே நம்பிக்கை கொள்கிற எவரும்

அவமானத்துக்கு உள்ளாக்கப்படமாட்டார்கள். எனவே கனமேன்மையானது விசுவாசிக்கிற உங்களுக்கே.... ஆனால் நீங்கள் தெரிவுசெய்யப்பட்ட இனம், ராஜரிக ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி, அவருக்குச் சொந்தமான ஜனங்கள்... முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாய் இருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாய் இருக்கிறீர்கள்.." (1 பேதுரு 2:6–10, புதிய மொழிபெயர்ப்பு).

சுவிசேஷத்தை அவமானம்–கனமேன்மை கலாசாரத்திலே வழங்கும்போது, அவிசுவிவாசிகளுடன் விசுவாசிகள் கொண்டிருக்கும் உறவார்ந்த பாலங்கள் மாண்பையும் கனத்தையும் கொண்டிருக்கவேண்டும். மக்களுடன் நாம் இடைப்படும் விதமானது நாம் பிரகடனப்படுத்தும் செய்திக்கு இசைந்ததாய், அது தேவனுடைய கனமேன்மையை கைக்கெட்டுமளவுக்கு உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். கனமேன்மை–அவமானம் பின்புலங்களில் உள்ள மக்களை அடைவதற்கு மெய்யான கனமேன்மையை வார்த்தையினாலும் கிரியையினாலும் கூறுவது அவசியமானதாகும். தெரியாமற்தன்னும் மக்களை அவமானப்படுத்துவது, தேவனுடைய கனமேன்மையின் சுவிசேஷத்தை முரண்படுத்துவதாய் இருக்கும். தேவனுடைய கனமேன்மையை மக்களுக்கும் சமுதாயங்களுக்கும் உறவார்ந்த ரீதியிலே பகிர்வதற்கான நான்கு வழிமுறைகள் இதோ.

பிலிப்பிய சிறைக்காவலாளி தேவனுடைய கனமேன்மையை பவுலுடனும் பர்னபாவுடனுமான அவனது உறவினூடாக உணர்ந்துகொண்டான். சிறையில் இருந்து தப்பித்து ஓடாமல் இருந்ததால், அவனது கனமேன்மையைப் பாதுகாக்கும்படிக்காக அவர்கள் தமது சொந்த வாழ்வையே பலியிடத் தயாராக இருந்தனர். பின்பு ஒன்றாக உணவருந்தும்படிக்கான சிறைக்காவலாளியின் அழைப்பை அவர்கள் கிருபையாக ஏற்றுக்கொண்டார்கள். உணவிலே கலந்துகொள்வதானது உறவுப்பிணைப்பை ஏற்படுத்தும் என்பதால், அது பிறரைக் கனமேன்மைப்படுத்தும் வினைத்திறனுள்ள ஒரு வழிமுறையாகும். திருமேசைப் பந்தியானது ஓரங்கட்டப்பட்டவர்களை சுவிசேஷத்தில் இயேசு கனமேன்மைப்படுத்திய பிரதான வழிமுறையாக இருந்தது (லூக்கா 15:1). பகிரப்பட்ட மேசையானது கூட்டுச் சமூகங்களில் உரத்த சத்தத்திலே பிரசங்கம் செய்வதற்கொப்பான விதத்திலே தேவனுடைய கனமேன்மையைப் பிரசங்கித்திடும்.

நல்லதொரு அபிவிருத்தித் திட்டமானது மக்கள் தத்தம் கலாச்சாரங்களிலும் ஆட்தன்மைகளிலும் உள்ளதான கனமேன்மையான அம்சங்களைப் புலப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கும். சொத்து–சார்ந்த சமூக அபிவிருத்தி (Asset-Based Community Development (ABCD)

அணுகுமுறையானது மக்களது சொத்துக்கள் மற்றும் சமூக மூலதனம் ஆகியவற்றை வலியுறுத்துவதால் மக்களை கனமேன்மைப்படுத்தும்.[21] துரதிஷ்டவசமாகச் சில கிறிஸ்தவ அபிவிருத்தி முயற்சிகள் மக்களின் தேவைகள் மற்றும் வறுமையுடன் ஆரம்பிப்பதால் அவமானத்தை நிலைத்திருக்கச் செய்கிறது. உறவுகளிலே எப்போதும் பெறும் அந்தலையிலே இருப்பதானது மக்களின் தாழ்வுநிலை மற்றும் பெறுமதியின்மை ஆகிய செய்திகளை வலிவூட்டுகிறதாய் இருக்கும்.

இரக்கத்தின் ஊழியங்கள் மக்களை உலக அவமானங்களின் பிணைப்புக்களில் இருந்து விடுவிக்கலாம். உதாரணமாக, ஆபிரிக்காவின் மேர்சி ஷிப்ஸ் (Mercy Ships) மருத்துவ ஊழியமானது முகக்கட்டிகள் போன்ற பார்க்கச் சகிக்காதவைகளை அகற்றுவதன்மூலம் மக்களின் சமூக அந்தஸ்தை மாற்றியமைத்து வருகிறது. இது "நம்பிக்கையின் மிதக்கும் மருத்துவமனை (Floating Hospital of Hope)" எனும் 60 நிமிட ஒளியாவணமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.[22]

மக்களை உறவார்ந்த ரீதியிலே கனமேன்மைப்படுத்தும் நான்காவது வழிமுறை, அவர்களது முரண்பாடுகளை கௌரவத்துடன் கருத்திற் கொள்வதாகும். கனமேன்மை–அவமான கலாச்சாரங்களிலே வாழும் கிறிஸ்தவர்கள் முரண்பாடுகளை பிறரைக் காயப்படுத்தாது அல்லது அவர்களை நிர்க்கதியாக்காது தீர்த்துக்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். யாரையாவது நீங்கள் மனமடிவாக்கியிருந்தால், அவர் கனமேன்மை மீள்சீர்படுத்த உதவுவது அவரிடம் வாயால் மன்னிப்புக் கேட்பதிலும் பார்க்க அதிகப் பொருத்தமானதாக இருக்கும். அல்லது பிறருக்கு மன்னிப்பைத் தொடர்பாடல் செய்வதற்கு, பரிசு அல்லது உணவு போன்றதான வார்த்தைகளில்லாத ஒப்புரவாக்கல் முறைமைகளைக் கருத்திற் கொள்ளவும். முரண்பாட்டின்போது வெறுமனே சரி அல்லது தவறு ஆகியவற்றிலே குவியநோக்கம் கொள்ளாமல், முகம் மற்றும் நற்கீர்த்தியின் இயக்கவிசைக்குக் கவனம் செலுத்துவதானது உறவுகளைப் பாதுகாத்து மீள்சீரமைக்கும்.[23]

ஒன்றாக உணவருந்துதல், சொத்து–சார்ந்த சமூக அபிவிருத்தி, இரக்க ஊழியங்கள், மற்றும் முரண்பாட்டுக்கான கிருபைமிகு தீர்வு ஆகியவைகள் சபையானது கனமேன்மையோடு தொடர்பாடல் செய்யக்கூடியதான பல கைக்கெட்டிய வழிமுறைகளைக் குறிப்பிடுகிறது.

## குடும்பம்

கூட்டுக் கலாச்சாரங்களிலே, கிறிஸ்தவத்துக்கான மனமாற்றமானது ஒருவரது உயிரியற் குடும்பத்தையும் அயலாக உள்ள சமூகத்தையும் அவமானப்படுத்தக்கூடும். பல சந்திக்கப்படாத சமூகத்து மக்கள் கிறிஸ்தவத்தை இறையியற் காரணங்களுக்காக அல்ல, ஆனால் ஒருவரது குடும்பத்தை அவமானப்படுத்தத்தக்கதாக உள்ள சமூக கலாச்சார சக்திகளின் நிமித்தமே நிராகரிக்கின்றனர். கூட்டுச்சேர்ந்த மக்களுக்கு, குழுவில் இருந்து தனிமைப்படுத்துகிறதாக தமது மதத்தைத் தெரிவுசெய்வது என்பது அந்தக் குழுவையே நிராகரிப்பதாகக் கருதப்படும். பல மத்திய ஆசிய அவிசுவாசிகள் நான் அறியத்தக்கதாகத் தேவனுக்கு முன்பாகத் தமது அவமானத்தை ஏற்றுக்கொண்டு, நித்திய கனமேன்மைக்கான ஒரேயொரு வழி இயேசுவே என்பதை உணர்ந்துகொண்டனர், ஆனாலுங்கூட, தமது சமூக அந்தஸ்தை அல்லது குடும்ப கௌரவத்தை இழந்து இயேசுவைப் பின்பற்றுவதற்கு அவர்கள் தயாராக இருந்திராததை நான் நினைத்துப் பார்க்கிறேன். சமூக அவமானத்தின் நிமித்தமாக, கனமேன்மை மற்றும் அவமானத்தின் மொழிநடையிலே மீளப்பொதிகட்டப்படும் ஒரு சுவிசேஷச் செய்தியானது கதவுகளைத் திறக்கும் மந்திரத்திறப்பாக அநேகமாக இருக்கமாட்டாது. கனமேன்மை–அவமான பின்புலங்களிலே கிறிஸ்தவ ஊழியமானது சுவிசேஷக முறைகள் மற்றும் மனமாற்ற செயன்முறைமைகள் ஆகியை அனைத்தையுமே பின்புலமயப்படுத்திடவேண்டும்.

கிறிஸ்துவிலே விசுவாசமானது எப்போதுமே தனிப்பட்டதாயும், குழுக் கடப்பாடுகளை நிராகரிப்பதை அது உள்ளடக்குவதாயும் இருந்தாலுங்கூட, குடும்ப மனமாற்றங்கள் பற்றிய புதிய ஏற்பாட்டு உதாரணங்கள் உண்டு. சிறைக்காவலாளியின் முழுக் குடும்பமும் இரட்சிக்கப்படுவதற்கான பவுலின் அழைப்பானது ஒருவர் குடும்பத்தின் பிறரை அவமானப்படுத்தும் அவதூறைத் தவிர்த்துவிட்டது. "குழும மனமாற்றம்" பற்றிய எண்ணமானது தனிப்பட்ட விசுவாசம் மற்றும் மனமாற்றத்தைப் புறக்கணிக்க மாட்டாது, ஆனால் மக்கள் ஒரு குழும அமைப்பிலே (group setting), நபரிடைச்சார்ந்துள்ளவர்களாக (nterdependently), ஒரேபோல (simultaneously) தீர்மானங்களை எடுப்பதை விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதாக உள்ளது. குழும அனுபவமாகக் கிறிஸ்துவிடம் திரும்புதலானது தேவையற்ற சமூக இடம்பெயர்வினை மட்டுப்படுத்துகிறது.[24]

கிறிஸ்துவுக்காக நபரிடைச்சார்ந்த தீர்மானம் பற்றிய எண்ணமானது எமது சுவிசேஷகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். உதாரணமாக, ஒரு இளவயது நபர்

இயேசுவிலே தனது ஆவலைப் புலப்படுத்தினாரேயாகில், அவரது முழுக் குடும்பத்தையுமே உரையாடும்படி அழைப்பது விவேகமானதாய் இருக்கும். அந்தவீட்டார் தலைவருடன் பகிர்வதாலும், குடும்பமாகக் கிறிஸ்துவைப் பின்பற்றும் தீர்மானம் எடுக்க எதிர்பார்ப்பதாலும், அவர்களது சமூகத்தில் இருந்து ஒரு தனிநபரைப் பிரித்தெடுப்பதால் எழக்கூடிய சமூகக் கொந்தளிப்பை நாம் மட்டுப்படுத்தலாம். சமூக இடைப்படுதலின் ஒரு தூதியல் அணுகுமுறையானது மக்கள் இயேசுவைச் சமூகமாக இடைப்பட உதவிசெய்கிறது, வெறும் தனிநபர்களாக அல்ல.

இருந்தாலுங்கூட, அவமானம்–கனமேன்மை சமூகங்களில் உள்ள சிலர் கிறிஸ்துவைப் பின்பற்றும்படிக்குத் தனித்த தீர்மானங்களை எடுக்கக்கூடும். இது பொதுவாக குடும்ப வாதங்கள், அனல்கக்கும் அச்சுறுததல்கள், சமூகத்துப் புறம்பேசுதல் ஆகியவற்றை உருவாக்குகிறது. இத்தகையதான சவால்நிறைந்த சூழ்நிலைகளில், புதிய விசுவாசியை அவரது கலாச்சார வழக்கங்களை அலட்சிப்படுத்தாமல் அவர்களது குடும்பத்திலே தொடர்ந்தும் நிலைத்திருக்கும்படி ஊக்குவிப்பதால் அங்கே நீண்ட கால நன்மைகள் ஏற்படலாம். குடும்ப வலையமைப்புகள்தான் அவமானம்–கனமேன்மை பின்புலங்களிலே சுவிசேஷத்தை ஊடுகடத்துவதற்கு இயல்பாகவே அமைந்த வடிகால்கள், எனவே சாத்தியமானவரைக்கும் அவைகள் பேணப்படவேண்டியவை. புதிய விசுவாசிகளை அவர்களது சமூக வலையமைப்புக்களில் இருந்து பிரித்தெடுப்பதானது கிறிஸ்தவர்களாக அவர்களது செல்வாக்கை வரையறுத்துப்போடுவதாய் உள்ளது. மத்திய ஆசியாவிலே, மனம்மாறிய கிறிஸ்தர்களுள் சுமார் 70% பேர் அவர்களது விசுவாசிக்கும் உறவினர்களூடாக வந்தவர்கள் என்பதை நாம் கண்டு கொண்டோம். தாய்லாந்திலே மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வானது ஒரு அவிசுவாசி கிறிஸ்தவராக வருவதற்கான வாய்ப்பானது அவருக்கு ஒரு கிறிஸ்தவ உறவினர் இருந்தால் 229 மடங்கு அதிகமானதாக இருக்கும் என முடிவுசெய்தது.[25]

அவமானம்–கனமேன்மை கலாச்சாரத்தில் உள்ள மக்கள் தமது சொந்த சமூக வலையமைப்புக்களுக்குள்ளேயே தெய்வீகம் மற்றும் சபைச் சமூகத்தை இடைப்படுவார்களாய் இருந்தால் அவர்கள் சுவிசேஷத்தை அர்த்தமுள்ள விதத்திலே அனுபவிக்கலாம்.

# 5

# முடிவாக

பாவமானது குற்ற உணர்வு, அவமானம் மற்றும் அச்சத்தை விளைவித்து மனுக்குடும்பங்களை உருக்குலைக்கிறது. அதன் விளைவாக உலகின் கலாச்சாரங்கள் தேவனை அல்லாத அப்பாவித்தனம், கனமேன்மை, மற்றும் வல்லமை ஆகியவற்றைப் பெற்றடையத் துரத்துகின்றன. ஆனால் வேதாகமத்தின் தேவன் அனைத்து மக்களையும் கிறிஸ்துவிலே இரட்சிப்பின் முழுமையோடு ஆசிர்வதித்திட வாஞ்சிக்கிறார். சபையின் அழைப்பு எதுவெனில் எமது ஆளமான கலாச்சார மற்றும் ஆன்மீக ஏக்கங்களைக் கவனத்திற் கொள்கிற தேவனை தேசங்களுக்கு அர்த்தமுள்ள வகையில் அறிமுகம் செய்வதாகும்.

ஆனால் 3 பரிமாண சுவிசேஷமானது குறிப்பாக ஊழியத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கும், அதேபோல சந்திக்கப்படாத கலச்சாரங்களைச் சந்திப்பதற்கும் உரியது. வைரக்கல்லின் ஒரு முகப்புத்தோற்றத்தை மாத்திரம் பார்க்கிறதான இறையில் சுரங்கப்பாதை தேவனுடனான எமது சொந்த உறவையே சங்கிலியால் கட்டிப்போட்டுவிடும். மேற்கத்தேய கிறிஸ்தவர்கள் பாவங்களின் மன்னிப்புக்காக இயேசுவிலே முழுமையாக நம்பிக்கை கொள்ளக்கூடுமாயினும் அவர்கள் அவமானத்தினாலும் பயத்தினாலும் வாதிக்கப்படலாம். தாம் "போதியளவுக்கு நன்றாக இல்லை" எனக் கிறிஸ்தவர்கள் அநேகமாக அவமான உணர்வு கொண்டு, தமது தோற்றக் குறைபாடுகளை மூடிமறைக்க முயற்சிப்பர். கடந்தகாலத்து காயங்கள் அல்லது அண்மைய தோல்விகள் போன்றவைகளால் ஏற்படும் போதுமற்ற உணர்வு அல்லது தாம் பொருட்டானவர்களல்ல எனும் உணர்வு தேவனுடனான எமது நெருக்கத்தைத் தடுத்துப்போடும். அச்சமும் மேற்கத்தேய கலாச்சாரத்தை போலி உயிரோட்டம் கொடுக்கும். எம்மைத் தாக்கும் ஆன்மீக சக்திகளைப்பற்றி ஒருவேளை நாம் அவ்வளவாக கவலைப்படாதிருக்கலாம், ஆனாலும் எமது எதிர்காலத்தைப்பற்றிய ஏக்கமும் கவலையும் எமக்கு இருக்கும். இந்த

அச்சமானது "நவீன" சக்திகளிலே (சொந்தநாட்டுப் பாதுகாப்புத் திணைக்களம் The Department of Homeland Security, சார்ள்ஸ் ஷுவப் Charles Schwab, 401(k) போன்றவைகள்) எமது பாதுகாப்பைக் கண்டுகொள்ளும்படி எம்மை உந்தித்தள்ளலாம். முப்பரிமாண (3D) சுவிசேஷத்தை நாம் பிரகடனப்படுத்த முன்பதாக, நாம் எமது சொந்த வாழ்விலே அதனை அனுபவித்து அதனைப் பிரதிநிதித்துவம் செய்யவேண்டும்.[26]

மிக முக்கியமாக, ஒரு பரிமாண சுவிசேஷமானது வேதாகமத்தின் உண்மைத்தனத்தையும் நம்பகத்தனத்தையும் அச்சுறுத்துகிறதாய் உள்ளது. நாம் வேதாகமத்தைத் தப்பாக வாசித்து, தேவனைப்பற்றி வேதாகமத்துக்குத் தாழ்ந்துபட்டதான கண்ணோட்டத்தைக் கட்டமைக்கிறவர்களாகிறோம். தேவன் எம்மை அவமானம் மற்றும் அச்சத்தில் இருந்து மீட்காவிட்டால் (கொள்கையளவில் மாத்திரமல்ல, நடைமுறையிலும்), நாம் தேவனாக அவரது மகிமையை மோசமாகக் குறைத்துப்போடுகிறவர்களாக இருப்போம். ஒரு 3 பரிமாண சுவிசேஷமானது எமது பரிசுத்த, மகிமையுள்ள மற்றும் ராஜரீக தேவனை முழுமையாக நாம் ஆராதிப்பதற்கு எம்மை அனுமதிக்கிறதாயுள்ளது.

சுவிசேஷத்தின் பரிமாணங்களை நாம் பற்றும்போது, நாம் தேவனை அதிக வினைத்திறனுடன் அறியவும் அவரைத் தெரியப்படுத்தவும் முடியும். முடிவாக, "... நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்திலே தமக்கு (தேவன்) உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், ... அவரிடத்தில் (இயேசு) நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்." (எபேசியர் 1:18–19). ஆமேன்!

# கலந்துரையாடல் மற்றும் சிந்தைப்பிரதிபலிப்புக் கேள்விகள்

## *கலாச்சராம் [அதிகாரம் 2]*

1. உங்களது ஊழியப் பின்புலத்திலே, எங்கெங்கே நீங்கள் குற்ற உணர்வு, அவமானம் மற்றும் அச்சம் ஆகிய கூறுகளைக் காண்கிறீர்கள்?
2. ஒவ்வொரு கலாச்சார வகையினதும் நல்ல மற்றும் கூடாத கூறுகள் எவை?
3. நீங்கள் (அல்லது வேறொருவர்) வேறுபட்ட கலாச்சார மதிப்பீடுகளின் நிமித்தமாக ஒரு சூழ்நிலையைத் தப்பாக வாசித்த "கலாச்சாரத் தவறு (miscue)" பற்றிய ஒரு உதாரணத்தைத் தரவும்

## *இறையியல் [அதிகாரம் 3]*

1. எந்த வேதாகமப் பகுதிகள் அல்லது இறையியற் சத்தியக்கோட்பாடு இப்போது உங்களுக்கு மேம்படப் புரிகிறது?
2. இரட்சிப்பின் மூன்று பரிமாணங்களுக்கும் (அதாவது மன்னிப்பு, கனமேன்மை, மற்றும் வல்லமை) இடையிலான உறவை நீங்கள் எப்படி விளக்குவீர்கள்?
3. நீங்கள் மனனம் செய்ய விரும்பும் ஒரு கதை அல்லது வசனம் எது?

## *ஊழியம் [அதிகாரம் 4]*

1. உங்களது ஊழியப் பின்புலத்தில் உள்ள மக்களோடு இந்த நூலின் எந்த உண்மைகள் இசைந்திடலாம்?
2. உறவுகளூடாயும் ஆன்மீக வல்லமையூடாகவும் மக்கள் சுவிசேஷத்தை இடைப்படும்படியாக உங்களது ஊழியத்தை நீங்கள் எப்படியாக மாற்றியமைக்கலாம்?
3. இந்த நூலைப் பார்க்காமல் கனமேன்மை–அவமானம் (அல்லது அச்சம்–வல்லமை) பதங்களிலே சுவிசேஷம் பற்றிய குறுகிய விளக்கத்தை வழங்கவும்

# கனமேன்மை & அவமானம் பற்றி மேலும் அதிகம் அறிந்திட

*கனமேன்மை–அவமானம் கலாச்சாரங்களிலே ஊழியம் (Ministering in Honor-Shame Cultures)* என்பது கனமேன்மை மற்றும் அவமானம் பற்றிய முழுமையான வேதாகம இறையியலை வழங்குவதுடன், கிறிஸ்தவ தூதுப்பணி பற்றிய பிரதான அம்சங்களுக்கான நடைமுறை ஆலோசனைகளையும் சம்பவ ஆய்வுகளையும் வழங்குகிறது. பொருத்தமான கதைகளும் ஒளிர்வூட்டும் உள்ளறிவும் கனமேன்மை–அவமானம் கலாச்சாரங்களிலான கிறிஸ்தவ ஊழியத்துக்கான அவசியமான வழிகாட்டலைப் பூர்த்தியாக்குகிறது. இன்டர் வாசிட்டி பதிப்பகம், 2016. 272 பக்கம் கொண்டது.




**இலவசமான தரவிறக்கமாக PDF ஆவணம்**

தயவுசெய்து www.HonorShame.com/book தளத்துக்கு விஜயம் செய்து அதிகாரம் 7, "உறவுகள் (Relationships)" என்பதை இலவசமாகத் தரவிறக்கவும். கனமேன்மை–அவமானம் கலாச்சாரங்களிலே "உறவுகளுக்கான 8 வழிகாட்டல்கள் (the 8 guidelines for relationships)" அதில் உள்ளது.

கனமேன்மை –அவமானம் பின்புலங்களிலே ஊழியம் செய்யும் கிறிஸ்தவர்களுக்கு நடைமுறையான துணைவளங்களையும் பயிற்சியையும் HonorShame.com எனும் வெப்தளம் வழங்குகிறது. இலவச பயிற்சி வீடியோக்கள், சுவிசேஷமயமாக்க வளங்கள், சிபார்சு செய்யப்படும் நூல்கள், சஞ்சிகைக் கட்டுரைகள் உட்பட மேலும் அதிகமானவைகளை அதில் நீங்கள் கண்டுகொள்வீர்கள். புதிய சிந்தனைகள் மற்றும் வளங்கள் ஆகியவை கிரமமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே நீங்கள் HonorShame.com/blog இலே பதிவுசெய்து இணைக்கப்பட்டிருங்கள்.

# குறிப்புக்கள்

[1] இயூஜின் நிடா, வழக்கங்களும் கலாச்சாரங்களும் [Eugene Nida, Customs and Cultures (New York: Harper, 1954)], பக் 150. கலாச்சாரத்தின் இந்த மூவகைப் பிரிப்பு நிடா இனால் ஆரம்பிக்கப்பட்டது, பின்பு இது ரோரன்ட் முல்லர் (Roland Muller) என்பவரால் கனமேன்மையும் அவமானமும் [Honor and Shame: Unlocking the Door (Philadelphia: Xlibris, 2001)] இலே விஸ்தரிக்கப்பட்டு பிரபல்யப்படுத்தப்பட்டது.

[2] "குழுமம்," விக்கிபீடியா, ஒக்டோபர் 1, 2014. http://en.wiktionary.org/wiki/groupality

[3] எபேசியர் பற்றிய மேலதிக வாசிப்புக்கு பார்க்க: கிளின்ற் ஆர்னல்ட், வல்லமையும் மந்திரமும்: எபேசியர் நூலிலே வல்லமை பற்றிய கருதுகோள் [Clint Arnold, Power and Magic: The Concept of Power in Ephesians (Eugene, OR: Wipf and Stock, 2001)]; பீற்றர் கொஸ்நெல், "எபேசியர் நூலிலே ஒன்றுசேர்க்கும் உத்தியாக கனமேன்மையும் அவமானமும் உரை" [Peter Gosnell, “Honor and Shame Rhetoric as a Unifying Motif in Ephesians,” Bulletin for Biblical Research 16:1 (2006): 105–128].

[4] முல்லர், கனமேன்மையும் அவமானமும் ( Muller, Honor and Shame), 16.

[5] "பூஸ்டன் மரதன் குண்டுதாரிகளை 'தோற்றவர்கள்' என்கிறார் மாமன் (Uncle Calls Boston Marathon Bombers ‘Losers’)," CNN, ஏப்பிரல் 19, 2013. http://www.cnn.com/2013/04/19/us/marathon-suspects-uncle/index.html

[6] அலெக்சாந்திரா கார்ஸியா மற்றும் சேர்கோ பெக்கன்ஹா, "பிரேஸிலில் உலகக்கிண்ண ஏமாற்றம்" (Alexandra Garcia and Sergio Pecanha, “World Cup Despair in Brazil,”), நியூயோர்க் டைம்ஸ் The New York Times, ஜுலை 9, 2014

[7] வெஸ்லி யங், "கிஷ் யென் எழுதிய 'டைகர் எழுத்தாக்கம்'" (Wesley Yang, “‘Tiger Writing,’ by Gish Jen,”) நியூயோர்க் டைம்ஸ் The New York Times, ஏப்பிரல் 25, 2013

[8] மேலதிக வாசிப்புக்குப் பார்க்க: "கனமேன்மை–அவமானம் கலாச்சாரங்களின் 8 போக்குகளைப் புரிந்துகொள்ளுதல்" [ “Understanding 8 Traits of Honor-Shame Cultures,” www.HonorShame.com, April 17, 2014, http://honorshame.com/understanding-8-traits-of-honorshame-cultures/]; "முகத்துக்கான விரட்டல்: மேற்கத்தேய கூட்டியலின் அவமானம்" [“The Chase for Face: The Shame of Western Collectivism,“ Jackson Wu, August 19, 2014, http://www.washingtoninst.org/8618/the-chase-for-face-the-shame-of-western-collectivism/]; டேவிட் டீ சில்வா, கனமேன்மை, போஷகத்துவம், வாரிசு மற்றும் தூய்மை [David deSilva, Honor, Patronage, Kinship, and Purity (Downers Grove, IL: InterVarsity Press, 2000)].

[9] ஸ்ரீவன் ரொபேட்ஸ், "றீகன்கள் சாத்திரத்தைப் பின்பற்றுகிறார்கள் என்பதை வெள்ளைமாளிகை உறுதிப்படுத்துகிறது, குறிப்பாகத் தெரிவிக்கிறது" (Steven V. Roberts, “White House Confirms Reagans Follow Astrology, Up to a Point,”), நியூயோர்க் டைம்ஸ் The New York Times, மே 4, 1988

[10] போல் ஹீபேட், "விலக்கப்பட்ட மத்தியின் குறைபாடு" [Paul Hiebert, "The Flaw of the Excluded Middle," Missiology 10:1 (1982): 35-47]

[11] மேலதிக வாசிப்புக்கு பார்க்க: டீன் ஹல்வேர்ஸன், "ஆவியியல்: குலவின உலகினரின் மதம்" [Dean Halverson, "Animism: The Religion of the Tribal World" IJFM 15:2 (1998): 59-67]; கெய்லின் வன் ரீனன், ஆவியியல் பின்புலங்களிலே கிறிஸ்துவைத் தொடர்பாடல் செய்தல்" [Gailyn Van Rheenen, Communicating Christ in Animistic Contexts (Pasadena, CA: William Carey Library, 1996)]; போல் ஹிபேட், டானியல் ஷோ, மற்றும் ரிற் ரியனோ, கிராமிய மதத்தைப் புரிந்துகொள்ளுதல் [Paul Hiebert, Daniel Shaw, and Tite Tienou, Understanding Folk Religion (Grand Rapids, MI: Baker Academic, 2000)].

[12] சனத்தொகை மற்றும் மதம் பற்றிய புள்ளிவிபரம் ரொட் ஜோன்ஸன் மற்றும் கென்னத் ரொஸ் பதிப்., அகிலாண்ட கிறிஸ்தவ உலகப்படம் [Todd Johnson and Kenneth Ross, eds., Atlas of Global Christianity (Edinburgh University Press, 2009)] இலே உள்ள தரவிலிருந்து தொகுக்கப்பட்டது. தென் அமெரிக்காவுக்கு "கிறிஸ்தவன்" என்பது சுவிசேஷக மற்றும் பரவச கிறிஸ்தவர்களை (அவர்கள் ரோமன் கத்தோலிக்கர் அல்லது புரட்டஸ்தாந்தியர்கள்) உள்ளடக்கிய, எனவே பெயரளவிலான எண்ணிக்கைகளை விலக்கிவைக்கிறது. சாமுவேல் ஹன்ரிங்டன், நாகரீகங்களின் மோதலும் உலக ஒழுங்கின் மீளமைப்பும் [Samuel Huntington, The Clash of Civilizations and Remaking of World Order (New York: Simon & Schuster, 1997)]; றிச்சட் லூவிஸ், கலாச்சாரங்கள் முட்டிமோதும்போது [ Richard Lewis, When Cultures Collide, 3rd ed. (Boston, MA: Nicholas Brealey Publishing, 2005)].

[13] மேலதிக வாசிப்புக்கு பார்க்க: ஜேஸன் போர்கெஸ், "மாண்பேற்றப்பட்டது: தெய்வீக கனமேன்மையின் ஒரு விதப்புரை மீட்பியல்" [Jason Borges, "'Dignified': An Exegetical Soteriology of Divine Honour," Scottish Journal of Theology 66:1 (2013): 74–87]; ஜேஸன் ஜோர்ஜஸ், "அவமானத்தில் இருந்து கனமேன்மைக்கு: கனமேன்மை–அவமான பின்புலங்களுக்கான ரோமர் நூலின் ஒரு இறையியல் வாசிப்பு [Jayson Georges, "From Shame to Honor: A Theological Reading of Romans for Honor-Shame Contexts," Missiology 38:3 (2010): 295–307]; எட்வேட் வெல்ஸ், "அவமானத் தடங்கல்: பொருட்டற்ற நிராகரிக்கப்பட்ட மக்களின் வேதனையைத் தேவன் எப்படி உயர்த்துகிறார் [Edward T. Welch, Shame Interrupted: How God Lifts the Pain of Worthlessness and Rejection (Greensboro, NC: New Growth Press, 2012)]; வேர்னர் மிஷ்கெ, அகிலாண்ட சுவிசேஷம் [Werner Mischke, The Global Gospel (Scottsdale, AR: Mission ONE, 2015)]. வேதாகம சம்பவங்களை கனமேன்மை–அவமானம் மொழிநடையில் வழங்கும் சுருக்கமான வீடியோக்களுக்கு, ஜக்ஸன் வூ இன் "தேவன் முகத்தை நாடுகிறவரா?" ["How Does God Seek Face?" by Jackson Wu] மற்றும் வெப்தளத்தின் "தேவனுடைய கிராமத்துக்குத் திரும்புதல்" ["Back to God's Village" by HonorShame.com] ஆகியவற்றைப் பார்க்கவும். இரண்டும் YouTube.com இலே கிடைக்கும்.

[14] மேலதிக வாசிப்புக்கு பார்க்க: ரொம் ஜூலியன், மூன்று கொள்கைகள்: தென்படாத உலகின் முகத்திரையை உயர்த்துதல் [Tom Julien, The Three Princes: Lifting the Veil on the Unseen World (Winona Lake, IN: BMH, 2011)]; ட்றெம்பர் லோங்மன், "தெய்வீக படைவீரர்: ப.ஏ, யுக்தியின் பு.ஏ. பயன்பாடு [Tremper Longman III, "The Divine Warrior: The NT Use of an OT Motif," Westminster Theological Journal 44 (1982): 290-307].

[15] ரிமதி ரென்னற், உலகக் கிறிஸ்தவத்தின் பின்புலத்திலே இறையியல்: அகிலாண்ட சபை நாம் இறையியலைப் பற்றிச் சிந்திப்பதிலும் கலந்துரையாடலிலும் எப்படிச் செல்வாக்குச் செலுத்துகிறது [Timothy Tennent, Theology in the Context of World Christianity: How the Global Church Is Influencing the Way We Think about and Discuss Theology (Grand Rapids, MI: Zondervan, 2007), 92].

[16] மேலதிக வாசிப்புக்கு பார்க்க: ஜோயல் கிறீன் மற்றும் மார்க் பேக்கர், சிலுவையின் அவதூறை மீளக்கண்டுகொள்ளல்: புதிய ஏற்பாட்டில் பரிகாரபலியும் தற்காலச் சூழ்நிலைகளும் [Joel Green and Mark Baker, Recovering The Scandal of the Cross: Atonement in the NT and Contemporary Contexts, 2nd ed. (Downers Grove, IL; InterVarsity Press, 2011)]; J I பக்கர், குற்றத்தீரப்பு பிரதியீட்டின் வாதம் [J.I. Packer, The Logic of Penal Substitution, (Fig, 2012)].

[17] ஜக்ஸன் வூ, தேவனுடைய முகத்தை மீட்டிடுதல்: கனமேன்மை மற்றும் அவமானத்தினூடாக இரட்சிப்புப் பற்றிய சீனப் பன்புலமயமாக்கம் [Jackson Wu, Saving God’s Face: A Chinese Contextualization of Salvation Through Honor and Shame (Pasadena, CA: William Carey, 2012)].

[18] மூன்று சொற்பதத் தளங்களும் ரொம் ஸ்ரெஃபன் இன் பதிப்பிக்கப்படாத கட்டுரையில் இருந்து அனுமதியுடன் பெற்றுக்கொள்ளப்பட்டது [The 3 semantic fields were adapted with permission from an unpublished paper of Dr. Tom Steffen]. மேலதிக வாசிப்புக்கு, கிரேக் ஒற், "சுவிசேஷத்தைப் பின்புலமயமாக்குவதற்கு வேதாகம உவமேயங்களின் வல்லமை" [Craig Ott, “The Power of Biblical Metaphors for Contextualizing the Gospel,” Missiology 42:4 (2014): 357-374]

[19] மேலதிக வாசிப்புக்கு பார்க்க: நீல் அன்டெர்ஸன் மற்றும் ரிமதி வார்னர், ஆன்மீகப் போருக்கான கத்துகுட்டிகளின் வழிகாட்டி [Neil Anderson and Timothy Warner, Beginner’s Guide to Spiritual Warfare (Ventura, CA: Regal, 2008)]; கிளின்ற் ஆர்னல்ட், ஆன்மீகப் போர் பற்றிய 3 அதிமுக்கியக் கேள்விகள் [Clint Arnold, 3 Crucial Questions about Spiritual Warfare (Grand Rapids, MI: Baker Academic, 1997)]; டஃவ் ஹேவட், ஆவியியலாளர்களை சுவிசேஷகமயப்படுத்தல்: வல்லமை, சத்தியம் அல்லது அன்பு இடைப்படுதலில் எது? [Doug Hayward, “The Evangelization of Animists: Power, Truth or Love Encounter?” IJFM 14:4 (1997): 155-159].

[20] கிறிஸ்டோபர் ஃபிளான்டர்ஸ், முகம் பற்றி: 21ம் நூற்றாண்டின் தூதுப்பணிக்காக முகத்தை மீளவும்யோசித்தல் [Christopher L. Flanders, About Face: Rethinking Face for 21st Century Mission (Eugene, OR: Wipf & Stock Pub, 2011)].

[21] றொபேட் லூப்ரன், நச்சுத்தனமான தர்மம்: சபைகளும் தர்மப்பணிகளும் உதவுகிறவர்களை எப்படிக் காயப்படுத்துகிறார்கள்: எப்படி அதனை மாற்றியமைப்பது [Robert D. Lupton, Toxic Charity: How Churches and Charities Hurt Those They Help, And How to Reverse It (New York, NY: HarperOne, 2012)]; ஸ்ரீவ் கோர்பெற் மற்றும் பிறயன் ஃபிக்கெற், உதவுவது நோகும்போது: வறியவர்களை... உங்களையுந்தான் காயப்படுத்தாமல் வறுமையை ஒழிப்பது எப்படி [Steve Corbett and Brian Fikkert, When Helping Hurts: How to Alleviate Poverty Without Hurting the Poor . . . and Yourself (Chicago, IL: Moody Publishers, 2012)]

[22] "நம்பிக்கையின் மிதக்கும் சிகிச்சைநிலையம் (Floating Hospital of Hope)", 60 நிமிடங்கள், பெப்ரவரி 18, 2013, http://www.cbsnews.com/videos/the-floating-hospital-of-hope/ இதன் குறுகிய வாசகம் https://www.youtube.com/watch?v=Xl-xDKZrnJQ இலே பார்க்கவும்

[23] டுவேன் எல்மோர் என்பவரின் அதிசிறந்த நூலான கலாச்சாரங்களிடையே முறுகல் [Duane Elmer, Cross-Cultural Conflict (Downers Grove, IL: InterVarsity Press, 1993)] நூலானது கனமேன்மை–அவமானம் பின்புலங்களிலே முரண்பாடுகளைக் கிறிஸ்தவர்கள் எப்படி விவேகமாகத் தீர்க்கலாம் என்பதற்கு உதவியாக உள்ளது.

[24] ரென்னன்ற், உலக கிறிஸ்தவப் பின்புலத்திலே இறையியல் [Tennent, Theology in the Context of World Christianity, 97-99.].

[25] மாற்றென் விஸர், தாய்லாந்தில் உள்ள பெந்தெகொஸ்தே சபைகளின் மனமாற்ற வளர்ச்சி [Marten Visser, Conversion Growth of Protestant Churches in Thailand (Zoetermeer, 2008), 123].

[26] மேலதிக கற்கைக்கு, பார்க்க: "3D சுவிசேஷம்" [“3D Gospel,” Hope Church (Oakdale, MN), March 16, 2014, http://www.hopechurchoakdale.com/2014/03/3d-gospel-march-16-2014/] பிறெனே பிறவுன், "அவமானத்துக்குச் செவிகொடுத்தல் [Brene Brown, “Listening to Shame”, TED, March 2012, http://www.ted.com/talks/brene_brown_listening_to_shame]